Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර
பக்கம் 24
ரூபா: 30.00
டிசம்பர் 10 - 16, 2015
முரசு 1147

# தினமுரசு வாரமலர்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

## இதுக்குத்தானா ஆசைப்பட்டோம்




## எதுக்கு வீணா தேசிய அரசைக் காதலிச்சோம்?





## விக்கி தலைமையில் விளையாடுமா? புதிய அணி

## சென்னையில் சிந்திய நீர் காலநிலை மாநாட்டின் சந்நிதிக்கு வந்தது!



## பெண்கள் விரும்பும் ஆண் உருவம் எது?

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## ௐ வலம்புரிச் சங்கின் மகிமை

ஆண், பெண் ஆகியோருக்கு இருக்கும் திருமண தோசம், செவ்வாய் தோசம் ஆகியன நீங்க வலம்புரிச் சங்கில் பசும்பால்விட்டு 27 செவ்வாய்க்கிழமை அம்மனை பூஜித்துவந்தால் அந்த தோசம்நீங்கி திருமணம் நடைபெறும் என்கிறார்கள்.

இந்த வலம்புரி சங்கினை தரையில் வைக்கக்கூடாது. சங்கிற்கு சந்தனம், குங்குமம் வைத்து பித்தளை அல்லது வெள்ளித்தாம்பாளத்தில் வைக்கவேண்டும். எவர்சில்வர் தட்டில் வைத்து வழிபடலாம். அத்துடன், செல்வத்திற்கு அதிதெய்வமான மகாலட்சுமி பிறந்த ஆடிமாதம் பூர நட்சத்திரத்திலும், இந்திரன் லட்சுமியை வணங்குகிற புரட்டாசி பௌர்ணமியிலும், ஆனி மாதம் சுக்லபட்சம்கூடிய அஸ்டமியிலும், சித்ரா பௌர்ணமியிலும் வலம்புரிச்சங்கில் பசும்பால் வைத்து மலர்களால் சங்கினையும், லட்சுமியையும் அலங்கரித்து, சந்தனம் குங்குமம் இட்டு அதிரசம், லட்டு ஆகியவைகளை பசு நெய்யில் செய்து பால் பாயாசம் செய்து பசுநெய் ஊற்றி விளக்கேற்றி பூஜை செய்ய வேண்டும்.

இப்படிச் செய்தால் எல்லா வித செல்வங்களும் வந்துசேரும். இதுதவிர செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் சங்கிற்கு பூஜை செய்யலாம். ஒவ்வொரு நாளும் சங்கில் தண்ணீர்விட்டு அதில் துளசி, வில்வக்கட்டை, ஏலக்காய், பச்சைக்கற்பூரம், குங்குமம், பூ சேர்த்து பூஜை செய்துவிட்டு அதில் சிறிது நீரைக்குடித்துவிட்டு, சிறிது நீரை வாசற்படியில் தெளிக்கவும்.

இப்படி 90 நாள் செய்தால் திருஷ்டி, போட்டி பொறாமை நீங்கும். வலம்புரிசங்கு இருக்கும் வீட்டில் துர்தேவதைகள் நெருங்காது. இச்சங்கில் தண்ணீர்விட்டு பூஜைசெய்து அதை அருந்தினால் வியாதிகளும் குணமடையும். மாமிச உணவருந்திய தினங்களிலும், பெண்கள் மாதவிலக்கான நாட்களிலும் வலம்புரிச் சங்கைத் தொடக்கூடாது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆன்மீகம்

## மந்தம் அடையும் உள்ளங்கள்!

இயேசுவின் சீடர்களுக்கு இன்றைய நற்செய்தி வாசகம் தெளி-வான எச்சரிக்கையைத் தருகிறது. அவர்களது உள்ளங்கள் மந்தம் அடைவதற்கான மூன்று காரணிகளை இயேசு சுட்டிக்காட்டுகிறார்: 1.குடிவெறி 2. களியாட்டம் 3. இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலைகள். இந்த மூன்றிலும் ஈடுபடுபவர்கள் இறையாட்சியில் பங்கேற்கமுடியாது என்பதை இயேசு தெளிவுபடுத்துகிறார். குடிவெறி என்பது நிச்சயமான மந்தப் பொருள். அது உடலையும், உள்ளத்தையும் மட்டுமல்ல ஆன்மாவையும் மந்தப்படுத்துகிறது.

களியாட்டம் என்பதோ தேவைக்கதிகமான பொழுதுபோக்கு, உல்லாசம். பயணம், தொலைக்காட்சி, விளையாட்டு முதலியவற்றைக் குறிக்கிறது. எப்போது இவை நம் வாழ்வின் பெரும் பகுதியை எடுத்துக்கொள்கின்றனவோ, அல்லது இறைவனிடமிருந்து நம்மைப் பிரிக்கின்றனவோ, அப்போது பொழுதுபோக்குகளும், மகிழ்ச்சிச் செயற்பாடுகளும்கூட களியாட்டமாக மாறிவிடுகின்றன. உலக வாழ்க்கைக்குரிய கவலைகளில் சொந்தமாக வீடு கட்டுவது, பதவி உயர்வு, வங்கியில் பணம்சேர்ப்பது, குடும்பக் கவலைகள் அனைத்தும் சேரும். இவை எப்போது வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் எடுத்துக்கொள்கின்றனவோ, அல்லது இறைவனிடமிருந்து நம்மைப் பிரிக்கின்றனவோ, அப்போது உலகக் கவலைகளும் நம்மை மந்தப்படுத்தும் பட்டியலில் சேர்ந்துவிடுகின்றன. நம் வாழ்வைக் கொஞ்சம் ஆய்வுசெய்து, குடிவெறி, களியாட்டம், உலகக் கவலைகள் நம் அகவாழ்வை மந்தப்படுத்தியுள்ளனவா என்று கண்டறிவோம். ஆம் என்றால், இவை மூன்றிலிருந்தும் விடுபட்டு, இறைப்பாதம் சேர்வோம்.

## இரண்டு கடமைகள்

இஸ்லாம் மனிதக் கடமைகளை, "அல்லாஹ்வுக்குச் செய்யவேண்டிய கடமைகள்" என்றும் "மனிதன் மனிதனுக்குச் செய்யவேண்டிய கடமை-கள்" என்றும் இருகூறுகளாகப் பிரித்துக்காட்டி, அவ்விரண்டில், மனிதன் அல்லாஹ்வுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் கூடுதல் குறைவு சம்பவித்துவிடுமானால் அதை அந்த வல்லவன் மன்னித்துப் பொறுக்கவும் கூடும். ஆனால் மனிதன் மனிதனுக்குச் செய்யவேண்டிய கடமை-களில் குற்றம் குறை ஏற்பட்டால் அதைப் பாதிக்கப்பட்டவன் பொறுக்காதவரை அல்லாஹ்வும் பொறுக்கமாட்டான். யாரும் யாருக்கேனும் அநியாயம் செய்து அதனால் பாதிப்பு ஏற்பட்டால் பாதிக்கப்பட்டவனின் மனக்குமுறல் அநியாயம் செய்தவனை சாம்பலாக்கிவிடும் என்று கூறப்படுகிறது.

**முஹம்மது ஹஸனி, கல்முனை -07**



## காவலன்

அழகு சொரியப்  
பூத்துக் குலுங்கும் - இள(ம்)  
மலர்களைப் பார்த்துப்  
புன்னகைக்கின்றேன்  
பதிலுக்கு அம்மலர்கள்  
மணம் பரப்புகின்றன  
சுகர்ந்த மணத்தை  
நுகர்ந்த என்மன வண்டு  
ஆசைச் சிறகு கட்டி  
மலர்களின் மேல்  
வட்டமிடுகின்றது  
இன்பத் தேன் குடிக்க...  
"இது மலரினத்திற்கும்  
வண்டினத்திற்குமே (தான்)  
ஒட்டு - எங்கள்  
பெண்டினத்திற்கும்  
பேராண்மையாளருக்கும் - இது  
ஒட்டில்லை!  
துண்டிக்கப்பட வேண்டுமெனக்  
கண்டிக்கிறேன் உனை!" என  
என்னை எச்சரிக்கின்றான் - அந்தப்  
பூந்தோட்டக் காவலன்.

பாண்டியூர்  
பொன். நவநீதன்

## தேன் கிண்ணம்

## உன் உதடா சொன்னது?

அன்பே என்றும்  
கண்ணே என்றும்  
செல்லம் என்றும்  
காதலி என்றும்  
மற்றவர்களை மாதிரி  
நான் இல்லை  
அவர்களை மாதிரி  
என்னை நினைக்காதே  
என்றும்  
நான் உன்னை  
கண் கலங்காமல்  
கால மெல்லாம்  
சந்தோசமாக  
வைத்திருப்பேன் என்றும்  
நீ அழுதால் நான்  
தாங்கமாட்டேன்  
அதை நினைத்தாவது  
சந்தோசமாக இரு  
என்றும்  
நீ எவ்வளவு  
வசதியாய் இருக்கின்றாயோ  
அதைவிட வசதியாய்  
நான் உன்னை  
வைத்திருப்பேன்  
என்றும் - இன்னும்  
ஏதேதோ செல்லம் கொஞ்சிய  
உன் உதடா  
இன்று என்னை  
போடி என்றும்  
நீ வேண்டாம் என்றும்  
உன்னை எனக்குப்  
பிடிக்கவில்லை என்றும்  
உன்னைவிட எனக்குத்  
தகுதியானவள் இங்கு  
இருக்கிறாள் என்றும்  
சொன்னது...

வன்னி மகள் S.றெசிந்தா,  
சாங்கத்தார்வயல்.



## நெப்போலியன் தேசத்தில் நெருப்பூட்டியது யார்?

அணுகுண்டு தேசத்தில்  
வெடிகுண்டு வைத்தது யார்?  
வீட்டோ பவர் கொண்டவனை  
வீழ்த்த நினைத்தது யார்?  
பாசவாதிகள் நிறைந்த தேசத்தை  
நாசவாதிகள் சிதைத்ததென்ன?  
பாரிசின் நகருக்கு குருதியை  
பரிசாய் கொடுத்ததென்ன?  
திறமைவாதிகள் கொண்ட நகரில்  
தீவிரவாதிகள் புகுந்ததேனோ?  
வெள்ளைமாந்தர் செங்குருதியை  
வீணே ஓட வைத்ததேனோ?  
பட்டினியால் உலகு பரிதவித்தபோது  
பாரிசும்தானே  
அரிசி போட்டது.  
சமாதானப்பயிர் வளர்க்க  
அதுவும்தானே உரம் இட்டது.  
உலக உணவுத் திட்டத்துக்கும்  
ஊட்டச்சத்து பணியதற்கும்  
இவர்கள் கரங்களும்தானே  
ஏராளம் இடுகிறது.  
அந்தக் கரங்களில்  
மலர்களை வையாமல் - வெடி  
மருந்துகளை வைத்தவன் யார்?  
ஆயுதக் கரங்களின்  
அழிப்பின் இலக்கில்  
அகிம்சைக்கரங்கள் சிக்கியதேனோ?  
சாப்பாட்டு விடுதியை  
சடல விடுதி ஆக்கியவனே..  
கால்பந்து மைதானத்தில்  
உயிர்ப்பந்து ஆடியவனே  
படமாளிகை தன்னை  
வெறுமாளிகை ஆக்கியவனே..  
ஈபிள் கோபுர மண்ணை  
தீயில்போட்டு சிதைத்தவனே  
மூளைச்சலவை செய்வதெல்லாம்  
உயிர்ச்சலவை செய்யத்தானா?  
ஐரோப்பிய காவல்துறையிடம்  
அகப்படாமல் போகலாம்  
ஆண்டவரின் அகோரப்பிடியில்  
எப்படி நீ தப்பலாம்???

பிரான்ஸ் மீதான தீவிரவாத தாக்குதல்  
செய்திகேட்டு எழுதியது....

யோ. புரட்சி, வன்னுவர்புரம்.

## வாசகர் சாலை


### வாழட்டும் வளரட்டும்

தினமுரசே! உனது புதுவடிவம், புதுஅமைப்பு வாசகராகிய எமக்கு புத்தூக்கமதை தருகின்றது.

நீ பல்லாண்டு வாழ்ந்து பல நிகழ்ச்சி நிரல்களை நிறுவுவாய் என்பது எம் அசைக்கமுடியாத நம்பிக்கை. உன்னில் தொடரும் தேன்கிண்ணம், சிறுகதை, கட்டுரை அனைத்தும் சிறப்பானது. அதை எழுதும் எழுத்தாளர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

தொடர்ந்து செல் உன் சேவையை நிச்சயம் அது என்றும் தரும் பல உள்ளங்களுக்கு மகிழ்வை! வாழட்டும், வளரட்டும் தம் தரமான பத்திரிகை வாழ்த்துக்கள்.

**றவீனா அன்சார், யாழ்ப்பாணம்.**



## டிசெம்பர் - 10

இன்று செய்ய  
வேண்டியதை நாளைக்குப்  
பார்த்துக்கொள்வோம்  
என்று தள்ளி வைக்காதே.  
உதிக்கும் சூரியன்  
இதுவரை அப்படி  
நினைத்ததேயில்லை.

சைரஸ்

# யோஷித்தவைப் பாதுகாக்கும் நோக்கில் அரசியலில் இருந்து ஓய்வுபெற மஹிந்த தீர்மானம்?



யோஷித்த ராஜபக்ஷவைப் பாதுகாக்கும் நோக்கில் அரசியலில் இருந்து ஓய்வுபெற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக தெரியவந்துள்ளது. பிரபல ரகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் படுகொலைச் சம்ப வத்தில் யோஷித்த ராஜபக்ஷ நேரடியாக தொடர்புபட்டிருப்பதற் கான சாட்சியங்கள் வெளிவரத் தொடங்கியிருப்பதை அடுத்து மஹிந்த ராஜபக்ஷ இந்த முடிவை எடுத்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் மூத்தபுதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜ பக்ஷ அண்மையில் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவுடன் இதுதொடர்பான பேச்சுவார்த்தை யொன்றை மேற்கொண்டுள்ளார். வசீம் தாஜுதீனின் படுகொலைச் சம்பவத்தின் குற்றச்சாட்டிலிருந்து தனது தம்பி யோஷித்தவையும், சிரிலிய சவிய அமைப்பின் நிதிமோசடிக் குற்றச்சாட்டுகளில் இருந்து தனது தாய் ஷிரந்தியை யும் பாதுகாப்பது தொடர்பிலான உத்தரவாதமொன்றை ஜனாதிபதி யிடமிருந்து பெற்றுத்தருமாறு நாமல் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறான உத்தரவாதம் கிடைக்கும்பட்சத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சுதந்திரக் கட்சியின் செயற்பாடு களை எதுவித இடையூறுகளும் இல்லாது முன்னெடுத்துச் செல்ல வழிசெய்யும்வகையில் மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் செயற்பாடுகளிலிருந்து ஓய்வுபெற்றுக்கொள்வார் என்றும் நாமல் உறுதியளித்துள்ளார். இதற்கான நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்தும் வகையிலேயே வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பின் போது மஹிந்த வாக்களிப்பதில் இருந்தும் தவிர்த்துக் கொண்டுள்ளார்.

தற்போது மஹிந்தவின் கோரிக்கை தொடர்பில் சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர் களிடமிருந்து ஆதரவையும், ஜனாதிபதியின் உத்தரவாதத்தை யும் பெற்றுக்கொள்ளும்வகையில் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டு உள்ளமை குறித்தும் தெரிய வந்துள்ளது.

# வடமாகாண மக்களின் துன்பத்திற்கு உதவாத நிதி தமிழகத்திற்கு ஏன்?

## இந்திய துணைத்தூதரகம் முற்றாக நிராகரித்துள்ளது



தமிழக உறவுகளிற்கு எந்தவொரு உதவியும் தேவையில்லையென இலங்கையிலுள்ள இந்திய துணைத் தூதரகம் முற்றாக நிராகரித்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமாகாண முதலமைச்சரிடம் இலங்கையிலுள்ள இந்தியத்தூதரால் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ள பாதிப்பிற்குள்ளாகியிருக்கும் தமிழக உறவுகளிற்கு உதவுவது தொடர்பில் அண்மையில் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தனது அமைச்சர் களுடன் ஆலோசித்திருந்தார். அதன் தொடர்ச்சியாக இந்திய தூதரைத் தொடர்புகொண்டு எத்தகைய உதவிப்பொருட்களை ஒப்படைத்தால் அதனை தமிழகத்திற்குக் கொண்டு சென்று சேர்ப்பிக்க முடியுமென கோரப்பட்டிருந்தது.

எனினும் எத்தகைய உதவி பொருட்களும் தேவையில்லையென முகத்திலடித்தது போன்று பதிலளித்துள்ள இந்தியத் தூதர் எதனையும் பொறுப்பேற்கவோ அவற்றினை தமிழ்நாட்டிற்கு எடுத்துச்சென்று சேர்ப்பிக்கவோ தமது அலுவலகம் தயாராக இல்லையென தெரிவித்துமுள்ளார். அவ்வாறாயின் நிதி உதவியையாவது ஏற்கவேண்டுமென்ற முதலமைச்சரது கோரிக்கையினை பரிசீலிப்பதாகத் தெரிவித்திருந்தபோதும் அதனை பற்றி பின்னர் தகவல்கள் இல்லையென முதலமைச்சர் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெள்ள அவலங்களினை சந்தித்துள்ள தொப்புள் கொடி உறவுகளிற்கு உதவ தன்னார்வமாக பொருட்களை சேகரித்துவரும் நிலையில் இத்தகைய அறிவிப்பு பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இத்தகைய அவலநிலையிலும்கூட தூதரக அதிகாரிகளதும் இந்திய அதிகார தரப்பினதும் மனோநிலை மாறியிருக்கவில்லையாவென கேள்வி எழுந்துள்ளது.

இதேவேளை வடக்கு உள்ளிட்ட பல பகுதிகளில் வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்தும் மழையால் பெருமளவு மக்கள் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டும் இருக்கும் போது அவர்கள் தொடர்பாக வடக்கு மாகாணசபை எந்தவித அக்கறையும் கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழக மக்களுக்கு உதவுவதற்காக எனக் கூறி நிதி, பொருட்களைக் கொள்ளையடிப்பதற்கு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட்ட முக்கியஸ்தர்கள் ஆயத்தமாகிவருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

## முதல்வர் விக்கியை தமிழ் தேசிய கைக்கூலிகள் கொல்லும் ஆபத்து



தமிழ் தேசிய கைக்கூலிகள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை படுகொலை செய்யக்கூடிய பேராபத்து நிலவுகின்றது என்று பேஸ்புக் சமூக இணைப்பு தளத்தில் கருத்து பதிவேற்றி உள்ளார் ஐக்கிய தேசிய கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் தியாகராசா துவாரகேஸ்வரன்.

## எச்.ஐ.வி தொற்றுக்குள்ளான 20 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்: சுகாதார அமைச்சர்

எச்.ஐ.வி நோய் தொற்றுக்குள்ளான 20 மாணவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்துள்ளார். அந்தவகையில் நாட்டில் இதுவரை 2265 பேர் எச்.ஐ.வி நோய் தொற்றுக்குள்ளாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை, உயர்தரத்தில் கல்விகற்பதற்கு சுகாதார பாடத்தில் சித்தியடைவது கட்டாயமாக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் ராஜித்த சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.


தினமுரசு பத்திரிகையில் உங்கள் ஆக்கங்களும் வரவிரும்புவர்கள் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி.

**தினமுரசு வாரமலர்,**
**மாநகரசபை கட்டடம்,**
**3 ஆம் மாடி,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**



தினமுரசு வாரமலரில் உங்கள் விளம்பரங் களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கத் தொடர்பு கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு: 0214503262, 0774150799**



## கொலையாளி உள்ளிருக்க குற்றவாளியை வெளியில் தேடும் விஜயகலா




**நீதிமன்றத் தீர்ப்பின்மூலம் மகேஸ்வரனின் கொலைக்குற்றவாளி என சாட்சிகளோடு கைது செய்யப்பட்டு சிறைக்குள் இருக்கும் ஜோண் கொலின் வலன்ரைன்.**

# போலிக் குற்றச்சாட்டுகளுக்காக தலை குனிந்தவர்களல்ல நாம்!

டக்ளஸ் தேவானந்தாவின் ஊடக அறிக்கை



## எம் இனிய மக்களே!

அன்று தொட்டு இன்றுவரை நாம் மக்கள்மீது கொண்டுள்ள இடையறாத பற்றையும் ஈடுபாட்டையும் உறவுகளையும் துண்டிக்க வேண்டும் என்கின்ற காழ்ப்புணர்ச்சியினால் திட்டமிட்ட பல அவதூறுகளை எம்மீது சிலர் பரப்பிவருதை நீங்கள் அறிவீர்கள்.

அரசியல் அதிகாரங்களை தக்கமுறையில் எம்மக்களுக்காக பயன்படுத்தி எமது அரசியல் பலத்திற்கு ஏற்றவகையில் முடிந்தளவு எமது மக்களை மகிழ்ச்சிப்படுத்தியவர்கள் நாம் மட்டும்தான் என்பதை உள்ளுணர்வுரீதியாக ஒவ்வொரு தமிழ் மகனும் புரிந்துகொள்வான்.

இதைப் சகிக்கமுடியாத செயலூக்கமற்ற சில சுயலாப அரசியல்வாதிகளே எம்மையும் மக்களையும் பிரித்து எம்மை அரசியல் அரங்கில் இருந்து அகற்றிவிடலாம் என்று கனவுகண்டு வருகின்றனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் கொலைதொடர்பான கொலைக்குற்றவாளி கையும்மெய்யுமாக கைது செய்யப்பட்டநிலையிலும், அவர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டதை சகலரும் அறிந்திருந்த நிலையிலும் தொடர்ச்சியாக அக்கொலைக்கான பழியை திட்டமிட்டு எம்மீது சுமத்த எத்தனிப்பது முழுப்பூசணிக்காயை சோற்றில் புதைக்க எத்தனிப்பது போலாகும்.

அந்த நீதித்தீர்ப்பு தவறு என்று கருதினால் இன்று அமரர் மகேஸ்வனுக்காக நீலிக்கண்ணீர் வடிப்பவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தை அன்றே நாடியிருக்கலாம், அல்லது ஆட்சி மாற்றத்திலாவது மேன்முறையீட்டு நீதிமன்றத்தை நாடியிருக்கலாம்.

சட்டமும் நீதியும் உண்மைகளை கண்டறிவதற்கு சாதகமாக இருக்கும்போது, அதைவிடுத்து தமது வாழ்நாள்பூராகவும் தமது சுயலாப அரசியல் இருப்பைத் தக்கவைப்பதற்காகவும் தனது வியாபாரத்தைத் தொடர்வதற்காகவும் தொடர்ந்தும் கூக்குரல் எழுப்பிவருவது போலித்தனமான காரியம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் அவர்களின் ஐந்து சகோதரர்களையும் அழைத்து விசாரணை செய்தால் உண்மை மீண்டும் உறுதிப்படுத்தப்படும்.

ஆகவே இக்கொலை தொடர்பில் விசேட விசாரணைக் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டு வெளிக்கொண்டு வரப்படவேண்டுமென்பது கட்டாயதேவையாகும்.

அன்று எம்மீது சுமத்தப்பட்ட திட்டமிட்ட பல அவதூறு களுக்கும் பழிசுமத்தல்களுக்கும் இன்று விடைகிடைத்து வருகின்றது. நீதி விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மையான குற்றவாளிகள் இனங்காணப்பட்டுவருவதால் வரலாறு எம்மை விடுதலை செய்துவருகின்றது.

அச்சுறுத்தல்கள் மத்தியிலும் தமிழ்மக்களின் சாத்தியப்பாடான எதிர்காலக் கொள்கைகளிற்காக அன்றிலிருந்து இன்றுவரை குரல் கொடுத்துக்கொண்டிருப்பவர்களும் அதற்காக உழைத்துக் கொண்டிருப்பவர்களும் நாம்.

அதனால் பாரிய உயிர்ச்சேதங்கள் பலவற்றைக்கூட நாம் சந்தித்துள்ளோம். அன்று ஓடி ஒளித்தவர்களும், ஒன்றிணைந்து எம்மினத்தை அழித்தவர்களும் சுரண்டியவர்களும்தான் இன்று எம்மீது பொய்க்குற்றச்சாட்டுக்களைக் கூறிக்கொண்டு இருக்கின்றார்கள் என்பதை மக்கள் முதலில் தெளிவாக புரிந்து கொள்வார்கள் என்பது எமது நம்பிக்கை.

**நீராகக்கரைந்து போவதற்கு நாங்கள் ஆற்றில் விழுந்த உப்புக்கல் அல்ல! மாறாக நாங்கள் காற்றிலும் கடும்புயலிலும் எழுந்து நடந்து சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளையும் தொடர்ந்து வரும் தூற்றலையும் ஆற்றலால் எதிர்கொண்டு மக்கள் என்ற சமுத்திரத்தில் என்றும் மீன்களாக இருப்பவர்கள்.**

**டக்ளஸ் தேவானந்தா,**
**பாராளுமன்ற உறுப்பினர்.**

தினமுரசு
வாரமலர்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811, 0214503262
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## சுயமாக சிந்தியுங்கள்
### சுதந்திரம் முதலில் எமக்குள் பிறக்கட்டும்

வரவு-செலவுத்திட்டம்மீதான விவாதம்நாடாளுமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. எதிர்வரும்19ஆம்திகதி வாக்கெடுப்பு நடைபெற இருக்கின்றது. இத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கியமை தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு அங்கத்துவ கட்சிகளிடையே முரண்பாடு தோன்றியுள்ளன. இதன் பின்னணியில் பட்ஜெட்டை ஆதரிக்கவேண்டிய தேவை தொடர்பாக சம்பந்தர் பங்காளிக் கட்சிகளிற்குத் தெளிவு படுத்தியுள்ளார்.

இலங்கையில் புதிய அரசாங்கத்தினால் முன்வைக்கப் பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தை தற்போதைய சூழ்நிலையில் ஆதரிக்கவேண்டிய தேவை இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார். "வரவு - செலவுத் திட்டத்தை விமர்சிக்கலாம். அதற்காக அதனை எதிர்க்கவேண்டிய தேவை இல்லை" என வலியுறுத்தி கூறினார்.

"கடந்த காலங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்கவில்லை. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் நிதானமாக பக்குவமாக நடந்து கொள்கின்றார்கள் என்பதை சர்வதேசத்துக்கு காட்டவேண்டிய தேவை உள்ளது" என அவர் தெரிவித்துள்ளார்.

"நீண்ட பயணமொன்றை பயணித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் அவசரப்பட்டு அரசுடனான தொடர்புகளை துண்டித்து விடமுடியாது" என்றும் குறிப்பிட்டார் இரா.சம்பந்தன் .

அதன் இரண்டாம் வாசிப்புமீதான வாக்கெடுப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம்பெறும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி, புளொட் மற்றும் ரெலோ ஆகிய கட்சிகள் ஆதரவாக வாக்களித்தன.

ஈ.பி. ஆர். எல். எப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். ஈ.பி.ஆர்.எல்.எப் எடுத்துள்ள இதே நிலைப்பாட்டை இறுதி வாக்கெடுப்பின்போது ரெலோவும் எடுக்க தற்போது தீர்மானித்துள்ளது. சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் அரசாங்கம் இறுதி வாக்கெடுப்புக்கு முன்னதாக தீர்க்கமான முடிவை அறிவிக்க வேண்டும் என ரெலோ எதிர்பார்க்கின்றது. அப்படியான முடிவு வெளிவராவிட்டால் தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் இறுதி வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்களிக்கமாட்டார்கள் என்கின்றார் ரெலோ செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன். இந்த முடிவை தமது கட்சியின் பொதுச் சபை எடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிடுகின்றார். மறுபுறத்தில் "வரவு - செலவுத் திட்டத்தின் 3ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு புறக்கணிக்கப்படும்" என செல்வம் எம்.பி தெரிவித்துள்ளார்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை அரசாங்கம் விடுதலைசெய்ய தவறும் பட்சத்தில் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பை புறக்கணிக்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்மந்தனிற்கு அறிவித்துள்ளார். எதிர்வரும் 19ஆம் திகதி வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவராக ஏன் சம்பந்தரை ரணில் தெரிவு செய்தார் என்பது இதன்மூலமேனும் தமிழ்மக்களிற்கு தெளிவாக தெரியவேண்டும். தமிழ் மக்களின் தேவை நிறைவிற்கு அப்பால் எதிர்க்கட்சித் தலைமை தற்போது தேசிய அரசுக்கு நன்றாகப் பயன்படுகின்றது. அரசியல் கைதிகளின் விடுவிப்பு, தமிழ் மக்களிற்கான மீள்குடியேற்றம், நிரந்தர தீர்வு என்பவற்றிற்கெல்லாம் அப்பால் இவர்கூறும் நீண்டபயணம் எது என்பதுதான் இன்றுள்ள கேள்வியாகும். மூத்த அரசியல் வாதி எனும் முதுகெலும்பை கேடயமாகப் பயன்படுத்தி அப்புலிப்பாடம் கற்பிக்க இவர் முனைகின்றார். இம்முயற்சிக்கு அவர் பக்கத்திலும் அர்த்தமுள்ளது. பலவிடயங்களிற்கு சில எதிர்ப்புக்களை பங்காளிக் கட்சிகள் தெரிவித்தும்கூட அதை அவர் சாதுரியமாக சமாளிக்க சம்மதம் தெரிவித்து தலையாட்டிய கட்சிகள்தானே அவர்களும். இதனைத்தான் மகிந்தவும் பயன்படுத்த முற்பட்டார், தற்போது ரணிலும் பயன்படுத்துகின்றார். "சம்பந்தரின் காலத்தில் தீர்வைப் பெற்றுவிடவேண்டும். இல்லையேல் பெறமுடியாது என்றார் மகிந்த. காரணம் அனைவரையும் தலையாட்டும் பொம்மைகளாக்கும் சக்தி சம்பந்தரிற்கு உள்ளது என்பது தான். ஒட்டுமொத்த தமிழினத்தையும் தலையாட்டும் பொம்மைகளாக்கியவர்களால்தான் எந்தக் கட்டத்திலும் தலை நிமிரமுடியாத இனமாக இலங்கையில் இது இன்றுவரை தலைகுனிந்திருக்கின்றது. சுயமாகச் சிந்தியுங்கள் சுதந்திரம் முதலில் எமக்குள் பிறக்கட்டும்.




# நல்லிணக்க மர்மமும் இணக்க வழித்தர்மமும்

செயற்பாடுகள் இன்றி சில பயப்பாடுகளின் அடிப்படையில் தேசிய அரசு இன்று தமிழ் மக்கள்சார்பாக நல்லிணக்கம் பேசுகின்றது. இணக்க வழித்தர்மத்தை எதிர் பார்த்த அப்பாவிச் சிறுபான்மை இனங்கள் இந்த நல்லிணக்க மர்மம் புரியாது மீண்டும் பல எதிர்பார்ப்புக்களை சுமந்து வாழ்கின்றன. இன்றைய அரசியல் போக்குகள் சென்ற அரசியலைவிட வஞ்சக வன்முறையாக நகர்கின்றது என்பதை இன்றைய வெளிப் பாடுகள் நன்குணர்த்தி நிற்கின்றன. சர்வதேச விசாரணை வேண்டுமென்றோம், சரிந்தது இன்று அது சத்தமின்றி. கைதிகள் விடயத்தில் கருணை காட்டவேண்டுமென்றோம். கச்சிதமாய் அதற்கு விடையளித்து விட்டு கைநழுவி விட்டது தேசிய அரசு. மீள்குடியேற்றம் முழுமையாக இடம்பெற்றதா? இராணுவ ஆக்கிரமிப்பு அகன்றதா? அபிவிருத்தி ஏதும் நடந்ததா? எது நடந்தது? நல்லிணக்கத்தை நாம் நம்புவதற்கு.

வடக்குக் கிழக்கு இணைந்த ஓர் சுயாட்சியை சமஸ்டி முறை மூலம் வென்றெடுத்துத் தருவோம் என்றார்கள் தேர்தல் பிரசாரத்தில் எங்கள் கூட்டமைப்பு. பொருளாதார காரணங்களுக்காக வடக்கு கிழக்கு இணைப்பு என்ற திட்டத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது தற்போது. நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை கோடிட்டு இந்த செய்தியை இந்திய செய்தித்தாள் ஒன்று வெளியிட்டு உள்ளது. செலவுகளை குறைப் பதை நோக்காகக்கொண்டு இந்த விடயம் மேற்கொள்ளப் படக்கூடாது என்பதற்கு பதிலளித்துள்ள அமைச்சர், பௌதீகரீதியாக மாகாணங்கள் பிரிக்கப்படவேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

மறுபுறத்தில் கூட்டு எதிர்க் கட்சியினருடன் மாதாந்தம் பேச்சுவார்த்தை நடாத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணக்கம் வெளியிட்டு உள்ளார். ஆளும் கட்சி எதிர்நோக்கிவரும் சவால்களை வெற்றிகொள்ளும் நோக்கில் இவ்வாறு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் விசேட பேச்சு வார்த்தை நடத்தப்படவுள்ளது. கூட்டு எதிர்க்கட்சியின் நிலைப்பாடு, ஆளும் கட்சி தொடர்பிலான விமர்சனங்கள் குறித்து இந்த சந்திப்புக்களின்போது கலந்துரையாடப்படவுள்ளது.

முன்னதாக கூட்டு எதிர்க் கட்சியினர் ஜனாதிபதியை சந்திக்க நேரம் ஒதுக்கித் தருமாறு கோரியிருந்தனர். எனினும் தற்போது ஜனாதிபதியே இந்த உறுப்பினர்களை மாதாந்தம் சந்திக்கநேரத்தை ஒதுக்கிக் கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கூட்டு எதிர்க்கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர் ஒருவர் இந்த தகவலை சிங்கள பத்திரிகை யொன்றுக்கு வெளியிட்டுள்ளார். இவற்றிற்கப்பால் மனித உரிமைகள் மீறல் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப் பதற்கு அமைக்கப்படுகின்ற உள்ளகப் பொறிமுறை தொடர்பான பேச்சுக்களை வரவு - செலவுத் திட்டத்திற்குப் பின்னர் ஆரம்பிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் உள்ளகப் பொறி-முறையை ஆரம்பிப்பதற்கும் அரசு உத்தேசித்துள்ளது என்று நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்து உள்ளார்.


இதேவேளை, ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ - மூன் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் ஆகியோர் அடுத்த வருடம் நடுப்பகுதியில் இலங் கைக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளனர் எனத் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்நிலை யில், இவர்களது விஜயங்களுக்கு முன்னரே உள்ளகப் பொறி முறை விடயங்களை செயற் படுத்த அரசு வரவு - செலவுத் திட்டத்திற்கு அடுத்த பணியாக கடும் பிரயத்தனங்களை மேற்கொள்ளும் என்று அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பறிப்பதற்கு, கூட்டு எதிர்க்கட்சி மீளவும் முயற்சிகளை ஆரம் பித்துள்ளது. வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததன்மூலம் மெய்யான எதிர்க்கட்சியல்ல என்பதனை சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெளிப்படுத்தியுள்ளதாக மகிந்த தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெற்றுக் கொள்வதற்காக மீளவும் சபாநாயகர் கருஜயசூரியவுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படும் என்று அவர்கள் தெரிவித்து உள்ளனர். இந்த விடயம் குறித்து அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்திடமும் அறிவித்து எதிர்க்கட்சித் தலைவர் பதவி உள்ளிட்ட எதிர்க்கட்சியின் முக்கிய பொறுப்புக்களை தங்களுக்கு பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கப்படவுள்ள தாக கூட்டு எதிர்க்கட்சியின் மூத்த பேச்சாளர் ஒருவர் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக தற்போது ஜனாதிபதி மறுப்புத் தெரிவித்துள்ளார். இருப்பினும் எதிர்க்கட்சியினரை மாதாந்தம் சந்திப்பதற்கு உருவான அழுத்தம் சில மாற்றங்களின் கோரிக்கையாகவும் உருவாகாது என்பதற்கு என்ன உத்தரவாதம். மறுபுறத்தில் பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் பிரதமர் ரணிலிற்கும் - மகிந்த ராஜபக்ஷ விற்கும் இடையில் இரகசிய சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும்போது இனநல்லிணக்கம் எனும் பெயரில் பல இருட்டடிப்புக் கள் இடம்பெறுகின்றன. குறிவைத்து விடுதலைப் புலிகளை வழிதவறாமல் அழித்த பெருமை மகிந்த அரசைவிட ரணிலிற்கே சாரும். அதிகாரங்களை வழங்கி அத்திவாரத்தை சரித்த அரசியல் புள்ளியவர். "மீண்டும் இளைஞர்களை ஆயுதமேந்தவிடக்கூடாது நல்லிணக்கத்தின்மூலமே அதை வென்றெடுக்கமுடியும்" எனக்கூறிய ஜனாதிபதிதான் அரசியல் கைதிகள் விடயத்தில் எனக்கு அப்பாற்பட்ட சில அரசியல் சிக்கல்கள் உள்ளதென முதலமைச்சர் விக்னேஸ்வரனிற்குத் தெரிவித்தார். அப்படியானால் அப்பாற்பட்ட அரசியல் பின்னணிகளின் மத்தியில் எவ்வாறு தமிழர்க்கான நல்லிணக்கத் தீர்வை அவரால் வழங்கமுடியும்...? என்பதுதான் புரியவில்லை. ரணிலின் அரசியலில் தலைமையை சிறுபான்மை இனங்கள் நிராகரித்தபோதும் மைத்திரி அரசின் கூட்டாட்சியால் மாத்திரமே அது அன்று ஏற்புடைமையானது. தற்போது இயலாமையின் இருப்பிடங்கள் மைத்திரியரசுக்குத் தடையாக இருக்குமென்றால் நல்லிணக்க மர்மத்தில் இணக்கவழித் தர்மம் செயலிழப்பது திண்ணம்.





சுதந்திரத்துக்கு முந்திய சிலோனின் அரசியல் வாதிகளில் இவர் முக்கியமான ஒருவர். 1934 ஆம் ஆண்டு அரசாங்க சபை உறுப்பினராக தெரிவானார். பிந்திய நாட்களில் இலங்கைத் தமிழ் சிறுபான்மை மக்களின் உரிமைகளை உறுதிப் படுத்துகின்ற முயற்சிகளில் ஈடுபட்டார். இவரின் தமிழ் காங்கிரஸ் சுதந்திரத்தை தொடர்ந்து விரைவிலேயே இரண்டாக பிரிந்தது. 1972 ஆம் ஆண்டு தமிழர் கூட்டணி உருவான போதே மீண்டும் ஒன்றானது. இக்கூட்டணி இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகி விட்டது.

WikiLeaks பகுதி -10-

# மலேசியாவில் பணம் சேர்த்த பொன்னம்பலம்!

தந்தை செல்வாவின் மரணத்துக்கு முன்னராகவே 1977 ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி ஜி.ஜி. பொன்னம்பலம் காலமாகிவிட்டார். இவரின் மரணம் தொடர்பாக கொழும்பில் உள்ள தூதரகத்தில் இருந்து நியூயோர்க் தலைமைக் காரியாலயத்துக்கு 11 ஆம் திகதி இரகசிய இராஜதந்திர ஆவணம் அனுப்பப்பட்டு உள்ளது.

இலங்கைச் சிறுபான்மைத் தமிழ் மக்களின் மிக முக்கிய தலைவர்களில் ஒருவர் ஜி.ஜி. பொன்னம்பலம். 1948 ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை அரசாங்க அமைச்சராக இருந்தவர். இவர் கடந்த பெப்ரவரி 09 ஆம் திகதி மலேசியாவில் காலமானார்.

இவர் பெயர் பெற்ற சட்டத்தரணியும், பிரபல அரசியல்வாதியும் ஆவார். 75 ஆவது வயதில் காலம் ஆகின்ற வரை இரு துறைகளிலும் தீவிரமாக ஈடுபட்டார். அவசரகால பிரகடனத்தை ஆட்சேபித்து கடந்த வருடம் வழக்கிட்ட தலைமைச் சட்டத்தரணி இவரே ஆவார். ஆயினும் தோல்வி கண்டார். தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதிக்கு எதிரான ஊழல் வழக்கில் கருணாநிதியை ஆதரித்து ஆஜராகி வாதாடினார்.

சுதந்திரத்துக்கு முந்திய சிலோனின் அரசியல்வாதிகளில் இவர் முக்கியமான ஒருவர். 1934 ஆம் ஆண்டு அரசாங்க சபை உறுப்பினராக தெரிவானார்.



தூசு தட்டப்பட்ட ஜி.ஜி.பொன்னம்பலத்தின் உருவச்சிலை

பிந்திய நாட்களில் இலங்கைத் தமிழ் சிறுபான்மை மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற முயற்சிகளில் ஈடுபட்டார். இவரின் தமிழ் காங்கிரஸ் சுதந்திரத்தை தொடர்ந்து விரைவிலேயே இரண்டாகப் பிரிந்தது.

1972 ஆம் ஆண்டு தமிழர் கூட்டணி உருவானபோதே மீண்டும் ஒன்றானது. இக்கூட்டணி இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிவிட்டது. கடந்த வருடம் முதல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைத் தலைவர்கள் இருவரில் ஒருவராக விளங்கினார். ஆயினும் பிரிந்து செல்கின்ற சித்தாந்தத்துடன் காணப்பட்டார். இருப்பினும் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் கூட்டணி போட்டியிட தீர்மானித்து உள்ள நிலையில் இவர் கூட்டணியின் சார்பில் யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவதாக இருந்தது.

**கோடீஸ்வரன்**

இவர் ஒரு கோடீஸ்வரனாக இறந்துள்ளார். ஏராளமான சிலோன் தமிழர்களைப்போலவே இவரின் குடும்பம், சொத்து ஆகியன மலேசியாவில் இருந்தன. ஒவ்வொரு வருடமும் ஆறு மாதங்கள் மலேசியாவில் வசித்தார். வரி நோக்கங்களுக்காகவே இவ்விதம் நடந்துகொண்டார்.

**ஊடுருவி**


தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு வயதாகி வருவதையே பொன்னம்பலத்தின் மரணம் காட்டுகின்றது. கட்சியின் இணைத் தலைவர் செல்வநாயகத்துக்கு வயது 78. இவர் பார்கின்சன் நோய் காரணமாக கிட்டத்தட்ட செயற்படமுடியாத நிலையில் உள்ளார். ஆயினும் கூட்டணிக்கு பின்னால் துடிப்பான இளைஞர் பட்டாளம் ஒன்று காணப்படுகின்றது. இது தீவிரவாத, சிங்கள விரோத இளைஞர் பட்டாளம் ஆகும். காலனித்துவ காலத்துக்கு முந்திய தமிழ் அரசியல்வாதிகளில் இருந்து இளைஞர்கள் மாறுபட்டுக் காணப்படுகின்றனர்.

(யாத்திரை தொடரும்)

# நிலமெல்லாம் இரத்தம் 182

பா.ராகவன்

## அக்ஸா மசூதியை இடிக்க நடக்கும் சதிகள்



இதை எதிர்பார்த்தே யூதர்கள் தரப்பில் மிக விநோதமான பிரகடனம் ஒன்று செய்யப்பட்டது: "நாங்கள் இறைவனை கெஞ்சிக் கொண்டிருக்கிறோம். எங்கள் ஆலயம் இருந்த இடம் எங்களுக்குத் திரும்பக் கிடைக்கவேண்டும். கடவுளே ஒரு நாள் இப்பள்ளிவாசலை இடிந்து விழச்செய்வார். அன்றைக்கு நாங்கள் எங்கள் சாலமன் தேவாலயம் இருந்த இடத்தில் மீண்டுமொரு ஆலயம் எழுப்புவோம்"

இழந்த நிலத்துக்காக முஸ்லிம்கள் போராடிக் கொண்டிருக்க, ஒரு நிலநடுக்கத்துக்காக யூதர்கள் அங்கே காத்திருக்கிறார்கள்.

இயேசுவைச் சிலுவையில் அறைந்து, கொல்ல உத்தரவிட்ட ஏரோது மன்னனின் காலத்தில், அதாவது கி.மு. 63இல் இரண்டாவது முறையாகப் புதுப்பித்துக் கட்டப்பட்ட சாலமன் ஆலயத்தின் எச்சங்களைத்தேடி, கிபி. 1967–லிருந்து யூதர்கள் அல் அக்ஸா மசூதி வளாகத்தில், அகழ்வாராய்ச்சி செய்து வருவதைப் பார்த்தோம். கிட்டத்தட்ட இரண்டாயிரம் வருடகாலத்து மிச்சங் களை இன்றும் அவர்கள், தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஓர் உடைந்த சுவர்தான் அவர்களது ஆதாரம். மேற்கொண்டு வலுவான ஆதாரங்கள் ஏதும் கிடைக்காத காரணத்தால், அல் அக்ஸா பள்ளிவாசலின் தாழ்வாரம், இஸ்லாமியர்களின் கட்டடக் கலையைப் பிரதிபலிப்பதாக இல்லை. உள்ளே இருக்கும் தூண்களும் மாடங்களும், பண்டைய உரோமானிய கட்டடக் கலைப் பாணியில் இருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். அகழ்வாராய்ச்சியில் பல்வேறு ஆதாரங்கள் கண்டெடுக்கப்பட்டிருப் பதாகவும், அவ்வப்போது தகவல் வந்துகொண்டே இருக்கும். ஆனால், அந்த இடத்தில்தான் சாலமன் தேவாலயம் இருந்திருக்கமுடியும் என்பதற்கான உறுதியான ஓர் ஆதாரம், இன்றுவரை பெறப்படவில்லை என்பதே உண்மை.

ஆனால் இந்தக் காரணங்களால் அல் அக்ஸா மசூதியை இடித்துவிட்டு, அங்கே ஒரு யூத தேவாலயம் எழுப்ப வேண்டுமென்கிற தங்கள் விருப்பத்தை விட்டுக்கொடுக்க, யூதர்கள் தயாராக இல்லை. ஜெருசலேமே யூதர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஒரு நகரம்தான் என்பதால், அவ்வப்போது ஆக்கிரமிப்பு முயற்சிகள் மூலமும், இதற்கான வேலைகளை முடுக்கிவிட்டு இருக்கிறார்கள்.

1967 இல் யுத்தத்தில் இஸ்ரேல் வென்ற உடனேயே, மசூதி வளாகத்தில் அகழ்வாராய்ச்சிக்கான நடவடிக்கைகள் ஆரம்பமாயின என்று, சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம். அதோடு இன்னொரு காரியத்தையும் அவர்கள் செய்தார்கள். அந்த ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் திகதி, ஷலோமாகரன் என்கிற யூத மதகுரு ஒருவர், ஒரு சிறு படையைத் (அரசாங்கப்படைதான்) தன்னுடைய பாதுகாப்புக்காக ஏற்பாடு செய்துகொண்டு, அல் அக்ஸா மசூதி வளாகத்துக்கு வந்து, அங்கே யூத முறைப்படியான பிரார்த்தனை மற்றும் பூஜைகளில் ஈடுபடத் தொடங்கினார்.

ஷலோமாகரன், தனது சொந்த முடிவின் பேரில்தான் இந்தப் பிரார்த்தனையைச் செய்தார் என்று இஸ்ரேல் தரப்பில் சொல்லப்பட்டாலும், அது, அரசு அனுமதியின்றி நடந்திருக்கச் சாத்திய மில்லை என்பது மிகவும் வெளிப்படை.

முஸ்லிம்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அப்போதுதான் அவர்கள் யுத்தத்தில் தோற்றுத்துவண்டிருந்தார்கள். ஜெருசலேம் நகரைவிட்டு அவர்கள் முற்றிலுமாக நீங்குவதற்குள், மசூதி அவர்கள் கையைவிட்டுப் போய்விடும் போலிருந்தது. தாக்குதல் நடவடிக்கை களில் ஈடுபட்டிருந்த போராளி இயக்கத்தவர் கள் யாரும், அப்போது அங்கே இல்லை. ஒரு முழுநாள் நடைபெற்ற இந்தப் பிரார்த்தனையின் தொடர்ச்சியாக, மசூதி விரைவில் இடிக்கப்பட்டு, அங்கே பழைய சாலமன் ஆலயம் மீண்டும் எழுப்பப்படும் என்கிற நம்பிக்கையை யூதர்களுக்கு விதைத்துவிட்டு, வீடுபோய்ச் சேர்ந்தார், அந்த மதகுரு.

(தொடரும்)



32

# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

இருவரும் ஆபிரிக்கர்களின் அடிமை வாழ்க்கை பற்றி மணிக் கணக்கில் பேசி உள்ளத்தில் கனன்றுகொண்டிருந்த அனலை வெளிப்படுத்தினார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் மண்டேலா கோரைப் பார்த்து "நாமிருவரும் ஒரே குளத்தில் ஊறிய மட்டைகள் போல ஒரே குறிக்கோளுடனும் ஒரே எண்ணவோட்டங்களுடனும் ஊறியிருப்பதால்தான் இறைவன் நம்மிருவரையும் இவ் அலுவலகத் திற்கு வரவைத்து நம்மை சந்திக்க வைத்திருக்கிறான் என்று எனக்கு தோன்றுகிறது" என்று கூறியதும் கோரின் கண்கள் பளிச்சிட்டன.

"நண்பா நீ சொல்வது நூற்றுக்கு நூறு உண்மைதானடா. நானும் அப்படியேதான் நினைக்கிறேன். நம்மின மக்களுக்கு சுதந்திரத்தை பெற்றுக்கொடுக்க வேண்டுமென்று துடிக்கும் எனக்கு அதே துடிப்புள்ள நீ நண்பனாக கிடைத்திருக்கிறாய் என்றால் அது கடவுளின் கைங்கரிய மாகத்தான் இருக்கவேண்டும்" என்று உறுதியாக கூறினான்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் கோர் மண்டேலாவிடம் 'கறுப்பின ஆபிரிக்கர்கள் எவ்வளவு திறமை சாலிகளாக இருந்தாலும் அவர் களுக்கு அடிமை வாழ்க்கையே விதிக்கப்படுவது ஏன்? திறமை படிப்பு எதுவுமில்லை என்றாலும்கூட வெள்ளைக்காரர்களுக்கு மட்டும் கூடுதல் மரியாதை தரப்படுவது ஏன்? நாம் மட்டுமல்ல நம்சமூகமே இப்படி இருண்ட கொள்கையில் இருப்பது ஏன்? இதை மாற்ற நம்மால் உருப்படியாக ஒன்றும் செய்ய முடியாது என்றபோது நாம் படித்து என்ன பயன்? வேலைக்குப் போய் கைநிறைய சம்பாதித்து என்ன பயன்?' என்று கண்களில் விரக்தி தொனிக்க தன் உள்ளக்கிடக்கைகளை மண்டேலாவிடம் கொட்டி தீர்த்தான். அவனது உணர்வுகள் உடைந்து உள்ளம் இடிந்து வெளிவந்த வார்த்தைப் பிழம்புகளை கேட்டதும் மண்டேலாவுக்கு உற்சாக பானம் அருந்தியதுபோல இருந்தது. "நீ சொல்வது சரிதான். நம்மின மக்களுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற தணியாத தாகம் நம்மிருவரையும் ஆக்கிரமித்தால் மட்டும் போதுமா? நம்மின மக்களும் அல்லவா அதற்கு ஒத்துழைக்க வேண்டும். கடவுள் நினைத்தால் நிச்சயம் அது நடந்தே தீரும். கறுப்பின மக்களும் வெள்ளைக்காரர்களுக்கு எந்தவிதத்திலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்துக்காட்டும் நாள் வெகுதொலைவில் இல்லை" என்று ஆவேசம் பொங்கப்பேசி முடித்தான்.

இவ்வாறாக இவர்களது சுதந்திர வேட்கை உணர்வு நாளுக்கு நாள் தோழமை எனும் உரத்தில்




ஊன்றியே வளர்ந்து கொண்டுவந்தது. சிசுலுவும் மண்டேலாவும் அடிக்கடி சந்தித்துவந்தனர். சிசுலு மண்டேலாவிடம் 'மண்டேலா,

**அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P) யாழ்ப்பாணம்**

நீயும் கோரும் ஒட்டி உறவாடுவதை பார்க்க எனக்கு பொறாமையாக இருக்கிறதடா. கோரின் நட்பினால் நீ என்னை மறந்து விடுவாய் போல' என கேலி பேசி கிண்டல் செய்தான். மண்டேலாவோ உரத்து சிரித்தவாறு "ஏன் அப்படி நினைக்கிறாய்? நான் உன்னை மறப்பேனா? என்னுயிர்த் தோழனடா நீ. கோரும் உன்னை போல் ஒரு நல்ல நண்பன். ஒரு காலமும் நம்நட்புக்கு அவன் இடைஞ் சலாக வரமாட்டான்" என அந்தப் பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்தான்.

(தொடரும்)




# சென்னையில் சிந்திய நீர்

## காலநிலை மாநாட்டின் சந்நிதிக்கு வந்தது!

**ஐ.நா** காலநிலை மாற்ற உச்சி மகாநாடு ஆங்கிலத்தில் COP என அழைக்கப்படுவது (Conference of parties) கார்த்திகை 30 இலிருந்து மார்கழி 11 வரை பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெறுகிறது. சமகாலத்தில் உலகப் பிரச்சினைகள் பல இருப்பினும் பயங்கரவாதம் காலநிலை ஆகிய இரண்டு விவகாரங்களும் பிரதான கவனத்தை ஈர்த்துள்ளன. பயங்கரவாதம், பற்றி பிறிதோர் தளத்தில் ஆராயப்படும்.

காலநிலை பற்றி உலக தலைமை நிறுவனமாக கருதப்படும் ஐ.நா சபை உச்சிமாநாடுகள் நடாத்திவருகிறது என்பது காலநிலை மாற்றம் ஏற்படுத்தும் தாக்கம் எவ்வளவு என்பதை புரிந்து கொள்ளலாம். காலநிலை மாற்றம் என்பது புவி வெப்பமடைதல் என்றும் அழைக்கப்படுகிறது. புவி வெப்பமடைதல் என்ற பதம் பூமி சாஸ்திரத்தில் ஒரு விடயமாக உயர்பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப்படும் ஒரு விடயமாகும். புவி வெப்பமடைதல் எனும் பதம் மிகவும் ஆழஅகலமானதாகும். வரைவிலக்கணம் கூறினால் தரையின் மேற்பரப்பிலும் சமுத்திரங்கள் நீர் நிலைகளின் மேற்பரப்பிலும் வளிமண்டல வெப்பநிலையைவிட தொடர்ச்சியாக வெப்பநிலை அதிகரித்துச்செல்வதே புவி வெப்பமடைதல் ஆகும். வெப்பநிலை அதிகரிப்பை ஏற்படுத்தும் காரணிகள் எவை? அதன் தாக்கம் என்ன? ஐ.நா. ஏன் இவ்விடயத்தின்மீது கூடிய அக்கறை காண்பிக்கவேண்டும் என்ற விபரங்களை அறியாமல் பாரிஸில் நடைபெறும் உச்சிமாநாடு பற்றி முழுமையாக அறிய முடியாது.

பூகோள காலநிலை பற்றி சம காலத்தில் பொதுப்படையாக கருத்து நிலவுகின்றது. முன்னெப்பொழுதும் இல்லாதவாறு கடந்த காலங்களில் வெள்ளப்பெருக்கு, நீண்டவரட்சி, புயல், சுனாமி, வெப்ப அலை போன்றவை உலகின் எப்பகுதியிலாவது ஏற்பட்டு பாரிய அழிவுகளை ஏற்படுத்துவது சூழலில் தலைகீழான மாற்றங்கள் ஏற்படுத்துவதும் கண்கூடு. இவற்றின் காரணமாக உயிரின வாழ்க்கை சூழலில் தலைகீழான மாற்றங்கள் ஏற்படுவதும் விவசாய உற்பத்தி எதிர்மறையாக பாதிக்கப்படுவதும் விவசாயத்துக்கு தகுதியான நிலங்கள் குறைவடைவதும், மிருகங்கள், பறவைகள் பாதிக்கப்படுவதும் கடல்மட்டம் உயர்வதும் எல்லாவற்றுக்கும் மேலாக உலக மானிட இனம் பெரும் சவால்களுக்கு மூலம் கொடுக்கும் சூழ்நிலை சமகாலத்தில் ஒரு பேசு பொருளாக இடம்பெற்றுள்ளது.

கைத்தொழிற்புரட்சி ஐரோப்பாவின் முகத்தையே மாற்றியமைத்தது. கைத்தொழில்மயமாக்கல் ஐரோப்பாவில் செழுமையாக பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்திய காரணிகள் ஆகும். காலனித்துவ அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெற்ற நாடுகளும் கைத்தொழில் அபிவிருத்தியை பொருளாதார முன்னேற்றத்திற்கான கொள்கையாக ஏற்று செயற்பட்டன. வேறு வார்த்தையில் கூறினால் உலகம் பூராகவும் கைத்தொழில்மயமாக்கல் ஏதோ ஒரு வகையில் இடம்பெற்றது. கைத்தொழில் மயமாக்கலின் காரணமாக வெளியேறும் கழிவுகளில் பிரதானமானது $CO_2$ என அழைக்கப்படும். காபனீரொக்சைட்டு ஆகும். இதனை பச்சை வீட்டு வாயுக்கள் (Green House gases) என சூழலியலாளர்களால் அழைக்கப்படுகிறது.

GHG இல் வேறு வாயுக்கள் இருப்பினும் இக்கட்டுரையின் நோக்கத்துக்கு காபனீரொக்சைட் என்ற பதம் போதுமானது. $CO_2$ வின் தாக்கமே ஓசோன் படலத்தில் சேதங்களை ஏற்படுத்தி காலநிலை மாற்றத்தை ஏற்படுத்துகிறது. காலநிலை மாற்றத்துக்கு $CO_2$ வெளியேற்றும் பிரதானமாக கூறப்பட்டாலும் வேறு காரணிகளும் உண்டு. மனிதன் குடியிருப்புக்காகவும் வேறு காரணிகளும் உண்டு. மனிதன் குடியிருப்புக்காகவும் விவசாய தேவைகட்காகவும் காடுகளை அழித்துள்ளான். அழித்துவருகின்றான். அழிக்கப்பட்ட காடுகளை ஈடுசெய்வதற்கான மீளக்காடுகளை உருவாக்கல் நடைபெறவில்லை. சுருக்கமாகக்கூறின் மனித நடவடிக்கைகளே காலநிலை மாற்றத்திற்கான மிகப் பிரதானமான காரணியென துணிந்து கூறலாம். அத்துடன் வாகனங்கள், விமானங்கள், கடற்கப்பல்கள் போன்றவற்றிலிருந்து வெளியேறும் புகை மற்றும் மின்னுற்பத்தி நிலையங்களிலிருந்து வெளியேறும் புகைகளும் காரணமாகின்றன.

தற்போது நடைபெறும் பாரிஸ் உச்சி மகாநாடு பற்றி அறிவதற்கு மேற்கூறப்பட்ட பின்னணியை தெரிந்து கொள்ளல் அவசியமாகிறது. உச்சி மாநாடு COP 21 என அழைக்கப்படுகிறது. ஐ.நா.வின் காலநிலை தொடர்பான முதலாவது மாநாடு 1991இல் நடைபெற்றது. காலநிலை தொடர்பான மாநாட்டின் பெயர் UNFCCC ஆகும். அதன் விரிவாக்கம் Unibill nation framework convention on climate



change என்பதாகும். இதனை தமிழில் ஐ.நா காலநிலை மாற்றக் கட்டமைப்பு ஒப்பந்தம் எனக் கூறலாம். இந்த உச்சி மகாநாட்டின் நோக்கம் சகல அங்கத்துவ நாடுகளையும் சட்டரீதியாக கட்டுப்படுத்தும் சர்வதேச ஒப்பந்தம் ஒன்றினை முன்மொழிந்து ஏற்றுக் கொள்ளுவதாகும். அதாவது அங்கத்துவ நாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவு மட்டத்தில் தத்தம் கைத்தொழில் துறைகளிலிருந்து வெளியேறும் $CO_2$ மட்டத்தை குறைப்பதாகும். இவ்வளவு காலம் வரைக்கும் பல வருடங்கள் இவ்விடயங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளதாயினும் அங்கத்துவ நாடுகளை கட்டுப்படுத்தும் பொறிமுறையொன்று இருக்கவில்லை. $CO_2$ வெளியேற்றத்தைக் குறைத்து புவிவெப்பநிலை அதிகரிப்பை $2^oC$-க்கு மேற்படாது வைத்திருத்தலே இதன் பிரதான இலக்காகும். இருப்பினும் மிகச்சிறிய தீவுகளும், இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய பலவீன நிலையிலிருக்கும் நாடுகள் அதிகரிப்பு எல்லையை $1.5^oC$) ஆக வைத்திருக்க வேண்டும் என கோரிக்கைகளை உச்சிமாநாட்டில் முன்வைத்துள்ளன. 1991ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஆண்டுதோறும் காலநிலை மாற்ற உச்சிமாநாடுகள் இடம்பெற்றுள்ளன. இதன் தொடர்ச்சியாக யப்பான் நாட்டின் KYOTO நகரில் 1997இல் நடைபெற்ற மகாநாடு முக்கியமானது. ஏனெனில் இம்மகாநாட்டில் முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனை கயோட்டா ஒப்பந்தம் KYOTO PROTOCOL என அழைக்கப்படுகிறது. இதன் பிரதான அம்சம் யாதெனில் பச்சை வீட்டு வாயுக்களின் செறிவினை குறைப்பதற்கு, மானிட நடவடிக்கைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன்மூலம் வெப்ப நிலை அதிகரிப்பில் ஆபத்தான மட்டங்களை குறைப்பது என்பதாகும். KYOTO -வில் முன்வைக்கப்பட்ட கருத்து அபிவிருத்தியடைந்த, பணக்கார நாடுகள் வரலாற்றுரீதியாக பச்சை வீட்டு வாயுக்களை உருவாக்குவதற்கு பொறுப்பானவை எனவும், பரிகார நடவடிக்கைகளில் அந்த நாடுகள் கூடியளவு பங்கினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். KYOTO பங்கினை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதாகும். KYOTO-வில் நிறைவேற்றப்பட்ட அதிமுக்கிய தீர்மானம் இரண்டு அர்ப்பணிப்பு காலங்களை குறிப்பிட்டமையாகும். 192 நாடுகள் பங்குபற்றிய மகாநாட்டில் முதலாவது அர்ப்பணிப்புக் காலம் 2008 - 2012 வரை என ஏற்றுக்கொள்ளப்பட்டது. இரண்டாம் அர்ப்பணிப்பு காலம் 2012இல் டோகா கட்டாரில் நடைபெற்ற கயோட்டோ ஒப்பந்தத்துக்கு திருத்தமாக அங்கீகரிக்கப்பட்டது. அர்ப்பணிப்பு என்பது ஒப்பந்தத்தால் கைச்சாத்திட்ட நாடுகள் பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தை இலக்குகள் நிர்ணயித்து குறைப்பதாகும். இந்த ஒப்பந்தம் 150 வருடங்களுக்கு மேலாக கைத்தொழிற்துறையில் முன்னேற்றமடைந்த நாடுகளை குறிவைத்தே பேசுகின்றது. ஒப்பந்தம் கயோட்டோ யப்பானில் 1997ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒழுங்கமைக்கப்பட்ட சட்டங்கள் மொறொக்கோ நாட்டில் 2001இல் நடைபெற்ற மகாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டு மாசி, 2001 இல் நடைமுறைக்கு வந்தது. முதலாவது அர்ப்பணிப்பு காலவரையறைக்குள் (2008 - 2012) 37 கைத்தொழில் நாடுகளும், EC( ஐரோப்பிய சமூகம்) யும் 1990 வெப்பமட்டங்களிலிருந்து 5 வீதம் குறைப்பதற்கு இணங்கின. இரண்டாம் அர்ப்பணிப்பு காலவரை 2012 திருத்தமாக அங்கீகரிக்கப்பட்டது. காலவரையறை 1-1-2013 இலிருந்து 31.12.2020 ஆண்டு இக்கால வரையறைக்குள் நாடுகள் மீளமைக்கப்பட்ட பச்சை வீட்டு வாயுக்களின் பட்டியலை வழங்கவேண்டும். முதலாவது அர்ப்பணிப்பு வரையறையை ஏற்றுக் கொண்ட சில நாடுகள் இரண்டாம் அர்ப்பணிப்பிலிருந்து விலகியுள்ளன. முதலாவது அர்ப்பணிப்பில் சம்மதம் தெரிவித்த நாடுகள் 37. அவுஸ்திரேலியா, ஐரோப்பிய யூனியனின் 28 நாடுகள், பெலாறஸ், ஐஸ்லாந்து, கஸகஸ்தான், லிச்ரென்சன், நோர்வே, சுவிச்சட்லாந்து உக்ரைன் ஆகும். இவற்றில் பெலாறஸ், கஸகஸ்தான், உக்ரேன் ஆகிய மூன்று நாடுகளும் கயோட்டா ஒப்பந்தத்திருந்து விலகுவதாகவும், இரண்டாவது அர்ப்பணிப்பு இலக்குகளை ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் தெரிவித்துள்ளன. ஜப்பான், நியூசிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகள் கயோட்டா ஒப்பந்தத்தின், முதலாது அர்ப்பணிப்பில் பங்குபற்றிய போதிலும் இரண்டாவது அர்ப்பணிப்பில் எந்த இலக்குகளையும் எடுக்கவில்லையென தெரிவித்துள்ளன. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கனடாவும், அமெரிக்காவும் இரண்டாம் அர்ப்பணிப்பு இலக்குகளை ஏற்றுக்கொள்ளவில்லை. கனடா 2012 இல் கயோட்டா ஒப்பந்தத்திலிருந்து விலகியது. அமெரிக்கா உத்தியோகபூர்வமாக காங்கிரஸில் ஒப்பந்தத்தை அங்கீகாரம் பெறவில்லை. 2015 கார்த்திகைவரை 55 நாடுகள் டோகா திருத்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. இரண்டாம் அர்ப்பணிப்புக் காலம் சட்ட நடைமுறைக்கு வரவேண்டுமாயின் 144 நாடுகளின் சம்மதம் தேவைப்பாடாகும்.

இதற்கிடையில் பேரு தலைநகரான லிமாவில் 2014இல் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பெரிய GHG ஐ வெளியேற்றும் நாடுகள் நட்டஈடு ஒன்றை வழங்கவேண்டும் என விவாதித்தனர்.

எவ்வாறாயினும் புவிவெப்பமடைதல் தொடர்பாக ஐ.நா.வின் நிகழ்ச்சித் திட்டங்கள் உருப்படியான நிலையான தீர்மானத்துக்கு இதுகாலவரைக்கும் அடைவுகளைப் பெறாவிடினும் கயோட்டா ஒப்பந்தத்தின் அடிப்படையிலும் டோகா அமர்வின் அடிப்படையிலும் நாடுகள் இலக்குகளை அடைவதில் சம்மதம் தெரிவித்தமையும், நட்டஈடு விவகாரம் தீர்மானிக்கப்படும் எனவும் நம்பிக்கை கொள்ளமுடியும்.

இதற்கு மேலதிகமாக GHGகளை உருவாக்காத மீளப்புதுப்பிக்கக்கூடிய சக்தியை பயனுறுதி வாய்ந்த முறையில் ஊக்கப்படுத்தவேண்டும் என்றும் மக்களுக்கு இவை கிடைக்கத்தக்கவாறான முறையை ஏற்படுத்தவேண்டும் என்றும் பாடசாலை உயர்கல்வி பாடவிதானங்களில் இவ்விடயங்களை உள்ளடக்க வேண்டுமென்றும் பலவிதமான ஆலோசனைகள் பாரிஸ் உச்சி மாநாட்டில் முன்வைக்கப்படலாம்.

**தேவ தர்மா**

# இலங்கையில் 10 இலட்சத்துக்கும் அதிகமானவர்களுக்கு கண்புரை நோய்

இலங்கையின் கிராமங்களில் உள்ள இலட்சக்கணக்கான மக்களிடையே கண்புரை நோய் குறித்த விழிப்புணர்வு இல்லை என கண் மருத்துவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் கண்புரை நோயால் ஒரு இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கண்புரை நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதற்கு தேவையான சிகிச்சையளிக்க் போதிய நிதியுதவிகளை பொதுமக்களிடமிருந்து பெறும் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக கிழக்கிலிருந்து புறப்பட்ட நடை பயணம் ஒன்று தலைநகர் கொழும்பில் முடிவடையவுள்ளது.

"விஷன் 2020" எனும் அமைப்பின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின்மூலம் குறைந்தது பத்து இலட்சம் பேர் பலனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக இதில்



ஈடுபட்டுள்ளவர்கள் நம்புகின்றனர்.

இலங்கை அரசின் நேரடி பங்களிப்பு இல்லாவிட்டாலும், அரச ஆதரவுடனேயே இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் கண் மருத்துவர் டாக்டர். சிறிபரதன் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்மூலம் கண்புரை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச மருத்துவம் அளிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கண்புரை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு அளித்துவரும் உதவிகள் போதியதாக இல்லை எனவும் டாக்டர் சிறிபரதன் கூறுகிறார்.

கண்புரை நோய் என்பது 40 வயதுக்குமேல் தவிர்க்கமுடியாத ஒரு நோயாக இருந்துவருகிறது. இதற்கு அறுவை சிகிச்சைசெய்து செயற்கை லென்ஸை வைத்து குணப்படுத்துகின்றனர். ஆனால் இந்த நடைமுறையே தேவையில்லாத ஒரு புதிய முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காடராக்ட் ஒப்பரேஷனில் பயன்படுத்தப்படும் செயற்கை லென்ஸ்களின் செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கும் கண் வடிவம் சம்பந்தப்பட்ட புதிய கண்டுபிடிப்பை திருப்புமுனை கண்டுபிடிப்பு என்று லண்டன் கிங்ஸ்டன் பல்கலை மருத்துவ ஆராய்ச்சிக் குழு கோருகிறது.

கண்ணில் உள்ள லென்ஸில் புரோட்டீன்கள் எவ்வாறு விநியோகிக்கப்பட்டு உள்ளது என்பதைக்கொண்டு கண்புரை நோய்க்கு சிறந்த சிகிச்சை அளிக்க முடியும் என்று இவர்கள் கருதுகின்றனர்.

கண்களில் இயற்கையாக உள்ள லென்ஸை ஒருபோதும் செயற்கை லென்ஸ்கள் மாற்றீடு செய்யமுடியாது. தற்போது இந்த ஆராய்ச்சியின் பயனால் மனிதனால் தயாரிக்கப்படும் லென்ஸ்களின் தரத்தை நன்றாக உயர்த்தமுடியும் என்று இந்த ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கண்புரை நோய் எந்த வயதிலும் ஏற்படலாம் என்றாலும், நீரிழிவு நோய் உள்ளவர்கள் மற்றும் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கு அதிகம் இந்த பாதிப்பு ஏற்படுகிறது. புகைப்பிடித்தல் மற்றும் புற ஊதாக்கதிர் வீச்சின் தாக்கமே கண்புரை ஏற்படுவதற்குக் காரணம்.

இதற்கு பொதுவாக பாதிக்கப்பட்ட இயற்கையான கண் லென்ஸிற்குப் பதிலாக செயற்கை லென்ஸை பொருத்துவதாகவே இருந்துவருகிறது.

கண்ணில் இயற்கையாக உள்ள லென்ஸில் புரோட்டீன்கள் விநியோகிக்கப்பட்டுள்ள விதம் கண்பார்வை ஏற்ற இறக்கவாட்டத்தினை முன்னைவிட இப்போது மிகவும் நேர்த்தியாக மேம்பாடு அடையச் செய்யமுடியும் என்று ஆராய்ச்சியின் தலைவர் பேராசிரியர் பாராபாரா பெர்சியோனெக் கூறுகிறார்.

ஒளியின் வேகத்திற்கு சற்று நெருக்கமாக எலெக்ட்ரான்களை விசைப்படுத்தி எக்ஷ்-ரே கதிர்களை உருவாகும் மூன்றாம் தலைமுறை சின்க்ரோடான் துறையில் வல்லுனரான இவர் இந்த எக்ஷ்-ரேக்கள் உடலின் உட்பகுதிகளையும், மென்திசுக்களையும் மற்ற கதிர்வீச்சு முறையைவிட மிகவும் சிறப்பாக ஊடுருவும் தன்மைகொண்டது என்கிறார்.

இதனால் உலோகம் முதல் பக்ரீரியா வரை எதையும் ஆழமாக உற்றுநோக்க முடியும் என்கிறார் இவர்.

இந்த முறை இன்னும் ஆரம்ப கட்டத்தில்தான் உள்ளது இது முழுப்பயனுக்கு வர எத்தனை ஆண்டுகள் பிடிக்கும் என்பது தெரியவில்லை.




**- ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

இலங்கை இன்று எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுள் நீர் மாசடைதல் முக்கியமானதாகும். இலங்கை நீர்வளம் மிக்க ஒரு நாடாக கருதப்படுகின்ற போதிலும் இவ்வளம் விரைவாக மாசடைந்து வருவது கவனத்திற்குரிய விடயமாகும். நீரின் பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் தன்மை போன்றவற்றில் ஏற்படும் மாற்றம் நீர்மாசடைதல் என பொதுவாக கூறமுடியும்.

ஏதாவது ஒரு தொழிற்சாலையில் இருந்து கழிவுநீரோ அல்லது மலக்கழிவு நீரோ அல்லது வேறு கழிவுநீரோ அல்லது விசவாயுக்களோ அல்லது திண்மக்கழிவுகளோ நீரில் சேர்க்கப் படுவதனால் அந்நீர் பொதுமக்கள் சுகாதாரத்திற்கு அல்லது பாதுகாப்பிற்கு தொந்தரவு, அபாயகரம் அல்லது ஆபத்தை விளைவிக்கக் கூடியளவில் திரிபுபடுத்தல் நீர் மாசடைதல் என மேலும் தெளிவாக விளக்கமுடியும்.

அதேபோன்று வீட்டுப்பாவனை, வியாபார, தொழில்நுட்ப, விவசாய தேவைகளுக்காக தேர்ந்தெடுக்கும் நீரில் காணப்படும் தாவரங்கள், மிருகங்கள், போன்றவற்றின் நலனுக்கு அபாயகரமானதாக நீரின் பண்பு வேறுபடுதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டும் நீர்மாசடைதலை விளக்க முடியும்.

இலங்கையில் அண்மைக்காலமாக வளிமாசடைதல் பிரச்சினையானது உணரப்பட்டுவருகின்றது. தூய்மையற்ற நிலைமை அல்லது சாதாரண கூறுகள் மிகையாக வளிமண்டலத்திற்கு விடுவிக்கப்படும்போது வளி மாசடைதல் ஏற்படுகின்றது. அதாவது சாதாரண வளியிலுள்ள வாயுக்களும், வேறு பதார்த்தங்களும் தவிர்ந்த தூசு, வேறு வாயுக்கள் புகை முதலியன சில குறிப்பிட்ட அளவுகளிலும் அதிகமாக இருந்து மனித, விலங்கு, தாவர உயிர்வாழ்க்கைக்குத் தீங்கை ஏற்படுத்துவதால் வளிமண்டலம் மாசடைந்துள்ளது.

## வளி மாசடைதல்

வளியில் உள்ள சில வாயுக்கள் அவை இருக்கவேண்டிய செறிவிலும் அதிகம் இருப்பினும் மாசாக மாறலாம்.

உற்பத்தித் தொழிற்சாலைகள், வாகனங்கள், பொதுமக்களின் செயற்பாடுகள் போன்றவற்றிலிருந்து நேரடியாக வளியினுள் வெளிச் செலுத்தப்படுவது பிரதான வளிமாசாக்கிகள் ஆகும். இவற்றுள் இலகுவில் தாக்கமடையக்கூடிய சேதன மூலக்கூறுகள் (VOCS), நைதரசன் ஒட்சைட்டு ($NO_2$), கந்தகவீரொட்சைட்டு ஒளி இரசாயன ஒட்சியேற்றம் என்பன அடங்கும்.

வளியிலுள்ள பதார்த்தங்களிடையே இரசாயனத் தாக்கங்கள் நடைபெறும் பொழுது வெளிச் செலுத்தப்படுவது துணையான வளிமாசாக்கிகள் எனப்படும்.

இவற்றுள் நைதரசனீரொட்சைட்டு ($NO_2$), ஒளி இரசாயன ஒட்சியேற்றம் என்பன அடங்கும். குறிப்பாக இலங்கையில் கைத்தொழில் நடவடிக்கை, விவசாயத்தில் உரப்பாவனை, கிருமிநாசினி பாவனை, காடழிப்பு, போக்குவரத்து வீடமைப்பு குடியேற்றத் திட்டம் போன்ற பல்வேறு காரணங்களுடன் கழிவுகள் அழுகுதல்போன்ற பல்வேறு காரணங்களாலும் வளிமாசடைகின்றது.

இதில் வாகனப்புகையினால் அதிகளவு மாசடைவதாக அறியப்பட்டுள்ளது. இதனால் நோய் ஏற்படல், அங்கிகள் இறத்தல், வலிமை இழத்தல் போன்ற பல்வேறு விளைவுகளால் உயிர்ச்சூழல் சமனிலை குழம்புகின்றது.

இயற்கையையும் சுற்றுச்சூழலையும் மனிதஇனத்தின் சுகவாழ்வுக்கு பயன்படுத்தல் என்ற செயற்பாடானது தற்போது முக்கியமான ஒரு விடயமாக மாறிவருகின்றது. இயற்கை வளங்களையும் சுற்றுச் சூழலையும் எந்தத் தேவைக்குப் பயன்படுத்தும் போதும் சூழலியல் மற்றும் சுற்றுச்சூழலியல் ஆகியவற்றின் அடிப்படைத் தத்துவங்களுக்கு அமைவாகவே செயற்படவேண்டும் என்பது எவ்வளவு உணரப்பட்டுள்ளதோ அதே அளவுக்கு அவை பயன்படுத்தும்போதும் பொருளின் பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் சிக்கலான கோட்பாடுகள் அரசியல் மற்றும் சமூகவியல் போன்ற துறைகளையும் கருத்தில் எடுத்துக்கொள்ளல் வேண்டும். இங்கு இவை அனைத்திலும் கூட்டுச்சேர்க்கையின் விளைவாக சுற்றுச்சூழலில் ஒரு சிக்கலான நிலை தோன்றுகின்றது.

உலகின் சகல உயிரினங்களும் ஒரேயொரு வாழ்விடம் புவியாகும். இந்தப் புவியில் இன்றைய மிதமிஞ்சிய குடித்தொகையும், அதன் எல்லையற்ற முயற்சியும் முக்கிய துறைகளின் வளர்ச்சியும் கடைசி எல்லைக்கே சென்றுள்ளது.

குறிப்பாக கைத்தொழில், விவசாயம், கால்நடைவளர்ப்பு, விஞ்ஞானம், தொழில்நுட்பம், தொலைத்தொடர்புகள், ஆயுத உற்பத்திகள் போன்றவைகள் சூழலை ஆதாரமாக வைத்தே அவை வளர்ச்சியின் எல்லைக்கே சென்றுள்ளது. இத்துறைகளின் வளர்ச்சியினால் இன்று புவிக்கோளமானது உலகளாவிய ரீதியில் பூகோள வெப்பமாதல், பச்சைவீட்டு விளைவும், ஓசோன் படைத்தேய்வு, காடழிப்பும் உயிரினப் பல்வகைமை அழிவும், பாலைவனமாதல், அமிலமழை என பல சூழல் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. இதனால் இந்தப் பூமிப் பந்தில் உயிர்வாழும் மனிதர்களும் இன்ன பிற உயிரினங்களும், தாவரங்களும் அழிவை எதிர்நோக்கும் ஆபத்தை நெருங்கிவருகின்றன.



# இலங்கையில் கட்டாயக் கல்வி

### கட்டாயக்கல்வியை நடைமுறைப்படுத்துவதில் உள்ள இடர்கள்

மாணவர்கள் பலர் வறுமை காரணமாகவே பாடசாலைக்கு செல்லாமல் உள்ளனர். அதன்காரணமாகவே பெருமளவானோர் இடைவிலகுகின்றார்கள். வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்கள் தமது ஜீவனோபாயத்திற்காக ஏதோ ஒரு தொழிலை செய்துகொண்டு இருக்கின்றார்கள். இவ்வாறானவர்களைக் கட்டாயக் கல்விக்குழுவினர் அணுகுகின்ற போது அவர்கள் ஏதோ சாக்குப்போக்கு கூறி பாடசாலை வரமறுக்கின்றனர் என்பது பாடசாலைமட்டக் கட்டாயக் கல்விக் குழுவின் கூற்று. சிலர் தனது தந்தையுடனேயே வேலைகள் செய்கின்றனர். இதனால் பெற்றோருக்கு கல்வி விழிப்புணர்வு இல்லை என்பதும் மற்றொரு காரணமாக அமைந்து காணப்படுகின்றது.

அவர்களைப் பாடசாலை வரவழைக்க வேண்டுமாயின் அவர்களின் வறுமையைப் போக்க வறுமை ஒழிப்புத் திட்டங்கள் அரசிடம் போதியளவு வினைத்திறனுடன் இல்லை.

இந்நிலையில் உண்மையான பயன்மிக்க வறுமை ஒழிப்புத் திட்டங்கள் அரசினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஏனைய வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களின் தற்போதைய வரவும் வறுமைகாரணமக ஒழுங்கீனமாக அமைந்து காணப்படுகின்றது என்பது வேறு சில ஆசிரியர்களின் கூற்று. ஆயின் அதைக் கண்காணிக்கும் அமைப்புக்களும் தற்போது பலமிக்கதாயில்லை. எப்பதான் அவர்களை வரவழைத்துக் கொண்டுவந்தாலும் அவர்களை உரிய முறையில் அணுகும் நேர்மனப்பங்கு உடைய ஆசிரியர் குழாம் உள்ளதா? இவைபோன்ற கேள்விகளுக்கு சரியான விடை கிடைக்கும்போதுதான் கட்டாயக் கல்வி தொடர்பான சிந்தனை பயன்மிக்கதாய் அமையும்.

வலயமட்டத்தில் இயங்குகின்ற கட்டாயக் கல்விக் குழு வினைத்திறன் அற்று இருப்பதால் இடைவிலகும் மாணவர் கட்டாயக் கல்விக்குழு வினைத்திறன் அற்று இருப்பதால் இடைவிலகும் மாணவரை பாடசாலை கொண்டுவருவது மிகவும் சிரமமாக உள்ளது. இதற்கு வலய மட்டக் குழுக்களுடன் பாடசாலைக்குள்ள தொடர்பும் வினைத்திறன் மிக்கதாய் அமையவேண்டும். மேலும் மாணவப்பருவத்தில் ஏற்படும் நோய்கள், போர் முதலிய காரணங்களினால் ஏற்படும் இடப்பெயர்வு, பெற்றோர் இழப்பு, குடும்பப் பிரச்சினைகள், பாடங்களில் நாட்டம் அற்றிருத்தல், ஆசிரியர் முதலியானோர் தவறான தண்டனை முறைகள், இளமையில் சிறை செல்லல், குற்றவாளியாக்கப்படல், உடல் உளரீதியான பாதிப்புக்கள், பாடசாலை வசிப்பிடம் ஆகியவற்றுக்கிடையிலான அதிகதூர இடைவெளி, பாடசாலையில் வசதி வாய்ப்புக்கள், இனமத மொழி, சாதிபோன்ற சமூக வேறுபாடுகள் என்பன கட்டாயக்கல்வி தொடர்பான திட்டங்களுக்கு தடையாகவுள்ளன.

### யாழ்ப்பாணத்தில் கட்டாயக்கல்வி அமுல்படுத்தல்

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை பாடசாலையில் இருந்த மாணவர் இடைவிலகுவது முக்கிய பிரச்சினையாக உள்ளது. அவற்றிற்கான காரணங்களை ஆராய்கின்றபோது பிரதானமாக அமைவது பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலை, யுத்தம், நடத்தைப் பிறழ்வுகள், அதிபர், ஆசிரியரின் பொருத்தமற்ற வகிபாகம், பாடசாலைகளுக்கிடையிலான தூரம், தவிர ஏனைய குடும்பக் காரணிகள், தற்போது அதிகரித்துவரும் கலாசார சீரழிவுகள், போரினால் ஏற்பட்ட இடப் பெயர்வுகள் குடும்பச்சிதைவு நிலைகள், பெற்றோர்களை இழத்தல், சிறுவர் துஸ்பிரயோகம் என்பனவும் கட்டாயக் கல்விக்குத் தடையாக உள்ளது.

இலங்கையில் கல்விவாய்ப்பை வேண்டிநிற்கின்ற மாணவர் சமுதாயம் பல்வேறு தடைகளைத் தாண்டியே பாடசாலை வரவேண்டியுள்ளது. அவ்வாறான பல தடைகள் இன்றும் மாணவர் சமுதாயத்தில் பரவலாகக் காணப்படுகின்றது. அந்த அடிப்படையில் அத்தடைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தினார்கள்.

உடல் குறைபாடுகள்,
உளக்குறைபாடுகள்,
சமூகக்குறைபாடுகள்.

**பா.பாலகணேசன்,**
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி

### உடல் குறைபாடுகள்

போசாக்கு இன்மை காரணமாக நோய் வாய்ப்படுகின்ற பிள்ளைகள் பாடசாலைக் கல்வியை குறித்த வயதில் பெற முடியாமல் போவதை நாம் அவதானிக்க முடியும். அந்தவகையில் இங்கு கட்டாய கல்வி வயதுப் பிரிவு மாணவரிடையே பின்வரும் இடர்பாடுகளை அவதானிக்க முடிகின்றது. தொற்றுநோய்கள், போசாக்கு குறைபாட்டு நோய்கள், தொற்று நோய் அல்லாத குறைபாட்டு நோய்கள் இவை பாடசாலை மாணவர்களை மிகமோசமாகப் பதித்து, அவர்களின் இடைவிலகலுக்கும் காரணமாய் அமைந்துவிடுகின்றன. அவற்றைப் போக்க ஆசிரியர் மாணவர்களுக்கு சுகாதாரப் பழக்க வழக்கங்களை போதிப்பதன்மூலம் அவ்வாறான நோய்களிடம் இருந்து மாணவர்களைக் காப்பாற்றுவதுடன் இடைவிலகலையும் குறைத்துக்கொள்ளலாம்.



### உளக் குறைபாடுகள்

பல குறைபாடுகளுக்கு உளநோயே காரணமாக அமைவதாக மருந்துவர்கள் குறிப்பிடுவார். அந்தவகையில் இப்பாடசாலை செல்லும் கட்டாயக்கல்வி வயது பிள்ளைகளிடம் பின்வரும் உளக்குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன. அமைதியின்மை, கற்றல் கவனம் செலுத்தமுடியாமை. சுயகட்டுப்பாடின்மை, அசாதாரண நடத்தை, மனவெழுச்சி சமநிலை அற்ற தன்மை. இவ்வாறான ஒழுக்கக்குறைபாடு உள்ள பிள்ளைகளை இனங்காண அவர்களிலே பின்வரும் பண்புகளை அவதானித்து சீர்செய்வதன்மூலம் சரியான வழியில் அவர்களை வழிநடத்தலாம். இவ்வாறான மாணவர்கள் கற்றலில் இடர்படுவார், கற்றவற்றை விரைவில் மறந்துவிடுவார். கற்றலில் கவனம் செலுத்தார், ஒதுங்கியிருப்பார், ஏனையோர்கூறுவதை செவிமடார். வகுப்பறையில் இருந்து இலகுவாக திசை திருப்பப்படுவார். அதிகம் கோபம்கொள்வார், பலவீனமாக இருப்பார், எந்த வேலையையும் பூர்த்திசெய்யார்.

### உளக்குறைபாட்டிற்கான காரணங்கள்

மேற்கூறப்பட்ட உளக்குறைபாட்டுக்கான காரணங்களாக பின்வரும் காரணங்களைப் பட்டியல்படுத்துவர் உளவியலாளர்கள். வறுமை, பாதுகாப்பு உணர்வின்மை, அன்பு கிடைக்காமை, கணிப்பு கிடைக்காமை, நோய் பாதிப்பு, கொடுந்தண்டனை, வேலைக்கு அமர்த்தப்படல், பெற்றோரை பிரிந்திருத்தல், போர்ச் சூழல், தவறான வழிநடத்தல், சமூக இசைவாக்கத்திற்கு சந்தர்ப்பம் இன்மை, பாரபட்சம் காட்டப்படுதல், வாய்ப்பு மறுக்கப்படல் ஆகியவையாகும்.

### உளச்சுகத்தைக் குறைக்கும் பாடசாலைக் காரணிகள்

ஆசிரியரின் அன்பு கிடைக்காமை, பாதுகாப்பு உணர்வின்மை, ஆசிரியர் கவனிப்புக்கிடைக்காமை, மாணவர் ஆசிரியர்களினால் புறக்கணிக்கப்படல், பொருளாதார ஏற்றத்தாழ்வு, அதிபர், ஆசிரியரினால் வழங்கப்பட்ட உடல் ரீதியான தண்டனை, பாரபட்சம் காட்டப்படல், தவறான தீர்ப்புக்கு ஆளாதல், சமூக ஏற்றத்தாழ்வு, சிறுவர் துஷ்பிரயோகம் போன்றனவாகும்.

### சமூகக் குறைபாடு

ஒரு மாணவனின் கற்றல் சூழலில் சமூகம் முக்கிய பங்குவகிக்கின்றது. அந்த அடிப்படையில் பின்வரும் சமூகத்தேவைகளை மாணவருக்கு பெற்றுக்கொடுப்பதன்மூலம் அவர்களை ஆசிரியர் சரியாக வழிபடுத்தலாம்.

### கட்டாயக் கல்வியை வினைத்திறனுடன் அமுல்படுத்த சில விதப்புரைகள்

#### உளக்குறைபாடுள்ளோரை வழிநடாத்த ஆசிரியர் கையாளவேண்டிய முறைகள்

அன்பு பரிவுடன் மாணவர்களை நடாத்துதல் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துதல், மகிழ்ச்சிகரமான பாடசாலைச்சூழலை ஏற்படுத்தல், குறைபாடு உள்ள மாணவர்கள் ஏனைய மாணவர்களுடன் சுயமாகவும், உற்சாகத்துடனும் செயற்பட வழி ஏற்படுதல், நற்பழக்க வழக்கங்களைப் பின்பற்ற வழிசெய்தல், செயற்பாட்டை, திட்டமிட்ட விளையாட்டை முன்னிலைப்படுத்திய கற்பித்தல் முறைகள் ஊடாக மாணவர் தேர்ச்சி அடைய பாடங்களைத் திட்டமிடுதல.

தீவிர உளக்குறைபாடு உள்ளோருக்கு, உளவளத்துணை வழங்கல், சார்ந்த வழிமுறைகளைக் கையாளுதல், உளமருத்துவரை நாடல்.

### சமூகக் குறைபாட்டைத்தீர்க்க ஆசிரியர் கையாள வேண்டிய முறைகள்

ஆசிரியர் மாணவருக்கு முன்மாதிரியாக நடத்தல், குழு வேலைகளில் ஈடுபடல், குழு விளையாட்டுக்கள் நடாத்துதல், சமூகப் பண்புகள் மேலோங்கச் செய்யும் சிறுவர் கதை கூறல். இவ்வாறான பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வுகளை முன்வைத்த போதும், காத்திரமான தீர்வு கிடைக்கப் பெறவேண்டுமெனில் அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள் பொது அமைப்புக்கள், பொதுமக்கள் ஆகியோரது உளப்பூர்வமான ஒத்துழைப்பும் அயராத இடையறாத முயற்சியும் அவசியம் ஆகும்.

அந்தவகையில் சமூகக் குறைபாட்டைத் தீர்க்க ஆசிரியர் மாணவரிடம் அன்பு உடையவராய் இருத்தல், மாணவர்களின் அன்பிற்கு பாத்திரமானவர்களாய் இருத்தல், புரிந்துணர்வுடன் செயற்படுவார், அயலவர்களை மதிப்பார். பொருத்தமான சந்தர்ப்பங்களில் விட்டுக்கொடுப்பார், எவரையும் கீழானவராக மதிப்பிடார், யாவருக்கும் உதவுவார். இந்தநிலையில் யாழ்ப்பணத்தில் கட்டாயக்கல்வியை முன்னெடுக்க அதற்குத் தடையான காரணிகளில் ஒன்றை இழிவாக்க முயன்றபோது அது உரிய பலனைத் தரவில்லை. இவ்வாறான இடைவிலகிய மாணவருக்கென திறந்தபாடசாலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றின் வினைத்திறன் மிகவும்

(21 ஆம் பக்கம் பார்க்க)

# தாயின் சோகம்





குழந்தைப்பாசம் என்பது உயிரினம் முழுமைக்கும் பொதுவானது. தன் குழந்தையையே தன்னுடைய செல்வம், இன்பம், பேறு, அனைத்தினுடையவும் வடிவாகவும் உருவாகவும் ஒரு தாய் காண்பது அவளுடைய இயற்கை. தன்னுடைய குழந்தை சீரும்சிறப்புமாக வளர்ந்து பிறர் மெச்சும்படியாக வாழ வேண்டும் என்பதற்கு மேலான நோக்கம் ஒன்று எந்தத் தாய்க்கும் இருப்பதில்லை. இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு ஒரு தாய் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயங்குவதில்லை. இது நாம் வாழ்க்கையிலே காணும் அனுபவம். இந்த அனுபவத்துக்கு ஓர் அழுத்தமான வடிவுகொடுத்து ஒரு கவிஞன் கவிதை யாகப் படைப்பானேயானால், அது என்றென்றும், எந்தத் தாயும், ஏன் எந்தத் தந்தையும்கூட படிக்க விரும்புவதாக அமைந்துவிடுகிறது.

'கண்ணம்மா - என் குழந்தை' என்ற சுப்பிரமணிய பாரதியாரின் பாடலை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம்.

"சின்னஞ்சிறு கிளியே - கண்ணம்மா!
செல்வக்களஞ்சியமே!
என்னைக் கலிதீரத்தே - உலகில்
ஏற்றம் புரியவந்தாய்!"

என்ற பாட்டு எந்தத் தாயினுடைய உள்ளத்தையும் எதிரொலிப்பதாகவே அமைந்துவிடுகிறது. 'சின்னஞ்சிறு கிளியே' என்ற சொல்லாட்சியில் தான் எத்துணைக் கனிவும் பரிவும், இன்பமும் மண்டிக்கிடக்கின்றன! அந்தச் சின்னஞ்சிறு கிளிதான் அதன் தாயின் செல்வக் களஞ்சியம் என்பதை எந்தத் தாயும், எந்தக் காலத்திலும் மறுக்கமாட்டாள். அந்தச் சின்னஞ்சிறு கிளிதான் தாயைக் கலிதீர்த்து, ஏற்றம் புரியவந்தது என்பதிலும், சந்தேகமில்லை. 'பிள்ளைக் கனியமுதே' என்றும் 'பேசும் பொற்சித்திரதே!' என்றும் அந்தக் குழந்தையைக் கவிஞன் குறிப்பிடும்பொழுது ஒவ்வொரு தாயும் தன் குழந்தையை எப்படிக் குறிப்பிட விரும்புகிறாளோ அப்படியே கூறிவிடுகின்றான்.

இதே தாய்மை உணர்ச்சியை மற்றொரு கோணத்திலிருந்தும் பார்க்கலாம். பெற்றோர்கள் செல்வம் நிறைந்தவர்கள். குழந்தையைச் சீரும் சிறப்புமாக வளர்ப்பதற்கு எல்லா வசதிகளும் பெற்றவர்கள். குழந்தையை யும் கூர்த்த மதியுடனும் திறமையுடனும் வளருகிறது. நன்றாகப் படிக்கிறது. நல்லொழுக்கம் உடையதாய் இருக்கிறது. வளரவளர அண்டை அயலாரும் நகரத்தாரும் நாட்டாரும் மெச்சும் படியாகவும் போற்றும்படியாகவும் வளர்ந்து வாலிப வயதை எய்துகிறது. அவ்வாலிபன் ஒரு நாள் இறந்து விடுகிறான். தன் மகனுடைய மரணத்தை ஒரு தாய் எப்படி நோக்குவாள்? அவளுடைய உள்ளத்தில் என்னென்ன எண்ணங்களும் உணர்ச்சிகளும் தோன்றும்? அவனைக் கருவுற்றதிலிருந்து அவன் மாண்டுபோன வரையில் அவன் வாழ்வில் நடந்த அனைத்தும், அவ்வப்போதுதான் பெற்ற அனுபவமும் உணர்ச்சிகளும், அவள் மனக்கண்முன் நிழற்படம் போல் தோன்ற அவற்றை எண்ணி எண்ணி நெஞ்சம் நைந்து உள்ளம் உருக, அவற்றையெல்லாம் பன்னி பன்னிப் பேசுவது அந்தத் தாயினுடைய இயற்கையான செயல்.

அவனுடைய பண்பு, குணநலன்கள், அவனுடைய சாதனைகள், சிறு குழந்தையாய் இருக்கும்போது அவன் சொன்னவற்றிலிருந்தும் செய்தவற்றில் இருந்தும் அவன் எப்படி வளர்ந்து வாழ்வான் என்றுதான் கண்ட கனவு-கள் நனவானது. அவை அனைத்தும் சரிந்து வீழ்ந்து மடிந்து மண்ணோடு மண்ணாய்ப் போய்விட்டது. ஆகிய அனைத்தும் அவள் உள்ளத்தையும் அழுத்திக் கசக்கிப் பிழிந்து அவளுடைய உயிரையும் உலைக்கும்.

அந்த அனுபவத்தை ஒரு கவிஞனோ, எழுத்தாளனோ, எழுத்திலோ வடித்து விட்டால் அதுவும் அமரத்துவம் பெற்றுவிடுகிறது. ஏனெனில் தாய் இருக்கும்போது மகன் மரணமடைவது இவ்வுலகில் என்றும் நடந்து கொண்டிருப்பதுதான். ஆனால் தற்பொழுது இளைஞர்கள் தமது செயற்பாடுகள் காரணமாக மரணத்தை விரும்பி விரைந்து அழைப்பதுதான் வேதனை.

வாலிபப் பருவத்தில் பொழுபோக்கு என்பது நேரத்தை வீணடிப்பதாக அமைந்துவிடுகிறது. பொதுவாகக் கலியாட்டத்தில் ஈடுபடுவதுதான் பொழுதுபோக்கு என்றாகிவிட்டது. போதைவஸ்துகள் பயன்பாடும், மதுப்பாவனையும் தகாத பெண் உறவுகளும் பொழுதுபோக்குகளா? என்று இளைஞர்கள் சிந்திக்கவேண்டும். வாழ்க்கையை அழித்துக்கொள்வதற்காக யாரும் பிறப்பதில்லை.

இளைஞர்களின் 'வாகன ஓட்டம்' எமதர்மராஜனின் பதிய வடிவ வருகை யாக அமைந்துள்ளது. வாகன ஓட்டம் என்பது சற்றுத்தடுமாறினாலும் உயிரை நீக்கிவிடும் வேகமாகவும் நியதிகளை மீறியும் வாகனம் ஓட்டவிரும்பும் இளைஞர்கள் சிந்திக்கவேண்டும். உங்கள் வேகமும், சமிக்ஞைகளைக் கண்டு கொள்ளாத்தன்மையும் உயிரைப் போக்குவது இறுதி முடிவு. ஆனால் உடல் உறுப்பை என்பது உயிருள்ளவரை நிலைக்கும் துன்பம் அல்லவா?

"ரயில் கடவையில் கார் விபத்து நாற்பது வயது பொறியியலாளர் மரணம்" என்ற செய்தி அறிந்ததும் வேதனைப் படாதவர் யாராவது இருந்தார்களா? மற்றவர்களுக்கே இப்படியென்றால் அவரது தாய், மற்றும் குடும்பத்தினரின் துன்பத்திற்கு யார் ஆறுதல் கூறமுடியும்.

மகனின் மரணத்தில் தாயின் உணர்வு வெளிப்பாட்டை இலக்கியங்கள் அழகாகப் படம்பிடித்துள்ளன. இவ்வகையில் கம்பன் காவியத்தில் ஒரு காட்சியைப் பார்க்கலாம். இராவணன் மகன் இந்திரஜித் இலக்குவனால் கொல்லப்பட்டுவிட்டான். தலையற்ற அவனுடைய உடலைப் போர்க்களத்திலிருந்து தேடி எடுத்துக் கொண்டு இராவணன் இலங்கை புகுகிறான். தாயாகிய மண்டோதரி அந்த உடலின் மேல் வீழ்ந்து புலம்புகிறாள். அவளுடைய புலம்பலில் சில இந்தத் தாய்மை உணர்ச்சியை என்றும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும். இந்திரனை வென்று இந்திரஜித் என்று பெயர் பெற்றவன் தன்மகன். அத்தகைய மகனை ஈன்றதற்குத்தான் தவம் செய்திருக்க வேண்டும் என்று எண்ணியவள் அவள். "இளம்பருவத்திலேயே இந்திரனை என் மகன் வெல்லக்காண்பதற்கு ஒரு தவம் செய்திருந்தேன். ஆனால் அதே மகனுடைய தலையற்ற உடலை இப்போது நான் காண்கிறேனே. அதற்கு என்ன தவம் செய்தேன்?" எனறு புலம்புகிறாள்.

'கலையினால் திங்கள் போல
வளர்கின்ற காலத்தே உன்,
சிலையினால், அரியை வெல்லக்
காண்பது ஓர் தவம் முன் செய்தேன்;
தலை இலா ஆக்கை காண
எத்தவம் செய்தேன்! அந்தோ?'

என்ற கம்பனுடைய வரிகளிலே ஒரு தாயினுடைய எத்தனை உணர்ச்சிகள் வெளிப்படுகின்றன? தன்னுடைய மகனுடைய திறல்கண்டு தான் கொண்டிருந்த கடந்த காலப் பெருமிதம் ஒருபுறம். அவனை இழந்து தவிக்கின்ற இன்றைய அவலநிலை ஒருபுறம். "அத்தகைய அரிய புதல்வனைப் பெறுவதற்கு ஒரு தவம் செய்திருந்தேன்; அவனுடைய தலையற்ற உடலை இன்று காண்பதற்கு என்ன தவம் செய்தேன்?" என்ற கேள்வியில் எத்தனை சோகம் தேங்கிக் கிடக்கிறது? மகனை இழந்தது மாத்திரமல்ல; இறந்த மகனுடைய முகத்தைக்கூட இறுதியாகக்காண்பதற்கு ஒரு வாய்ப்பில்லை. இந்த நிலையில் தாயினுடைய சோகம் எல்லா எல்லையை யும் கடந்துபோவது இயற்கையே.

இப்போது நட்டில், நமது ஊரில் நிகழும் இளம்வயது மரணங்கள் தரும் வேதனை விதிவசமானதா? அல்லது விதியை வலிந்து தேடுவதன் விளைவா? என்று தணியும் எங்கள் தாய்மாரின் கண்ணீர்.

**- காத்தார் -**

(தொடரும்)

# நேசம் மரணத்தைப்போல் வலிது!!!



காதல் இனியது, காதல் கொடியது, காதல் மெல்லியது, காதல் வலியது. வீரனை கோழையாக்குவதும் அதுதான் கோழையை வீரனாக்குவதும் அதுதான். ஆண்டி முதல் அரசன் வரை அத்தனைபேர் உள்ளத்திற்குள்ளும் ஊடுருவி, உயிரைத் திருகி ஆட்டிப்படைப்பதும் அதுதான். மனிதர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து ஜீவராசிகளுக்கும் காதல் உணர்வுகள் இருக்கின்றன.

சில வகைப் பறவைகளையும், விலங்குகளையும் உற்றுக் கவனித்தால் தெரியும். அவை காதலுற்றுக் கூடிக்கலந்து இனவிருத்தி செய்கின்றன. அவ்வளவுதான். ஆனால் மனித சமூகத்தில் காதல் என்பது எத்தனையோ விஷயங்களை நிகழ்த்துகின்றது. ஒருவன் ஒரு பெண்ணைக் காதலிக்கத் தொடங்கிவிட்டால், அவனுடைய பேச்சில் நடை உடை பாவனையில் மெருகேறிவிடுகின்றது. தனித்திறமைகளை வெளிப்படுத்துவதற்கு வேகம் பிறக்கிறது. புதிய உற்சாகமும் உத்வேகமும் வாழ்க்கையை விறுவிறுப்பாக்கி விடுகின்றன.

தனிமனித வளர்ச்சி, சாதனைகள், ஒட்டுமொத்த உலக முன்னேற்றம் அனைத்திற்கும் காதல்தானே மையப்புள்ளியாக இருக்கின்றது. சிலரின் காதல் கனிந்து, திருமண மேடைகளில் அது அரங்கேறினாலும்கூட, அவர்களின் இல்லற வாழ்க்கை என்பது கசப்பான அனுபவங்களின் தொகுப்பாக இருக்கிறது. காதல் தெய்வீகமானது, புனிதமானது என்றெல்லாம் சொல்கின்றோமே. இருந்தும் ஏன் சிலரின் காதல் வாழ்வில் பிரச்சினைகள், போராட்டங்கள், பிரிவினைகள்? அவர்களிடம் 'சரியான புரிதல்' இல்லை. நாளடைவில் ஒருவர்மீது ஒருவருக்கு சந்தேகம் கிளம்புகிறது. எடுத்ததற்கெல்லாம் வாக்குவாதங்கள்.

சிறுபொழுது பிரிய நேர்ந்தாலும் கண்கள் தேடும் மனம் வாடும். அதனால்தான், "நேசம் மரணத்தைப்போல் வலிது. நேச வைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது. அதன் தழல் அக்னித் தழலும், அதன் சுவாலை சுடும் சுவாலையுமாய் இருக்கிறது" என்றான் சாலமோன் ஞானி. அது கண்களின் தேடல் அல்ல் உள்ளத்தின் தேடல், உயிரின் தேடல். இன்று பலர், காதலை ஏதோ விளையாட்டாக எடுத்துக்கொள்கிறார்கள். நிறையப்பேர் அதை ஒரு வியாபாரமாகப் பார்க்கிறார்கள்.

மனித சமூகத்தை நேசிக்கவேண்டும். காதல் புனிதமானது. அதை களங்கப்படுத்திவிடக் கூடாது. காதல் என்னும் கோவிலில் அன்பென்னும் தீபம் ஏற்றுங்கள். வாழ்க்கையைக் காதலியுங்கள். குடும்பத்தைக் காதலியுங்கள். நட்பைக் காதலியுங்கள். காலமெல்லாம் கொண்டாடுங்கள்.




# நலிவுறும் நட்பெனும் சமூகப்பண்பியல்

**"இயந்திரயமான இவ்வுலக வாழ்வில் மனிடப்பண்புகள் பல மறு பிறவி எடுத்துள்ளன. காமக்கடலின் மேல் அன்று மிதந்த காதலெனும் கப்பல் இன்று காதலிற்கு சிறிதேனும் அர்த்தமின்றி காமக்கடலில் முற்றாக மூழ்கிவிட்டன. உணர்வுகள் நிலைத்திருக்க சுயநலத்திற்கப்பால் முன்பிருந்து சுடர்விட்ட நட்பெல்லாம் சுட்டெரிக்கும் சுயநலத்திற்காக சுடரை அணைத்து சுருண்டுவிட்டன. எதிலும் உண்மையில்லை, எங்கும் உண்மை அன்பில்லை. உணர்வுகள் அற்ற உருமாறிய மாந்தர்களாக எமது சமூகம் பண்பியல் அம்சங்களில் பலமிழந்துவருகின்றது. மனிதனை மனிதன் மதிக்கின்ற பண்புகள் எல்லாம் இன்று பழியேறமறுக்கின்றது. ஆகவே இதுதொடர்பாக வாரமொரு வாழ்வியற் சிந்தனையிலேனும் சற்று சிந்திப்போம்."**

பொதுவாக நட்பு தினம் என்று கூறும்போது இருவருக்கிடையே ஏற்படக் கூடிய நட்பின் பரிமாணமே கருத்திற் கொள்ளப்படுகின்றது. இது ஆண் - ஆணிடையே, பெண் - பெண்ணிடையே, ஆண் - பெண்ணிடையே ஏற்படலாம்.

ஒவ்வொரு மனிதருக்கும் அவருடைய வாழ்க்கையில் நம்பகமான ஆலோசகர் தேவைப்படுகிறார். முக்கியமாக நண்பர்கள் தேவைப்படுகிறார்கள். ஒருவருடைய சிந்தனைகளையும், குணாங்களையும் பட்டைதீட்ட, உதவி செய்ய அவரை நன்கு உணர்ந்த ஒரு நண்பர் தேவைப்படுகிறார். பெற்றோர்கள், மனைவியைவிட நமது துக்கத்திலும், சந்தோஷத்திலும் பங்கு கொள்வதில் நண்பர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தாயிடமும், மனைவியிடமும், தந்தையிடம்கூட ஆலோசனை செய்யமுடியாத பல விடயங்களை நண்பர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் ஒரு தெளிவை, தீர்வை பெறலாம். சில சந்தர்ப்பங்களில் பிறருடன் மேற்கொள்ளப்படும் நட்பைப் போலவே குடும்ப அங்கத்தவர்களிடையே நட்பார்த்தமான உறவுகள் ஏற்படுவதுண்டு. உலகில் உண்மையான நட்புக்கு ஈடு, இணை எதுவும் கிடையாது என பெரியவர்கள் குறிப்பிடுவார்கள். உண்மையான நட்பின் முன் தமது உள்ளக்கிடக்கைகளைப் பகிர்ந்து கொள்ளும்போது மனதில் ஏற்படும் அமைதியை அளவிடமுடியாது. பிரச்சினைக்குரிய ஒரு விடயத்தை அல்லது தீர்வு காணவேண்டிய விடயத்தை மனதுக்குள் அடக்கி வைத்துக்கொள்வதனால் விமோசனம் கிடைக்கப்போவதில்லை மாறாக மன அழுத்தங்களும், விபரீதங்களுமே ஏற்பட இடமுண்டு. உண்மையான நட்புடன் அவற்றைப் பகிர்ந்து கொள்கையில் சில சந்தர்ப்பங்களில் எமக்குக் கிடைக்கும் ஆலோசனைகள் விலைமதிக்க முடியாமல் இருக்கலாம். அதேநேரம் சில நட்பினை களங்கப்படுத்தாமலும் இருப்பதில்லை. சாதி, இனம், மொழி, பால் பாகுபாடு இன்றி அன்பின் அடையாளமாக கொண்டாடப்பட்டுவரும் இந்த நண்பர்கள் தினத்தில், தலைமுடி நரைத்தாலும் நண்பா உன்னிடம் நான் கொண்ட நட்பு இன்னும் மாறவில்லை என்று உலகெங்கும் உள்ள வயதானவர்கள்கூட இன்றைய தினத்தில் சந்தித்து தங்களது வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். துன்பம் வரும்வேளையில் கடவுளை நினைக்கிறோம். அடுத்ததாக உதவிகேட்க நல்ல நண்பர்களைப் பற்றிய எண்ணம் நம்மையும் அறியாமல் நம் மனதில் உதயமாகிறது. பரஸ்பரம் அன்பை மட்டும் அல்லாமல் துன்பத்தையும் பகிர்ந்துகொள்ளும் இந்த ஆற்றல் நட்புக்கு மட்டுமே உரிய சிறப்பாகிறது. ஆனால் பலர் நட்பின் மகத்மீகத்தை சரிவர உணர்ந்து கொள்வதில்லை.

இதுநாள்வரையிலும், நண்பர்களே எனக்கு இல்லை என்று யாரும் கூறிவிடமுடியாது. நட்பு, தோழமை என்பது இருவர் இடையேயோ பலரிடமோ ஏற்படும் ஒரு உறவாகும். வயது, மொழி, இனம், பால், நாடு என எந்த எல்லைகளும் இன்றி, புரிந்துகொள்ளுதலையும், அனுசரித்தலையுமே அடிப்படையாகக் கொண்டது. நண்பர்கள் தங்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை மறந்து ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வார்கள். நண்பர்கள் ஒருவருக்கு ஒருவர் உண்மையாக நடந்து கொள்வார்கள். இன்பத்திலும் துன்பத்திலும் தானாகவே முன்வந்து உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வார்கள்.

ஒரு நாணயத்தில் இரண்டு பக்கங்களைப்போல நண்பர்களையும் இரண்டு கோணங்களில் அவதானிக்கலாம். அவர்கள் நல்ல நண்பர்கள், கெட்ட நண்பர்கள். நல்ல நண்பன் தனது நட்பை முதலில் எவ்வித பேரம் பேசலும் இன்றி, முன் நிபந்தனையின்றி விரிந்த மனப்பான்மையுடன் கருமித்தனம் ஏதுமின்றி அள்ளிவழங்கத் தயாராக இருப்பான்.

எனவே, அவன் தனது நட்பை நாடி வரும் மனிதர்களை நோக்கி முன் நிபந்தனை - உறுதிப்பிரமாணம் என்பனவற்றின் அடிப்படையில் நகருகிறான். ஆகவே உறுதிப் பிரமாணத்தின் அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படும் நட்பே நித்தியமானதும், நிரந்தரமானதுமாகும். மனித வாழ்வில் நட்பு என்பது விசித்திரமானது. விந்தையானது. அதனால் ஏற்படும் பாதிப்பு ஆழமானது. பலரது வாழ்வில் பெரும் திருப்பங்களுக்குக் காரணமாகவும் அது அமைகிறது. பெற்றோர்களது அன்பு உற்றார் உறவினர்களது பாசம், நேசம் சாதிக்கமுடியாததை நட்பு சாதித்து விடுகிறது.

பெற்றோர்களுக்குப் பிள்ளைகளை சீர்திருத்த முடியாத கையாலாகாத நிலை உருவாகும்பட்சத்தில் அவர்கள் பிள்ளைகளின் நண்பர்களை அணுகி தமது பிள்ளைகளை சீர்திருத்த முனைவது அன்றாடவாழ்வில் நாம் சந்திக்கும் நிதர்சன நிகழ்வுகளாகும். பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கு இடையில் உள்ள உறவில் மரியாதைப் பண்பின் காரணமாக அல்லது வெறுப்பின் காரணமாக விரிசல் அதிகரிக்க, அதிகரிக்க நண்பர்களுடனான நட்பு படிமுறைரீதியாக அதிகரிப்பதையும் அவதானிக்கிறோம். நட்பு என்பது ஒரே அச்சில் வார்க்கப்பட்ட பொருள்களைப் போல அமைந்துவிடுகிறது. அதாவது ஒரு நண்பனின் மறுஉருவமாக அடுத்தவன் மாறிவிடுகின்றான்.

சிந்தனைப்பாங்கு பண்பாடு, நடத்தை, நடை, உடை, பாவனை போன்ற சகல விவகாரங்களிலும் ஒருவன் தனது நண்பனை பிரதிபலித்துக் காட்டுகிறான். அநேகமாக நட்புகொள்ளல் என்பது இத்தகைய அறிவுப் பின்னணியும் இன்றியே ஆரம்பமாகிறது. கல்வி வாழ்க்கையிலும் வியாபார கொடுக்கல் வாங்கல், தொழில்சார்ந்த நடவடிக்கைகளின்போது உருவாகும் நட்பு குறுகிய நலன்களைப் பின்னணியாகக் கொண்டு உருவாகுகிறது. அறிவுத்தேடல் தொழில் பணம், பெண் போன்றவை இலக்காகக் கொள்ளப்படுகின்றன. அவ்வாறு பொழுது போக்கு பின்னணியை கொண்டு எழுகின்ற நட்பு சமூக தீமைகளுக்கு வழி வகுக்கின்றன. புகைத்தல், போதைப் பொருள் பாவனை, பாலியல் வல்லுறவு, கொலை, கொள்ளை, நாசகார நடவடிக்கைகள் முதலானவை கெட்ட நண்பன் எனும் நுழைவாயில்மூலம் குடும்பத்தில் நல்லவனாக இருந்த மனிதனிடமும் குடிகொள்கிறான்.

பின்னர் பெற்றோரும் மற்றோரும் கன்னத்தில் விரல்வைத்து நெற்றி சுருக்கி ஆச்சரியத்துடனும், கவலையோடும் வினா எழுப்புகின்ற அளவுக்கு அந்தப் பிள்ளை கெட்டுப் போய்விடுவான். எனவே பெற்றோர் பிள்ளைகளுக்கு நல்ல நட்பைப் பெற்றுத்தர முயற்சிப்பதோடு துரதிர்ஷ்டவசமாக பிள்ளைகளுக்கிடையில் கெட்ட நட்பு அமைந்துவிட்டால் மாற்று பரிகாரமாக நல்ல நட்பை பெற்றுக் கொடுக்க முனையவேண்டும்.

---

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

### குறுக்கெழுத்துப் போட்டி - 654

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | | 9 | | 11 | |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| | 32 | | 34 | | 36 |

### குறுக்கெழுத்துப் போட்டி 652 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சி | 2 ன் | 3 சோ | 4 அ | 5 பே | |
| 7 த் | 8 ச | 9 கோ | 10 ர | 11 ன் | 12 தி |
| 13 தி | 14 ர | 15 ட் | 16 சி | | 18 க் |
| 19 ரா | | 21 ரா | | 23 வ | 24 கு |
| 25 ப | 26 பா | 27 தீ | 28 வ | 29 ம் | 30 த |
| 31 தி | 32 ரி | 33 வு | | 35 பா | 36 ல் |

**மேலிருந்து கீழ்**

01. விஸ்வாமித்திரரின் பெண்.
3. ஒரு தாளக் குறிப்பு அல்லது தாளக் கணக்கு. (குழம்பியுள்ளது)
5. மிகவும் உறுதியானது.
14. இதற்கு கண்ணும் தெரியாது. காதும் கேளாது. (குழம்பியுள்ளது)
18. கடிதம் அல்லது பத்திரம்.
22. ஒரு யுத்த விமானம்.

**இடமிருந்து வலம்**

01. ஏற்றத் தாழ்வின்மை.
13. அறிவு அல்லது சித்தம். (குழம்பியுள்ளது)
17. ஒரு நாடு.
19. சேர்க்கை. அணைப்பு.
22. குறிப்பால் அறி எனும் ஏவல்.
25. பருப்பதம் (திரும்பியுள்ளது)
28. இளையவள் திரும்பியிருக்கிறாள்.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 21.12.2015 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 654 தினமுரசு வாரமலர், - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம். தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.652 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.நியாமி,
கடற்கரை வீதி, நீர்கொழும்பு.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ப.வர்மிளா, கோண்டாவில், யாழ்ப்பாணம்.
02. ம.யானுசா, றெட்பானா, விசுவமடு.
03. கை.நவநீதன், உடப்பு, புத்தளம்.
04. எம்.வடிவேல், மாலுசந்தி, நெல்லியடி.
05. அ.கைலேஸ், பிரதான வீதி, நுவரெலியா.
06. எஸ்.றொபேட், தெல்லிப்பளை மேற்கு, தெல்லிப்பளை.
07. யோ.செந்துரன், கண்டி வீதி, சாவகச்சேரி.
08. கோ.காஞ்சனா, வெள்ளவத்தை.
09. சு.பவித்ரா, கைவேலி, புதுக்குடியிருப்பு.
10. எம்.எம்.அசாம், நிந்தவூர், மட்டக்களப்பு.



மிருதன்

# மீண்டும் நமீதா

தமிழ் படஉலகில் முன்னணி நடிகையாக இருந்த நமீதா நீண்டநாட்களாக தமிழ் படவாய்ப்பு இல்லாமல் இருந்துவந்தார். சமீபத்தில் உடல் எடையை குறைத்த நமீதா மலையாள படம் ஒன்றில் மம்முட்டியுடன் நடித்துவருகிறார். தமிழ் படங்களில் நடிக்கவும் பேச்சுவார்த்தை நடத்திவந்தார். இப்போது, பிரபு முக்கிய வேடத்தில் நடிக்கும் "மீன் குழம்பும் மண் பானையும்" படத்தில் நமீதாவுக்கு நடிக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதில் வெளிநாட்டு பெண்ணாக வரும் நமீதா பின்னர் தமிழ்நாட்டுக்கு வந்து தமிழ் பாரம்பரியத்தின் பெருமைகளை உணர்ந்து தமிழ் கலாசாரத்தை நேசிப்பதுபோன்ற வேடத்தில் நடிக்கிறார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழ் படத்தில் நடிப்பதால் நமீதா மகிழ்ச்சியில் உள்ளார்.



24



ஈட்டி

# காதலில் வென்ற ஜோடி..!

சில மாதங்களுக்கு முன்பு பிருத்விராஜ் நடிப்பில் வெளியான "என்னு நிண்டே மொய்தீன்" படம் பிளாக் பஸ்டர் ஹிட்டான விபரம் தெரியும்தானே.. அதன் வெற்றிக்கு முக்கிய காரணம் கேரள மக்கள் முழுவதும் அறிந்த மொய்தீன் - காஞ்சனமாலா ஜோடியின் அமரத்துவம் வாய்ந்த உண்மைக்காதலை படமாக்கியதுதான். சமீபத்தில் அவர்களை போலவே இன்னொரு ரியல் காதல் ஜோடியைப் பற்றிய ஆச்சரியமான செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

ஆனால் மொய்தீன் காதலைப்போல சோக முடிவாக இல்லாமல், மகிழ்ச்சியான விசயமாக இந்த ஜோடி பலவருடங்கள் கழித்து திருமண பந்தத்தில் வெற்றிகரமாக இணைந்துள்ளது. மொய்தீன்-காஞ்சனமாலா இருவரும் முறையே இஸ்லாம், இந்து மதத்தினர். மதரீதியாக எதிர்ப்புக் கிளம்பினாலும், எப்போது தங்கள் வீட்டார் சம்மதிக்கிறார்களோ அப்போதுதான் திருமணம் செய்துகொள்வது என பல வருடங்கள் வைராக்கியமாக இருந்தனர்.

ஆனால் படகு விபத்து ஒன்றில் மொய்தீன் இறந்துவிட, அவர் ஞாபகமாகவே இன்றுவரை திருமணம் செய்யாமல் வாழ்ந்துவருகிறார் காஞ்சனமாலா... இந்த நெகிழவைக்கும் உண்மைக்கதைதான் படமாக வெளியானபோது கேரளா மக்களில் ஏகோபித்த வரவேற்பை பெற்றது. பாபுமோன்-நஸீரா காதல் கதையும் கிட்டத்தட்ட இதே போலத்தான். இங்கே கிறித்துவர்-முஸ்லீம் மதப்பிரச்சினை. சிறுவயது நண்பர்களான இருவரும் வளர்ந்தபின் காதலில் விழுந்தனர். தங்கள் காதலை குடும்பத்திற்கு தெரியாமல் வளர்த்தனர்.

தங்களுக்கு வந்த வரன்களை தொடர்ந்து தட்டிக் கழிக்கவே, ஒருகட்டத்தில் இவர்களது காதல் விவகாரம் இருவீட்டாருக்கும் தெரியவந்தது. காதலுக்கு தடைபோட்டார்கள் பெரியவர்கள். இருந்தாலும் வைராக்கியமாக இருந்து காதலில் வெற்றிவாகை சூடி, இருதரப்பினர் சம்மதத்துடன் சமீபத்தில் திருமணத்தில் இணைந்துள்ளது இந்த ஜோடி. ஆனால் இந்தக் காதல் திருமணத்தில்முடிய 25 ஆண்டுகள் இந்த ஜோடி காத்திருந்ததுதான் ஆச்சரியம். இதுதான் தெய்வீக காதல் என்பதோ...?

# ஜெயப்ரதா - ஸ்ரீதேவி பனிப்போர்..!

எண்பது, தொண்ணூறுகளில் தமிழில் மட்டுமல்ல, அதை தொடர்ந்து இந்தியிலும் கொடிகட்டிப் பறந்தவர்கள் தான் ஸ்ரீதேவியும் ஜெயப்ரதாவும் இப்போது இருக்கும் நயன்தாரா, சமந்தாபோல, அப்போதே இருவருக்கும் யார் நம்பர் ஒன் என்கிற கடுமையான போட்டிகளும் நடந்தன. இந்த ரணகளத்திலும்கூட இவர்கள் இருவரையும் இந்தியில் தான் இயக்கிய "ஆக்ரி ரஸ்தா" படத்தில் ஒன்றாக நடிக்கவைத்து இவர்களுக்கிடையேயான பனிப்போரை முடிவுக்கு கொண்டுவர முயற்சிகள் எடுத்தார் இயக்குனர் கே.பாக்யராஜ். ஆனால் பலன்தான் கிடைக்கவில்லை.

அதன்பின் ஜெயப்ரதா அரசியலுக்கு சென்றுவிட, ஸ்ரீதேவியும் போனிகபூரை மணந்து செட்டிலாகி விட்டார். ஆனால் சமீபத்தில் நடைபெற்ற ஜெயப்ரதாவின் மகன் சித்துவின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்தினார் ஸ்ரீதேவி. அதுமட்டுமல்ல, ஸ்ரீதேவியை கட்டித்தழுவி தனது சந்தோசத்தை வெளிப்படுத்தினார் ஜெயப்ரதா.

இதன் பின்னணியில் இருந்தவர் ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர் தான் என்று சொல்லப்படுகிறது. எப்படியோ ஒருவழியாக இருவருக்கும் இடையேயான பனிப்போர் முடிவுக்கு வந்ததே அதுபோதும்.

பசங்க, வம்சம், 
இயக்குனர் பாண்டிரா
வருகிற 4ஆம் தேதி
றது. அடுத்து இவரது
இறுதிக்கட்ட வேலை
உள்ளது. இதையடுத்
படம் பெப்ரவரி 14ஆ
படங்களை தேனாண்
தனது படங்கள் தொ
வெளிப்படுத்தி உள்



# நான் ருசியாக சமைப்பேன்: சுருதிஹாசன் பேட்டி

சுருதிஹாசன் நடித்த வேதாளம் படம் சமீபத்தில் வெளிவந்தது. தொடர்ந்து அவர் சிங்கம்-3 படத்தில் நடிக்கிறார். இந்தியிலும், தெலுங்கிலும் தலா 2 படங்கள் கைவசம் உள்ளன. நடிப்பு தவிர இசை, பாடல், ஓவியம் போன்றவற்றிலும் திறமை காட்டி வருகிறார். அவருக்கு சமையலும் அத்துபடியாம். ருசியாக சமைக்க தெரியும் என்கிறார்.

இதுகுறித்து சுருதிஹாசன் அளித்த பேட்டி வருமாறு:- எனக்கு நன்றாக சமையல் செய்யவரும். படப்பிடிப்பு இல்லாமல் வீட்டில் இருக்கும்போது, சமையல் கட்டில்தான் என்னை பார்க்க முடியும். விதம் விதமாக சமைப்பேன். இட்லி, தோசை, வடைகள் சமைப்பதில் நான் ஸ்பெசல். வெளியில் ஓட்டல்களில் சாப்பிடும்போது ருசியாக இருக்கும் உணவுகள் பற்றி குறிப்பெடுத்துக் கொள்வேன்.

அவற்றில் என்னென்ன மசாலா சேர்த்து சமைக்கிறார்கள் என்பதை கேட்டு தெரிந்துகொள்வேன். வீட்டுக்கு வந்ததும் அதுபோல் சமைத்து பார்ப்பேன். சமையலில் ஆர்வம் இருந்தாலும் சமையலுக்கான பொருட்களை சரியான அளவில் சேர்ப்பது முக்கியம். அதில் குளறுபடி இருந்தால் ருசி போய்விடும்.

நான் கவனமாக இருந்து தேவையான அளவு மசாலாவை சேர்ப்பேன். சமைக்கும்போது எல்லா பொருட்களையும் சமையல் அறையில் கண்டபடி எடுத்து பரப்பிவைத்து இருப்பேன். அவற்றை எடுத்து மீண்டும் அடுக்கி வைப்பதுதான் எனக்கு பிடிக்காத விசயம், இவ்வாறு சுருதிஹாசன் கூறினார்.

# திகிலில் மீண்டும் நயன்தாரா

நயன்தாரா நடிப்பில் இந்த வருடம் மாயா, தனி ஒருவன், நானும் ரவுடிதான் ஆகிய படங்கள் வெளியானது. இப்படங்கள் வரிசையாக வெற்றி பெற்றன. இதனால் ஹாட்ரிக் நாயகி என்ற அந்தஸ்தை பெற்றிருக்கிறார்.

இதில் மாயா திகில் படம். நாயகிக்கு முக்கியத்துவம் கொண்டு எடுக்கப்பட்ட இப்படத்தில் நயன்தாராவின் நடிப்பு அதிகம் பேசப்பட்டது. தற்போது அது போல் ஒரு திகில் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார் நயன்தாரா. இப்படத்தை களவாணி, வாகை சூடவா, நைய்யாண்டி, சண்டி வீரன் படங்களை இயக்கிய சற்குணம் தயாரிக்கிறார். இவரின் உதவியாளர் தாஸ் ராமசாமி இயக்கவுள்ளார். விரைவில் இப்படம் குறித்த முழுவிபரங்கள் வெளியிட உள்ளனர். நயன்தாரா நடிப்பில் திருநாள், இது நம்ம ஆளு படங்கள் விரைவில் வெளியாகவுள்ளது.



போக்கிரி ராஜா





தாரை தப்பட்டை

தேவி

ர்..!

## பாண்டிராஜின் 3 படங்கள்

பசங்க, வம்சம், மெரீனா, வெற்றிப் படங்களை கொடுத்து தமிழ் திரையுலகில் தனி இடம்பிடித்திருப்பவர் இயக்குனர் பாண்டிராஜ். இவரது இயக்கத்தில் சூர்யா, அமலாபால், பிந்துமாதவி நடித்துள்ள பசங்க - 2 படம் வருகிற 4ஆம் தேதி வெளியாவதாக இருந்தது. இப்போது இந்த படம் டிசம்பர் 24ஆம் திகதி வெளியாகிறது. அடுத்து இவரது இயக்கத்தில் வி...ால், கேத்ரின் நடிக்கும் கதகளி படப்பிடிப்பு முடிந்து உள்ளது. இதன் இறுதிக்கட்ட வேலைகள் நடந்துவருகின்றன. இந்த படம் ஜனவரி மாதம் பொங்கல் தினத்தில் வெளியாக உள்ளது. இதையடுத்து சிம்பு, நயன்தாரா நடிப்பில் பாண்டிராஜ் இயக்கும் படம் இது நம்ம ஆளு. இந்த படம் பெப்ரவரி 14ஆம் திகதி காதலர் தினத்தில் ரிலீஸ் ஆக உள்ளது. இதில் கதகளி, இது நம்ம ஆளு படங்களை தேனாண்டாள் பிலிம்ஸ் வாங்கி வெளியிடுகிறது. டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி விழா நாட்களில் தனது படங்கள் தொடர்ந்து வெளிவருவதால் அவற்றை பாண்டிராஜ் டுவிட்டரில் வெளியிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தி உள்ளார்.



வாழைத்தண்டு போல
உடம்பு அலேக்!



## உறுமீன் விமர்சனம்

தொட்டுத் தொடரும் 'வெட்டு' பாரம்பரியமும், பகையும்தான் உறுமீன்! ஜென்மப்பகை ஜென்மப்பகை என்கிறார்களே, அது எப்படியிருக்கும் என்பதை நம்பமுடியாத மேஜிக்கையும், நம்பக்கூடிய லாஜிக்கையும் மிக்ஸ் பண்ணி அசரவைத்திருக்கிறார் அறிமுக இயக்குனர் சக்திவேல் பெருமாள்சாமி. மீனின் ருசி அபாரம்!

சரித்திர காலத்தில் துவங்குகிறது கதை. கூடவே இருந்து குழிபறிக்கும் கருணாவால்(?) தண்டனைக்குள்ளாகும் புரட்சி வீரன், (பாபி சிம்ஹா) தூக்குமேடையிலிருந்து தப்பி ஓடுகிறான். பின் தனது பராக்கிரமங்களையும், துரோகி கருணாவை பற்றியும் ஒரு புத்தகம்எழுதி, அதை தன்னுடனே சேர்த்து புதைத்தபடி உயிரை மாய்த்துக்கொள்கிறான். மறுஜென்மம் துவங்குகிறது. எப்படியோ அந்த புத்தகம் அங்கும் வந்துசேர்கிறது. உரியவர்களை தேடியாவது செல்வேன் என்ற வைராக்கியத்தோடு தொடர் பயணம் நடத்தும் அந்த புத்தகம், மறுஜென்மம் எடுக்கும் பாபிசிம்ஹாவின் கைக்குவர, வந்த நேரத்திலிருந்து வாழ்வில் ஏற்படும் மாற்றங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் ஒருவழியாக அர்த்தம் புரிகிறது அவருக்கு.

முன் ஜென்மப்பகையாளி கருணாவை (கலை) கொல்லக் கிளம்புகிறார். கதை நகரும்போதே இருவரது பகையையும் வலுவாக்குகிற விதத்தில் இன்னும் ஒரு ஜென்ம பிளாஷ்பேக்கை சொல்கிறார் டைரக்டர். "விடாதே, சீக்கிரம் அவனை போட்டுத்தள்ளு" என்கிறளவுக்கு 'டெம்ப்ட்' கிளப்பும் அந்த பிளாஷ்பேக்கும் அதை தொடரும் க்ளைமாக்ஸ் பைட்டும் ரசிகனை வாயடைக்கவைக்கிறது. டாக்கிங், மேக்கிங் என்று தமிழ் சினிமாவில் ஒரு அக்ஷன் த்ரில்லரை இவ்வளவு ஸ்டைலிஷாக சொன்னதற்காகவே சக்திவேல் பெருமாள்சாமியின் கனத்த சரீரத்தை ஆரத்தழுவி 'ஆஹாவ்' எனலாம்!

படம் நெடுகிலும் நமக்கு பழக்கமில்லாத டீ அரசியலை தொட்டுவிட்டு போகும் இயக்குனர், ஒரு குறிப்பிட்ட மதத்தின் போலித்தனத்தை சமயம் கிடைக்கும் போதெல்லாம் தோலுரித்திருப்பது யாரும் எதிர்பாராத தைரியம்தான்! "வேட்டையாடுறேன்னு புலிகளோட எண்ணிக்கையை வேணும்னா குறைக்கலாம். ஆனால் புலிகளை அழிக்கவே முடியாது" என்கிற வசனம், திணிக்கப்பட்டதாக இல்லாமலிருப்பதே டைரக்டரின் சாமர்த்தியத்தை சொல்லும் பலே டச்!

ஒரு கோபக்கார இளைஞனின் கேரக்டருக்கு சர்வ பொருத்தமாக பிக்ஸ் ஆகிறார் பாபிசிம்ஹா. சற்றே முசுடு போன்ற அவரது முகப்பொருத்தம் கதைக்கு இன்னும் இன்னும் நியாயம் சேர்க்கிறது. போகிற இன்டர்வியூலெல்லாம் பெயில் ஆகி, ஒரு ஹெச் ஆர் தலையில் பீர் போத்தலால் போட்டுத்தள்ளும் அவர், அதற்கப்புறம் அதே மிரட்டலை வைத்து ஒரு கம்பெனியில் வேலைக்கு சேர்வதெல்லாம்கூட பிரச்சினையில்லை. அவ்ளோ பேசும் மனோபாலாவுக்கு ஒரு டயலொக்கூட இல்லையேய்யா... பச்! அந்த ஆங்கிலேயர் கால முன்ஜென்ம எபிசோடில் பாபிசிம்ஹா செம ஸ்மார்ட்! கொஞ்சம் கொஞ்சமாக அந்த ஆங்கிலேயனின் சட்டையை உரிப்பதற்கு தியேட்டர்களில் கைதட்டல் ஷ்யூர்.


அதான் நிஜத்திலேயே சேர்ந்தாச்சே என்று நினைத்திருக்கலாம். கொஞ்சூண்டுதான் வருகிறார் ரேஷ்மிமேனன். ஏன் விழுந்தார் பாபி என்பதை நிமிஷத்தில் புரியவைக்கிறார்.

மூன்று ஜென்மத்திலும் வில்லன் மெட்ராஸ் புகழ் கலைதான்! ஒரு டீ கடைப் பையன் எப்படி அவ்வளவு பெரிய ஆளாக உயர்கிறான் என்பதையும், மெல்ல மெல்ல உச்சத்துக்குப்போகும் அவரது குரூரத்தையும் ரசிக்கலாம். பெருங்கூச்சல் வில்லன்களையே பார்த்து பழகிய கண்களுக்கு கலையின் வில்லத்தனம், இன்ப ஷாக்தான்!

பாபிசிம்ஹா, கலை சம்பந்தப்பட்ட ஃபைட்தான் படத்தின் மிகமிக சூடான பகுதி. பைட் மாஸ்டர் கணேஷ் குமாருக்கு ஆளுயர வாள் கொடுத்து கௌரவிக்கலாம். ஒவ்வொரு பைட்டும் அப்படியொரு கம்போசிங். பாபிசிம்ஹாவின் முரட்டுக்கண்கள் அந்த ஒவ்வொரு அடியையும் இன்னும் கூர்மையாக்குகிறது. பலே!

அச்சு ராஜாமணி இசையில் அந்த 'ஏ உமையாள்' பாடல் ஒருவித ராக சுவை என்றால், பின்னணி இசை அப்படியே ஸ்தம்பித்து உட்கார வைத்துவிடுகிறது. பொருத்தமான கதைக்கு அதைவிட பொருத்தமான தேர்வு. ரவீந்திரநாத் குருவின் ஒளிப்பதிவும் ஸ்பெஷல்!

புகுந்ததே தெரியாமல் புகுந்துகொள்ளும் முன்ஜென்ம எபிசோடும், சற்றே வித்தியாசமான படத்தின் நடையும் எடிட்டர் சான் லோகேஷின் கை ஆர்ப்பாட்டமில்லாமல் சொல்கிறது. உறுமீன் என்று நினைத்து உள்ளே போனால், அட... திமிங்கலத்தை காட்டி மிரட்றாய்ங்கப்பா.




# கிராமங்களை நோக்கி...

"தன்மானத் தமிழன்... தன்மானத் தமிழன்" எனக் கடந்த பல தசாப்தங்களாக மேடைக்கு மேடை ஆவேசம் கொண்டவர்கள்போல முழங்கி மக்கள் மனங்களில் உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தித் தமது கதிரைக்கனவுகளைப் பூர்த்திசெய்து வரும் யாழ்ப்பாணத்து நிலப்பிரபுத்துவ ஆதிக்கவெறியுடன் செயற்படும் தமிழர் தலைமையானது ஒரு விவசாய தேசத்தின் பெரும் வளமாகக் கருதப்படும் கிராமத்து உழைக்கும் மக்களது தன்மானத்தைப் பற்றி எள்ளளவும் சிந்திக்காமல் பெரும் அவமானகரமான வாழ்க்கைச் சூழலுக்குள் அவர்களைப் புதைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் அனைவரும் மிக ஆழமாக உணர்ந்துகொள்ளவேண்டும்.

உண்மையிலேயே, கிராமத்து வறிய மக்களின் தன்மானத்தைச் சிங்களத்து இனவாத அரசு ஒருபோதும் பறிக்கவில்லை. யாழ்ப்பாணத்து நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடி இனவாதத் தமிழ் தலைவர்களே கிராமத்து வறிய மக்களின் தன்மானத்தைப் பறித்தார்கள். இன்றும் பறித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆம்! கிராமத்து வறியமக்களின் நிலஉரிமையைப் பறித்து யாழ்ப்பாணத்தில் உள்ள சுடுகாட்டுச் சுடலைகளிற்கு மத்தியில் அவர்களைக் குடியிருக்க நிர்ப்பந்திப்பதன்மூலமும்...! அவர்கள் குடியிருக்கும் கிராமங்களிற்குச் செல்லும் வீதிகளைச் செப்பனிடவிடாது தடுத்து கல்லும் முள்ளும், சேறும், சகதியுமாய் காட்சிதரும் வீதிகளாய் தொடர்ந்து வைத்திருப்பதன்மூலமும்... அந்த மக்களது கல்விகற்கும் உரிமையை மறுப்பதன்மூலமும் அந்த மக்களின் தன்மானத்தைப் பறித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு சில உரிமையற்ற மனிதர்களாய் இந்த மண்ணிலே வாழ நிர்ப்பந்திக்கப்படும் வறிய கூலி மக்களின் சுயகௌரவமும் தன்மானமும் மிகமோசமாக பறிக்கப்பட்ட ஏராளமான உண்மைக்கதைகள் இந்த மண்ணிலே உண்டு. அவ்வாறான கதைகளில் ஒன்றைத்தான் நான் இங்கு குறிப்பிடப் போகின்றேன். இந்தக் கதையின் கதாநாயகனதும் அவனது அன்புத் துணைவியினதும் சுயகௌரவம்மிக்க வாழ்க்கை மேலும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக சம்மந்தப்பட்டவர்களின் பெயரையோ, சம்பவம் நடந்த கிராமத்தையோ இங்கு நான் குறிப்பிட விரும்பவில்லை. அது இங்கு அவசியமில்லை என்றே நான் கருதுகின்றேன். இனிச் சம்பவத்தைப் பார்ப்போம்.

செழிப்பான செம்மண் தோட்ட வெளிகளிற்கு நடுவே காட்சிதரும் ஓர் சிறிய கிராமம் அது. அந்தக் கிராமத்தைச் சுற்றி பரந்துகிடக்கும் அந்தச் செம்மண் தோட்டங்களிலே கூலி வேலைசெய்து வாழும் வறிய கூலிமக்களே அக்கிராமத்தில் வாழ்ந்து வந்தார்கள். அந்தக் கிராமத்தில் வாழ்ந்துவரும் 90 வீதமான மக்களுக்கு ஒரு அங்குல நிலம்கூட இப்பூமியில் சொந்தமானதாய் இருக்கவில்லை. அவர்கள் கோயில் காணிகளிலும், பணம்படைத்தவர்களால் சட்ட விரோதமாய் உரிமைகோரப்படும் அரச காணிகளிலும் மேட்டுக்குடி நிலஉடைமையாளர்களிற்குச் சொந்தமான கலட்டுக்காணிகளிலும் குடியிருந்துகொண்டு அங்குள்ள நிலச் சொந்தக்காரர்களின் செம்மண் தோட்டங்களில் கூலித்தொழில் செய்து தங்கள் குடும்ப சீவியத்தை நடாத்திவந்தார்கள்.

அந்தக் கிராமத்தில் வாழும் ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் எனச் சகலரும் நாளாந்தம் வேலைக்குப் போனால்தான் அவர்களது குடும்பச் சீவியம் நடைபெறும் என்ற நிலையில் தான் அவர்களது வாழ்க்கைச் சூழல் இருந்தது. அதனால் தமது பிள்ளைகளின் கல்வியைப் பற்றி அந்தக் கிராமத்து மக்கள் எவரும் சிந்திப்பதில்லை. ஏனெனில் கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு அவர்களிடம் அறிவோ... பொருளாதார பலமோ... இருக்கவில்லை. தாம் உழைக்க மட்டுமே பிறந்தவர்கள் என்னும் நம்பிக்கையுடன் உழைப்பதும், உண்பதும், உறங்குவதுமாக அவர்களது வாழ்க்கைச் சீவியம் போய்க்கொண்டிருந்தது.

இவ்வாறு வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் கூட்டத்தில் ஒருவனாக நான் குறிப்பிடப்போகும் அந்த இளைஞனும் தனது வாழ்வை வாழ்ந்துகொண்டு இருந்தான். அந்த இளைஞனுக்கு நான்கு தம்பிகள், நான்கு தங்கைகள் என எட்டுச் சகோதரர்கள் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருந்தார்கள். தாய், தகப்பன் உட்பட மொத்தம் 11 பேர்கொண்ட அவனது குடும்பத்தில் அவனே மூத்தமகன். இருந்தாலும் அந்தக் குடும்பத்தின் பொருளாதாரச் சுமை அவன் தலையில் மட்டும் சுமத்தப்பட்டிருக்கவில்லை. அந்தக் குடும்பத்தில் உள்ள அனைவருமே உழைத்தார்கள். தகப்பனாரே குடும்பத்தைத் தாங்கிநின்றார்.

அந்தப் பகுதியிலே ஏராளமான தோட்டங்களிற்குச் சொந்தக்காரனாய் விளங்கும் குமாரசாமிக் கமக்காரரின் தோட்டத்தில் நிரந்தரமாக வேலை செய்துவரும் அந்த இளைஞனுக்கு இப்போது இருபது வயதாகிக் கொண்டிருந்தது. அந்தக் கிராமத்தில் வசித்துவரும் அவனது உறவுக்காரப் பெண் ஒருத்தியை அவன் காதலிக் கிறான் என்ற செய்தியை அறிந்து கொண்ட குமாரசாமி அந்தப் பெண்ணைப் பார்த்தார். அந்தக் கிராமத்தில் வாழும் இளம்பெண்களில் அவள் மிகுந்த அழகியாக இருந்தாள். குமாரசாமியின் மனம் பெரும் சபலத்திற்குள்ளானது. தனது உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வுகளை வெளியே காட்டிக்கொள்ளாமல் அந்த இளைஞனுக்கே அவளைத் திருமணம் செய்துவைக்க உதவியதோடு பெரிய புலம் பகுதியில் உள்ள அவரது காணியில் அந்த இளைஞனும் அவனது மனைவியும் தனிக்குடித்தனம் போவதற்கான ஒழுங்குகளையும் செய்துகொடுத்தார்.

புது இடம். புதிய வீடு. புதிய வாழ்க்கையென அந்த இளைஞன் தனது காதல் மனைவியோடு சந்தோஷமாக வாழ்ந்துகொண்டிருந்தான். ஒரு நாள் அதிகாலை ஐந்து மணிக்கு தோட்டம் சென்ற இளைஞன் குமாரசாமியின் கத்தரிக்கு இறைக்கத் தொடங்கினான். காலை 6.00 மணியளவில் தோட்டம்வந்த குமாரசாமி தோட்டத்தைச் சுற்றி ஒரு தடவை பார்த்துவிட்டு அந்த இளைஞனருகே வந்து...

"நான் ஒருக்கா யாழ்ப்பாணம் போட்டு வரப்போறன். இண்டைக்கு எப்படியும் கத்தரிக்கு இறைச்சு முடிக்க வேணும். நான் வரும்வரைக்கும் நீ எங்கையும் போகாமல் இறைச் சால்தான் இறைப்புப் பாயும். பிறகு நான் இல்லைத்தானே என நினைச்சுக் கொண்டு இறைப்பை இடையிலை நிப்பாட்டிப்போட்டு வீட்டுப்பக்கம் போனியோ...? பிறகு தெரியும்தானே" எனக் கொஞ்சம் மிரட்டல் பாணியில் கூறிவிட்டு சென்றார்.

அந்த இளைஞனோ கத்தரிக்குத் தொடர்ந்தும் இறைத்துக்கொண்டிருந்தான். பொழுதுபுலர்ந்தது. காலைச் சூரியன் அவனதுபின் முதுகில் சுள்ளெனச் சுட்டதால்பின் முதுகை சாதுவாக எரித்தது. இறைத்துக் கொண்டுநின்ற அந்த இளைஞன் நிமிர்ந்துபார்த்தான். தூரத்தில் யாரும் அவனுக்குத் தேநீர் கொண்டுவருதாகத் தெரியவில்லை. தொடர்ந்து இறைத்துக்கொண்டு நின்றதால் அவனது உடல் சற்றுக் களைப்படைந்து இருந்தது. பக்கத்தில் உள்ள தனது வீட்டிற்குச்சென்று தேனீர் குடித்துவிட்டு வருவம் என எண்ணி வீடு நோக்கிப் புறப்பட்டான்.

அவன் வீட்டை நெருங்கியதும் அவன் மனைவி கெஞ்சி மன்றாடும் அழுகைக்குரல் மெதுவாகக்கேட்டது. இதனால் குழப்பமடைந்த மனதுடன் வேகமாக வீட்டிற்குள் நுழைய முற்பட்ட அவன் அப்படியே வாசலில் நின்றான்.

உள்ளே... தீண்டத்தகாத சாதியெனச் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட அவனது காதல் மனைவியை தூய்மை யான உயர்சாதியைச் சேர்ந்த குமாரசாமி தொட்டு பலாத்காரமாகச் சொந்தம் கொண்டாடிக்கொண்டிருந்தான். யாழ்ப்பாணத்து மேட்டுக்குடி நிலப் பிரபுத்துவ சமூகத்தின் தீண்டாமை என்பது அன்று தொட்டு இன்றுவரை யாழ்ப்பாணத்தில் இப்படித்தான் நடைமுறையில் இருந்துகொண்டு இருந்தது. சாதிமாறி காதலித்த குற்றத்திற்காக எத்தனையோ இளம் காதலர்களைத் தீண்டாமை என்னும் பெயரால் கொன்று குவித்துக் கொண்டிருந்த இவர்களைப் போன்றவர்களை பெற்றோல் ஊத்திக் கொழுத்துவது யார்?

வல்லான் வகுத்ததுதான் நீதி என்ற எண்ணத்துடன் கிராமத்து வறிய மக்கள்மீது தமது ஆதிக்கத்தைச் செலுத்திக்கொண்டிருக்கும் இவர்களிற்கு சிறிலங்கா அரசிடம் சுதந்திரம் கேட்கும் போக்கியதை உண்டா என்பதை தமிழர்களாகிய நாம் ஆழமாகச் சிந்திக்கவேண்டும். ஏனெனில் மேலே என்னால் குறிப்பிடப்பட்ட விடயம் என்பது ஓர் தனிமனிதனின் பலவீனத்தோடு மட்டும் சம்மந்தப்பட்ட பிரச்சினையல்ல. அதுதான் யாழ்ப்பாணத்து மேட்டுக்குடி நிலப்பிரபுத்துவ ஆதிக்கவெறியின் வெளிப்பாடு என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தனது காதல் மனைவி தனது கண் முன்னாலேயே மானபங்கப்படுத்தப்படு வதை குமாரசாமியின் தனிப்பட்ட பலவீனமென அந்த இளைஞன் நினைத்திருந்தால் குமாரசாமியை அந்த இடத்திலேயே வெட்டிப் புதைத்திருப்பான். ஆனால் குமாரசாமியின் காணிக்குள் குடியிருந்து கொண்டு அவரது தோட்டத்தில் வேலைசெய்து வாழ்ந்துவரும் அந்த நிலமற்ற இளைஞனால் குமாரசாமியின் ஆதிக்கத்தை எதிர்த்து நிற்க முடியவில்லை.



**தங்கன்**

(தொடரும்)

# வெக்கமாக இருந்தது

இந்த வார சிறுகதை

மண்டைதீவு மகிழ்நனன்

அவசரமான அழைப்புபோல் இருந்தது. கைபேசியை எடுத்து அழுத்தியபொழுது வந்த செய்தி நல்லதாக இருக்க வில்லை. துயரமான செய்தி காதில் ஒலித்தது.

நம்பமுடியவில்லை. அவன் சின்ன வயது நண்பன் கார்த்திகேய வித்தியால யத்தில் தரம் ஐந்தில் படித்தபொழுது முன்பின்னான வகுப்பில் இருந்தவன். செத்துப்போய் இருந்தான் எனச்சொன்னது இப்பொழுதெல்லாம் அலைபேசியில் அடிக்கடி மரணச்செய்திகள்தான் அதிகம்வருகிறது.

எனது வீட்டை அடுத்து சில வீடுகள் தள்ளி அவனது வீடு இருந்தது. தோட்டங்களை கடந்துபோனால் தூரம் குறைவு. இந்த செம்மண் தோட்டவெளி யில் தான் "அவிண்டு" விழும் இடுப்பு உடுப்புகளை இழுத்து இழுத்து பிடித்தபடி பட்டம் உயர்த்திக்கொண்டு ஓடி இருக்கிறோம்.

ஒரு சின்னவட்டம் சேர்ந்தால் காணும், காற்று போதியதாக இல்லாதநேரத்திலும் பட்டம்விடும் ஆர்வம் பிறக்கும். பத்தாத காத்தில் பறக்கும் எங்களது பட்டம். பட்டம் என்ற சொல்லுக்குப் பதிலாகக் கொடி என்ற சொல் அதிகம் பரீட்சயமான தாக இருந்த நினைவு காலத்தை அவனது இழவுச்செய்தி மனத்திரையில் ஓடவிட்டது.

நாங்கள் அயலவர்கள். நெருக்கமான உறவு 'அண்ணன் தம்பி' முறை கொண்டா டுவதே வழமை. வயதில் மூத்தவரை "அண்ணே" என்றழைப்பவர் தம்பிதானே! கல்யாண உறவுகளும் ஊருக்கு வெளி யாலை அதிகம் வைத்துக்கொள்வதில்லை. கூட்டு இறுக்கமான சமுதாயக் கட்டமைப்பு அப்ப.

கனகு என்ற கனகசுந்தரம் இறந்து விட்டதாக வந்த செய்தி உண்மை தான் என்று உறுதிப்படுத்தி அதிக நேரமாகவில்லை.

"கனகு" என்று நண்பர்களால் அழைக்கப்படும் அந்த மெலிந்த உருவம் நினைவில் நிழலாடியது. வால்கட்டாத பருந்துப் பட்டத்தை தூக்கிவிட்டால், பட்டத்தை மேல்காத்து வட்டத்திற்கு எடுத்துச்செல்வதற்காக புகையிலைத் தோட்டத்தின் வெட்டுக்கட்டைகளை இடறிக்கொண்டு கனகு ஓடுவான்; நூலை கையில் பிடித்தபடி.

நூல் பந்தை கையில் எடுத்துக் கொண்டு நவரெத்தினமும் சேர்ந்தோடுவது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும். இடுப்பில் இருக்கும் துண்டும் களிசானும் இடுப்பிலும் இருக்காது, கீழேயும் விழாது, அந்நேரத்தில் நடமாடும்.

உன்னைப் பிடி; என்னைப் பிடி என ஓடும் இவர்களோடு பந்தயம் பிடிக்க ஏலாது. ஒட்டுக்கட்டி ஓடும் வல்லமை பஞ்சலிங்கத்துக்கு இருந்தாலும் அவன் அடிக்கடி லீவு எடுத்துக்கொள்வான். செம்பாட்டு வைரவ கோவில் பட்டம் கட்டும் கூட்டத்தோடு அதிகம் சேருவதில்லை.

கடற்கரைக்குப்போகும் வீதியை தாண்டி காற்றுவளத்தை பொறுத்து ஈச்சம் தரவை வைரவர் மைதானத்துக்கோ அல்லது ஆனைபிடிச்சானில் உள்ள நாகதம்பிரான் கோவில் வெளிக்கோ சிலவேளைகளில் பட்டத்தைக்கொண்டு செல்வதும் உண்டு.

"தந்தடை" தோட்டங்களுக்கப்பால் செல்லாத கூட்டத்தோடு நானும் சேர்ந்து கொள்வேன். வைரவரது உயர்ந்த ஆலமரமும், பொங்கல் மேடையிலும், தேங்காய் சிதறடிக்கும் அகன்ற கல்லும் அதை சூழ்ந்த குந்து- கல்லுகளும் சின்னப்பொடியன்களின் அரட்டைக்கும் அட்டகாசத்துக்கும் களம் அமைத்த மாதிரி இருக்கும்.

அந்த கோவிலில் இருக்கும் வைரவப் பெருமான் பிள்ளை நேசமுடையவர் என்று அம்மாமார் சொன்னதால் நேசமுடையவர் பயமும் இல்லை.

விண்கூவும் சத்தம் கேட்டால் பட்டம் மேல்காற்றுக்கு சென்றுவிட்டதென்று அர்த்தம். எங்களது "கொடியை" வேறு எவரும் வெட்டிச் சாய்த்துவிடமுடியாது. கனகு என்ற கனகசுந்தரமும் நவம் என்ற நவரத்தினமும் விட்டுக் கொடுக்கமாட்டாங்கள்.

வேறு கோவில் பக்கம் இருந்து அப்படி யாராவது பெரிய கொடிகொண்டு வைரவர் கோவில் பக்கம் வந்தால் "அக்கா வா, தங்கச்சி வா" என்று பெண் பிள்ளைகளையும் ஆள்சேர்த்து விடுவோம்.

சிலவேளைகளில் எங்களது பட்டம் எமது சக்தியை மீறி வெட்டி வீழ்த்தப்பட்டால்... மண்கட்டிக் கொண்டு தாக்குதல் நடைபெறும்.

அந்த எறிகளுக்கு பதுங்கியும் விலத்தியும் ஓடிய அனுபவம் பிற்காலத்தில் எறிகணைகளில் இருந்து ஓடி தப்பிக்கொள்ள உதவுமென்று முன்பே அறிந்திருக்கவில்லை. சிலவேளைகளில் சருகு ஒடிந்த புகையிலை தண்டுகளும் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டதுண்டு.

பெரிய அக்காமார் தலையிட்டு சண்டையை நிறுத்திவிடுவர். அந்த புழுதி சண்டை அத்தோடு முடிந்துவிடும். நாலு-நாள் நான்கு முழத்திற்கு வகுப்பறையில் மூஞ்சியை நீட்டிக்கொண்டு இருப்போம். கதைக்கமாட்டம். அழிப்பன் கேட்டால் கொடுக்கமாட்டம். அடிமட்டையை தொடவும்விடோம்.

அதற்குப்பின் நாங்களே சமாதானமாகி விடுவோம். பள்ளியில் நாலு நாள் மெத்திபோம். பட்டம்விடும் குழுமங்கள் பட்டம் கட்டமீண்டும் ஆயத்தமாகிவிடும். எங்களது வகுப்பு பிரச்சினையில் தலையீடு செய்யும் அடுத்த வகுப்பாரை அந்நியராகவே கருதினோம். எங்களது வகுப்பு சண்டையில் வேறு யாரும் தலையிட முடியாது. அப்படியானால், நாங்கள் ஒன்று சேர்ந்துவிடவோமல்ல(வா)?

எரிக் கொல்ஹெய்ம்மோ, யசூசி அகாசியோ தேவைப்படவில்லை.

இடைத்தலையீடு பிரச்சினைகளை தோல்வியிலேயே கொண்டு போய்விடும் என்று தெரியாத காலம்.

இந்த குழந்தை பிள்ளைகள் சண்டை நடந்த செம்மண்வெளி, குருமண்வெளிபோல் யுத்த களமாக மாறும் என்று நாங்கள் அறிந்திருக்கவில்லை.


ரி-56(T - Fifty six) பீரங்கிகளும், புக்காரா, மச்செட்டி விமானங்களும் கடற்படை கப்பல்களும் இந்த தோட்டவெளியையும் சுற்றுவிட்டத்தையும் இலக்காகக்கொண்டு குண்டுகள் போட்டு சண்டைகள் செய்யுமென யார் கண்டார்?

ஆகாயக் கப்பலை பார்த்து பள்ளிக்கு செல்லும் நேரம் குறித்தவர்கள். அந்த மாதிரியான சண்டை விமானங்களைக் கனவிலும் எண்ணிப் பார்த்திரார். தோட்டவெளியில் கண்ணிகளை புதைத்து 'செல்'குண்டுகள் வீசுவது நடக்குமென்றோ அல்லது கடற்கரையில்போய் பாலை தீவுக்கப்பால் நின்றபடி வெள்ளங்களில் மாமூடை ஏற்றி அலுப்பாந்திக்கு அனுப்பிய கப்பலை பார்த்த எங்களது தலையில், கடற்படை கப்பல்களும் துருப்பு காவி கப்பலும் வந்து "கனன்" எனப்படும் பீரங்கிகள்மூலம் அழுகல் மணம் வீசும் குண்டுகளை வீசிவெடித்து நாசம் பண்ணுவர் என்று அறிந்திருந்தோமா? பாட்டன், பூட்டன் அறியாதகாலத்தில் வந்து போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் கட்டிய யாழ்ப்பாண காவல் கோட்டை கொள்ளிவாய் பிசாசாகி எரிகுண்டு களை எங்களூரில் துப்பும் என யார் கனவு கண்டார்? கெட்டகனவுகள் அப்ப நாங்கள் கண்டதில்லை.

Operation Ford தீவகத்தின் ஆன்மாவை வறுத்தெடுத்தபொழுது முன்னரங்க கிராமங்களான மண்டைதீவு, அல்லைப்பிட்டி கிராமங்கள் சாம்பல் மேடாகிப்போயின. ஊர்காவற்றுறையில் இருந்துவந்த பாதுகாப்புத் தரப்பினர், பட்டங்கள் பறந்த தோட்டவெளியை நிறுதூளி ஆடினர். தானுண்டு தன்பிழைப்புண்டு என்றிருந்த கிராமங்களும் மனிதக்குழுமங்களும் திக்குத்தெரியாத காடுகளுக்கு விரட்டப்பட்டபொழுது கனகசுந்தரமும் நவரெத்தினமும் குடும்பத்தோடு பூநகரி ஊடாக இடம்பெயர்ந்திருந்தனர். தீவகத்தின் முன்னரங்க கிராமம் ஹிட்லரின் நாசிப் படை துவளையாடிய பெல்சியம் நாடாகியது. தோட்ட வெளியெங்கும் பிணங்கள் சிதறிக் கிடந்தன.

தோட்டக் கிணறுகள், வீட்டு மலக் குழிகள் பிணங்களால் நிரம்பின. மிகுதியே சிதறிக் கிடந்தன. சில ஆயுத தாரிகளும் நூற்றுக்கணக்கான பொது மக்களும் மாண்டுபோயினர்.

கோவில்களில் தஞ்சமடைந்தவர்களில் மிஞ்சியவர்கள் மண்கும்பான் பள்ளிவாசல் பக்கமாக விரட்டப்பட்டனர். உப்பு தண்ணீரும் இல்லாது மூன்று நாள் அமைக்கப்பட்டு இருந்த மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் மக்கள்



கூட்டம், செல்லும் வழிதெரியாது தவித்துப்போயினர். கண்ணைக்கட்டி காட்டில் விட்டமாதிரி கெட்டுப்போயினர் வெறுங்கையோடு.

வெறுங்கையோடு அனுப்பப்பட்டவர்கள் மழையில் நனைந்து (August 90ஆம் ஆண்டு 26, 27 ஆம் திகதிகளில் கடும் மழைபெய்தது) வெயிலில் காய்ந்து பசு மாடுகளோடு பனங்காய்க்கு அலைந்த மனிதமந்தைகள் ஊர் தேசமின்றி சிதறிப்போனது. வரவேற்க காட்டு மரங்களைத்தவிர மனிதமுகங்களும் மனங்களும் இருக்கவில்லை. யாழ்ப்பாண பகுதியில் திருவோடு தாங்காத குறை யோடு ஒரு கூட்டம் அலைந்தது. மற்றவர்கள் சாவகச்சேரி, கொடிகாமம், விடத்தற்பளை, நல்லூர் ஊடாக வன்னிக்காடுகளுக்கு இடம்பெயர்ந்தனர்.

குடாநாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் தங்கியவர்கள் 1995 இல் ஒரு Long march பயணத்தை நடத்திமுடித்து சீனர்களைபோல் மாய்ந்துபோயினர்.

குடாநாடு வெறிச்சோடியது. முன்னேறி பாய்தல் "ரிவிரச"(சூரியக்கதிர்) போன்ற யுத்தங்களால்... 1995 புரட்டாதியில் குடாநாட்டைவிட்டு வெளியேறி, பூநகரி, மன்னார் வீதியில் முழங்காவில் பகுதியில் பிந்திவந்து தஞ்சமடைந்தவர்கள் தான் இந்த "கனகு" மற்றும் "நவம்" குடும்பத்தவர்கள்.

இவர்களுக்கு நல்ல இடங்கள் பொருந்தவில்லை; நாச்சிக்குடா சந்தி, நாகபடுவான், ஜெயபுரம், நாச்சிக்குடா முழங்காவில் புறக்காட்டு பகுதியில் குடிசை போட்டனர். முழங்காவிலுக்கு வடக்கு பகுதி வீதி யானைக்காடாகும். நாலு, ஐந்து மணிக்கு மன்னார் வீதியை யானைகள் தினமும் கடக்கும்.

படிக்க பாடசாலை, உடுக்க உடை கிடைக்காத மாணவர்களை வறுமை, வசிப்பிடப் பற்றாக்குறை என்பவற்றோடு எதிரியின் குண்டுகளும் கலைத்து வதைத்தன.

போதாக்குறைக்கு வன்னியில் பிள்ளை பிடிக்கும் படலமும் ஆரம்பித்தது. ஒரு பொடியனை பாதுகாக்க பல ஆயிரம் கனகுகளும் நவரத்தினங்களும் பட்ட துயரும் துன்பங்களும் சொல்லில் அடங்கா.

குண்டுச்சட்டிக்குள் கொதித்துக் குதித் தவர்கள் இறுதியில் மாத்தளன் கரை யாம் முள்ளிவாய்க்கால், வெள்ளாம் முள்ளிவாய்க்கால் என்ற இறுதி புள்ளியை அடைந்தனர். அந்த மனிதப் பேரவலம் பாதுகாப்பு வலயத்தில் நடந்துமுடிந்தது. உலகம் அதாவது போருக்கெதிரான மனிதாபிமானம் பேசுமுலகம் வேடிக்கை பார்த்தது.

ஒரு சில சதுரகிலோமீற்றர் இடப்பரப்பில் இலட்சக்கணக்கான மக்கள் இறுதியில் பாதி சனம் பரலோகம்போய் சேர்ந்த வேளை கனகசுந்தரம் குடும்பமும் உறவுகளும் இருந்த மணல் பங்கரில் "செல்" விழுந்து வெடித்தது.



[21 ஆம் பக்கம் பார்க்க]




# எவ்வாறான ஆண்களை பெண்கள் விரும்புகிறார்கள்?

பெண்கள் எப்போதும் தங்களது குணத்திற்கும், பண்பிற்கும் எதிர்மறையாக இருக்கும் ஆண்களைத்தான் விரும்புவார்கள். ஒரு உறையில் ஒரு கத்திதான் இருக்கவேண்டும். வீட்டில் இருக்கும் இருவரும் கத்தியாக இருந்தால், கடைசி வரையிலும் கத்திக்கொண்டே இருக்கவேண்டியதுதான். வாழ்க்கையை வாழமுடியாது.

தங்களால் கோபத்தை இழக்கமுடியாது என்பதற்காக தான், பெண்கள் அதை கட்டுப்படுத்த ஓர் கூலான ஆணை தங்களது துணையாக தேடுகிறார்கள்... எந்த ஒரு எதிர்பார்ப்பும் இன்றி நமது இன்பதுன்பங்களில் பங்கெடுத்துக்கொள்ளும் ஓர் நபர்தான் நமது காதல் துணையாக இருக்கமுடியும். தோல்வியின்போது தோள் கொடுக்கவும், வெற்றியின் போது துணை நிற்கவும் நாம் எதிர்பார்க்கும் நபர்கள்தான் இவர்கள். பெண்கள் பொது வாகவே கோபம் அதிகம் கொள்பவர்கள்.

இதில், ஆணும் தீயாக கொந்தளிக்கும் குணம்கொண்டு இருந்தால் வீடுதாங்காது. பெண்களை ஒருநாளும் ஆண் களால் முழுதாய் கட்டுப்படுத்த முடியாது. நண்பன் ஒருவன் கோபமாக வந்தால், அவனை உசுப்பேற்றும் நண்பர்கள்தான் நம்மில் அதிகம். ஆனால், ஓர் பெண்ணால் ஆணை ஓர் பார்வையில், கண்சிமிட்டலில் கட்டுப்படுத்த முடியும். ஆண்கள் என்னதான் அறிவுத்திறன் அதிகம் கொண்டிருந்தாலும், செயற்பாட்டில் சிறிய தடுமாற்றம் ஏற்பட்டால்கூட உடைந்து போய்விடுவார்கள்.

இந்த நேரத்தில் அவர்களின் துணையாய் இருக்கும் காதலி மனைவி அருகே இருந்து அறிவுரைகூறி அவர்களை முன்னேற்றப்பாதைக்கு எடுத்து செல்ல உதவவேண்டும். இது எல்லாநிலையிலும் தன்னிலை இழக்காத ஓர் பெண்ணால் தான் முடியும். ஆண்கள் குடும்ப தலைவன் என்ற பெயரோடு இருந்தாலும், குடும்பத்தை நல்ல முறையில் வழிநடத்த ஒரு பெண்ணால்தான் முடியும். அமைதியான சுபாவம்கொண்ட பெண்ணால்தான் குடும்பத்தை நல்ல முறையில் வழிநடத்தி செல்லமுடியும்.

தவறுகள் செய்யாத குழந்தைகளே இருக்க முடியாது. அந்த நேரத்தில் அன்பாகப் பேசி பக்குவமாக எடுத்துக்கூறி வளர்க்க வேண்டுமேதவிர, அடித்து ஓர் வழிக்கு கொண்டுவர நினைக்கக்கூடாது. ஒரு பெண்ணால்தான் பக்குவமாக நடந்துகொள்ளவும் முடியும், மற்றவரையும் பக்குவமாக கையாளமுடியும்.

பெண்கள், தங்களது கணவன் இவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்றுதான் பெரும்பாலும் விரும்புகிறார்கள். ஓர் நல்ல காதலியாக, மனைவி யாக, தாயாக, மருமகளாக அனைத்து உறவுகளிலும் அன்பின் உருவாய் இருக்க கூலான பெண்களால் மட்டுமே முடியும்.

## முகப்பருக்கள் வருவதை தடுக்கும் ஆயுர்வேத வழிகள்

• சந்தனப் பொடியை வேப்பிலை தண்ணீர்சேர்த்து கலந்து, முகத்தில் தடவி உலரவைத்து கழுவவேண்டும். இப்படி செய்தால், சருமத்தில் உள்ள எந்த ஒரு பிரச்சினையும் நீங்கி, சருமம் பிரகாசமாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

• தக்காளியை அரைத்து சாறு எடுத்து, அந்த சாற்றினை தினமும் இரவில் படுக்கும்முன் முகத்தில் தடவிக்கொண்டு தூங்க செல்லவேண்டும். இப்படி அன்றாடம் பின்பற்றி வந்தால், முகம் பருக்களின்றி பொலிவோடு இருக்கும்.

• மஞ்சள் மற்றும் இஞ்சியை சரிசமமாக எடுத்துக் கொண்டு அரைத்து பேஸ்ட் செய்து, இரவில் படுக்கும்போது பாதிக்கப்பட்ட இடத்தில் தடவவேண்டும். இப்படி ஒரு 3 நாட்கள் தொடர்ந்துசெய்து வந்தால், விரைவில் குணமாகும்.

• குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவினால், சருமத்தில் எண்ணெய் பசையின் சுரப்பு அதிகரித்து, அதனால் பருக்கள் வரும் என்று தெரியுமா? எனவே தினமும் 4 முதல் 5 முறை வெதுவெதுப்பான நீரில் முகத்தைக் கழுவவேண்டும்.

---

# இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்

## வெளியீடு 05

பிரித்தானியர், 1948ஆம் ஆண்டில் விடுதலைவழங்கி இலங்கை முழுவதை யும் சிங்களப் பெரும்பான்மை அரசின் பொறுப்பில் ஒப்படைத்தனர். இதன் பின்னர் ஒன்றன்பின் ஒன்றாகப் பல பிரச்சினைகள் உருவாகின. இந்தியர் பிரஜாவுரிமைச் சட்டம், தமிழ்ப் பகுதி களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், சிங்களம் மட்டும் சட்டம் போன்றவை தமிழர்களின் உரிமைகளைப் பாதிப்புக்கு உள்ளாக்கின. இந்தியர் பிரஜாவுரிமைச் சட்டத்தை அமைச்சராக இருந்த பொன்னம்பலம் ஆதரித்ததால், தமிழ்க் காங்கிரசுக் கட்சி இரண்டாக உடைந்தது. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் பலர் கட்சியில் இருந்து விலகி இலங்கைக் கூட்டாட்சிக் கட்சியைத் (இலங்கைத் தமிழரசுக் கட்சி) தொடங்கினர்.

இக்கட்சி, இனப்பிரச்சினைக்குத் தீர்வாக கூட்டாட்சி முறையை முன்வைத் தது. விடுதலைக்கு முன்பிருந்தே பல சிங்களத் தலைவர்கள் சிங்கள மொழியை மட்டுமே அரசாங்க மொழியாக்க வேண்டும் என வலியுறுத்தி வந்தனர். 1956ல், பௌத்த, சிங்கள உணர்வுகளை முன்வைத்து ஆட்சிக்குவந்த எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, சிங்களத்தை மட்டும் அரசமொழி ஆக்கும் சட்டத்தை நிறைவேற்றினார். தமிழரசுக் கட்சியினர் கொழும்பில் இதற்கு எதிராக அமைதிவழிப் போராட்டம் நடத்தினர். இது வன்முறையால் அடக்கப்பட்டது. நாடுமுழுவதும் இனக்கலவரம் உருவாகித் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பண்டாரநாயக்கா தமிழ்மொழிக்கும் ஓரளவு உரிமை வழங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றை செல்வநாயகத்துடன் செய்துகொண்டார்.

இது பண்டா-செல்வா ஒப்பந்தம் என அறியப்பட்டது. ஆனால் சிங்களத் தலைவர்களின் கடுமையான எதிர்ப்பின் காரணமாகப் பண்டாரநாயக்கா ஒருதலை யாக இவ்வொப்பந்தத்தைக் கைவிட்டார். பண்டாரநாயக்கா இறந்தபின்னர் பதவி க்குவந்த அவரது மனைவி சிறிமா பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தீவிரமாக இருந்தார். 1965இல் டட்லி சேனாநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது.

மாவட்ட அடிப்படையிலான ஓரளவு அதிகாரப் பரவலாக்கத்துக்கான வாக்குறுதியைப் பெற்றுக்கொண்டு, தமிழரசுக் கட்சியினர் அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்க முன்வந்தனர். எதிர்பார்த்த பலன் எதுவும் கிடைக் காததால், சில ஆண்டுகளுக்குப் பின்னர் அக்கட்சி தனது ஆதரவை விலக்கிக் கொண்டது. 1970இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றிய சிறிமா பண்டாரநாயக்கா, இலங்கையைப் பிரித்தானியாவில் இருந்து முற்றாகத் துண்டித்துக்கொண்டு குடியரசு ஆக்குவதற்கான புதிய அரசி யல் யாப்பை உருவாக்கினார். நாடு முழுவதும் சிங்களமே அரசமொழியாக வும், பௌத்த மதம் முன்னுரிமை கொண்ட மதமாகவும் இருக்கும்வகையில் யாப்பு உருவாக்கப்பட்டு 1972இல் இலங்கை குடியரசு ஆக்கப்பட்டது. அத்துடன், கல்வித்துறையில் தரப்படுத்தல் போன்றவை தமிழ் மாணவர்களை விரக்திக்கு உள்ளாக்கின. இளைஞர்கள் மத்தியில் தீவிரவாதப் போக்குத் தலைதூக்கத் தொடங்கியது. மிதவாதத் தமிழ்த் தலைவர்களுக்கு இளைஞர்களிடம் இருந்து அழுத்தங்கள் ஏற்பட்டன. இதனால், இதுவரை எதிரெதிராக இயங்கிவந்த இலங்கைத் தமிழர் அரசியல் கட்சி களான தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரசு என்பனவும், தொண்டமான் தலைமையில் இந்தியத் தமிழருக்காக



### விடுதலையை விதைத்த இனவாதம்

இயங்கிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி என்னும் அமைப்பை உருவாக்கிச் சில கோரிக்கைகளை அரசின் முன் வைத்தனர்.

இது எவ்வித பயனும் அளிக்காததைத் தொடர்ந்து, 1976இல் இலங்கையில் தமிழருக்குத் தனிநாடுகோரித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், தமிழர் ஐக்கிய முன்னணி என்னும் பெயர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி எனவும் மாற்றப்பட்டது. அமைதிவழியில் தமது இலக்கை அடைவதையே இம்முன்னணி நோக்கமாகக் கொண்டிருந்தது.

70-களின் பிற்பகுதியிலும், 80-களின் முற்பகுதியிலும் அமைதிவழியில் நம்பிக்கை இழந்த இளைஞர்கள் சிலர் சிறுசிறு குழுக்களாக இயங்கிவந்தனர். 1983இல் இடம்பெற்ற இனக் கலவரத்தைத் தொடர்ந்து படிப்படியாக மிதவாத அரசியல் கட்சிகளின் செல்வாக்குத் தளர்ந்துவந்தது. பல ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் வளர்ச்சிபெற்று வந்தன. சில விடுதலை இயக்கங்கள் ஆயுதவழியில் தோன்றினாலும் அதன் மூலம் பெரும்பான்மையரசை வென்று தீர்வினைப் பெற்றெடுக்கமுடியாது எனும் யதார்த்தத்தை புரிந்துகொள்ள இவ்விடுதலை இயக்கங்களிற்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட தீர்வின் திசை முகங்களை இவர்கள் வெவ்வேறு துருவங்களில் நாடினர்.

காலப்போக்கில், புலிகள் இயக்கம் வடக்குக் கிழக்கின் பெரும் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அளவுக்குவளர்ந்தது. 1987இல் இலங்கைத் தமிழரின் பங்களிப்பு எதுவும் இன்றி இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஒன்று உருவானது. இதன் அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கத்துக்காக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதுடன், தமிழ் தேசிய மொழியாகவும் அறிவிக்கப்பட்டது. அமைதி காப்பதற்காக வடக்குக் கிழக்கில் இந்திய அமைதிப்படை நிலைகொண்டது. தொடர்ந்து இடம்பெற்ற சில நிகழ்வுகள் இந்திய அமைதிப்படைக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே முரண்பாடுகளை உருவாக்கி இரு தரப்பினரிடையே போர் ஏற்பட வழிவகுத்தது. 1989இல் ஒப்பந்தத்தின் நோக்கம் நிறைவேறாமலேயே இந்திய அமைதிப்படை விலகவேண்டி ஏற்பட்டது. மீண்டும் வடக்குக் கிழக்கின் பல பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டு க்குள்வந்தன. இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையே வெளிநாட்டு நடுவர்களுடன் பல அமைதிப்பேச்சுக்கள் இடம்பெற்றனவாயினும் எவ்வித பயனும் விளையவில்லை. உலக அரங்கில் இடம்பெற்ற சில நிகழ்வுகளையும் அதைத்தொடர்ந்து ஏற்பட்ட கொள்கை மாற்றங்களையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட இலங்கை அரசு, பல நாடுகளின் உதவிகளைப் பெற்று, புலிகள்மீது இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. கிழக்கு மாகாணத்தில் தொடங்கி புலிகளிடம் இருந்த பகுதிகளைப் படிப்படியாகக் கைப்பற்றிய இலங்கை இராணுவம், முல்லைத்தீவுப் பகுதியில் இடம்பெற்ற இறுதிப்போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தது.


போர் நிறுத்தப்பட்டாலும், இலங்கைத் தமிழர் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமலே உள்ளது. அதே வேளை இலங்கைத் தமிழரின் அரசியல் தலைமைத்துவம் மீண்டும் மிதவாத அரசியல்வாதிகளின் கைக்கு மாறியுள்ளது. இதைவிடப் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர் பலரும் பல்வேறு மட்டங்களில் இப்பிரச்சினையில் ஈடுபாடுகாட்டி வருகின்றனர். எதுவும் இதுவரை பயனளிக்கவில்லை. இதில் உள்ள தவறுகளும் மாற்றவேண்டிய மறு வடிவங்கள் பற்றியும் அடுத்த தொடரில் நோக்குவோம்.

(தொடரும்)



# பாப்பா முரசு

## வாரம் ஒரு திருக்குறள்




### அறிவுடைமை

**எவ்வ துறைவ துலக முலகத்தோ**
**டவ்வ துறைவ தறிவு.**

உயர்ந்தோர் வழியில் உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ அதற்கேற்ப நடந்து கொள்வதே அறிவாகும்.

குறள் : 426



பரமண்ணா

# "விளையும் பயிரின் முளை!"

"நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்" சேகரன் முயற்சியில் நிறைவைக் கண்டு வந்ததால் அவனுக்கு தன்னுடைய முயற்சியில் நிறைவு கிடைக்கும் என்னும் உறுதியான நம்பிக்கை தோன்றி முற்றுமுழுதாய் தன்னை ஆராய்ச்சியிலேயே ஈடுபடுத்தி இருக்கையில் மகிழ்ச்சியால் உற்சாகமாகவும் செயலில் ஈடுபட்டிருந்தான்.

இடையிடை நினைவில் தோன்றிய பிச்சைக்காரனுடைய தோற்றமே இந்தளவுக்கு அவனுடைய முயற்சி நிறைவை அடைகின்ற அளவுக்குசெயற்பட வைத்துக் கொண்டிருந்ததென்றால் மிகையில்லை.

சேகரனுடைய அறையில் இருந்த மூன்று மேசைகள் மீதும் பல அளவிலான போத்தல்கள் வைக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் வர்ணங்களில் வகை வகையான திரவங்கள் அளவுகளில் கூடிக் குறைந்திருக்கும் போத்தல்களில் பொருத்தப் பட்டிருந்த குழாய்க் கருவிகள் மூலம் பரிணாமப்படி எடுத்துச் செல்லப்பட சேர்க்கும் காரியம் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அவற்றைக் கவனித்து ஒன்றுடன் ஒன்று கலக்கச் சேர்க்கும் வேலைகளில் பம்பரமாகத் தன்னை மறந்து இயங்கிக்கொண்டிருந்தான் சேகரன். சடுதியாய் இவை இயக்கப்படவேண்டிய முறை தவறி ஒரு கருவியை ஞாபகம் இன்றி செயற்படுத்திவிட்டான் அவன்.

மறுகணம் பயங்கரமான பலத்த இடியோசை அவனது அறையை அதிரவைத்தது.

போத்தல்கள் வெடித்து. அவற்றில் நிரப்பப்பட்டிருந்த திரவங்கள் அனைத்தும் கலந்து நிலத்தில் சிதறி ஓடின. சேகரனின் உடலில் இருந்து வெள்ளமாய் பெருகிக் கொண்டிருந்த இரத்தமும் கலந்துசென்றது.

அறை அடங்கிலும் புகை மண்டலம் நிரம்பி எதனையும் பார்க்கமுடியாதவாறு சூழ்ந்து கொண்டிருந்தது.

திடீரென ஏற்பட்ட அச்சத்தை உணர்ந்து சேகரனின் தாய் அன்னமும், சகோதரி நளினியும் அலறிக் கொண்டே புகை மண்டலத்தை ஒருவாறு விலக்கியவர்களாய் அறையுள் நுழைந்து நிலைமையைப் பார்த்துத் திகைத்துப் போய் ஓலமிட்டனர்.

சேகரன் அறையினுள் பலத்த காயங்களுடன் தலையில் வீழ்ந்து கிடந்தான். அதிர்ச்சியுடன் கணவருக்கு தொலைபேசியில் அறிவித்து விட்டுச் சேகரனை உடனடியாக வைத்தியசாலைக்குக்கொண்டு சென்றாள் அன்னம்.

வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்ற சேகரனின் உடலைப் பரீட்சித்த டாக்டரின் வாய்மொழி கேட்டு அன்னம் சிலையாகி நின்றாள். அவளுக்கு உலகமே சுழல்வது போன்ற பிரமை ஏற்பட்டு ஈற்றில் அவளும் தரையில் சரிந்தாள்.

ஓடோடி அவதியாக வந்து சேர்ந்த சோமசுந்தரமும், நளினியும் நிலைமையை உணர்ந்து ஒருபுறமாய் கதறினர்.

" இதில பாருங்கோ... தனக்கெட்டாக் காரியத்தில் தலைபோட்டால் முடிவு இப்பிடித்தான் வருமென்று பொடியன் அறியேல்லை..."

ஊரெங்கும் பரவிய செய்தியைக் கேட்டு அயலவர்களும் தங்கள் வழக்கமான விமர்சனங்களை வெளியிடத் தொடங்கி இருந்தனர்.

"பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போன்றே' சும்மா இருந்த ஊரவர்களின் வாய்க்கு அந்தச் சம்பவம்; நடந்துமுடிந்த பின்னால் வெறும் வாயைச் சப்பி மீளவும் உதவிற்று.

விபரம் அறிந்துவந்த பொலிசாரும், அரச சுகாதாரப் பகுதி அதிகாரிகளும் சேகரனின் அறையைச் சோதனைபோட்டு அவனால் தொகுக்கப்பட்டிருந்த குறிப்புக் களைக் கைப்பற்றிச் சென்றனர்.

சேகரனுடைய மறைவின் பின்பு, வீடு எவ்விதக் களையும் இன்றிக் கொஞ்சநாட்களாக அமைதி சூழ்ந்து கிடந்தது. அவனது தந்தை, தாய், சகோதரி முகங்களிலும் அப்பாதிப்பு சிலநாட்களாகக் குடிகொண்டிருந்தன.

அவை எல்லாம் எத்தனை நாட்களுக்கு? நாட்கள் நகர நகர அவனுடைய இடைவெளிச் சூனியம் பழக்கப்பட்டு நிலைமை மாறி வழக்கம்போல மகிழ்ச்சி அவ்வீட்டிலும் சிறுகச் சிறுக சூழ்ந்துகொண்டிருந்தது.

கைப்பற்றி சென்றிருந்த சேகரனின் குறிப்புக்கள், அரச வைத்தியர்களால் பரிசீலிக்கப்பட்டதன் பின்னாக விசேட உத்தரவின்கீழ் அவன் தயாரிக்க முற்பட்ட அதே குறிப்புக்களை வைத்து மருந்தைத் தயாரித்து. நோயாளிகளுக்குப் பிரயோகித்தும் வெற்றியை ஊர்ஜிதம் செய்தனர்.

(தொடரும்)



## அதிரடி ஐயாத்துரை



* 'கூத்தாடிகள்' வேண்டாம் எண்டு கெஞ்சிக் கேட்டும் 'மாவட்டத் தலைவர்' பதவி 'கலாபமான' எம்.பிக்கு குடுத்ததில 'கூத்தாடிகள்' எல்லோரும் அப்செட். 'மந்திரத்தார்' தன்ர அதிருப்தியை 'சிங்கத்தாரிடம்' நேரடியாகவே சொன்னவராம். உடன 'சிங்கத்தார்' நீங்களும் எடுக்கமாட்டியள். செய்யிறதையும் தடுக்கிறியள் எண்டு ஒரு போடுபோட 'மந்திரத்தார்' 'எஸ் சேர்' - 'நோ சேர்' என அசடு வழிஞ்சவராம். இதில என்ன விசயமெண்டால் 'கலாபமான' எம். பி இனி யாழ்ப்பாணத்தை ஒரு ஆட்டு ஆட்ட நம்மட 'கூத்தாடிகள்' அந்த ஆட்டத்துக்கெல்லோ ஆடவேணும். மனிசிக்கு பெரிசா ஒண்டும் விளங்காது. மனிசி 'விளக்குமாறு' கேட்கும். என்ன பயந்திட்டீங்களோ...? இல்லை விசயங்களை விளங்கப்படுத்தச் சொல்லிக் கேட்கும். இனி நம்மட அதிகாரிகள் பாடு 'அரோகராதான்'. இனித்தானே இருக்கு 'ஆட்டம்'!

* சென்னையிலை வந்த வெள்ளத்தைப் பார்த்து கண்ணீர்மல்கி எங்கட தமிழ்ச்சனம் நிக்க வடமாகாண 'கூத்தாடிகள்' தாங்களும் ஏட்டிக்குப் போட்டியா 'கூட்டம்' நடத்தி சாமான்கள் சேத்து தமிழ்நாட்டுக்கு அனுப்புறம் எண்டு வெளிக்கிட்டவையெல்லோ? யாழ்ப்பாணத்தில இருக்கின்ற "நடராஜப்' பெருமான் 'நோ' சொல்லிட்டாராம். இதைப் பார்த்த வடக்கின் 'கூத்தாடிகளுக்கு' கவலை. கொஞ்சம் சென்னையிலையும் உசுப்பேத்துவம் எண்டால் இந்த 'மனுசன்' விடுகுது இல்லையெண்டு வடக்கின் 'விக்னவிநாயகனும்', 'ஞானத்தாரும்' போட்டிக்குப் புலம்பினமாம். உதுக்குள்ளே ஏதேனும் 'குள்ளநரி' விளையாட்டுக்கள் கிடக்கோ?

* பனஞ்சாராயத்துக்குப் பேர் போன இடம் ஒண்டு உங்கால யாழ்ப்பாணத்தின்ர வடக்குப் பக்கத்தில இருக்கெல்லோ. அங்கை இருக்கின்ற 'ஸ்பிறீட்' பரல்களில நம்மட மாகாண 'கூத்தாடிகள்' சிலபேருக்குக் கண். ஏனெண்டு விளங்கேல்லையோ? உவங்கள் உதை எடுத்து தண்ணியைக் கலந்து கள்ளச்சாராயமென விக்கத்தான். இப்ப அரசல்புரசலாகக் கதைவருது. 'ஸ்பிறிட்' விலைப்படப்போகுது எண்டு. நம்மட தமிழ் 'குடி'மக்களே! உங்கள் அனைவருக்கும் அன்பான வேண்டுகோள்! மலிவெண்டு உதைக் குடிச்சியளோ? உங்கட வயிறெரிஞ்சு போகும். அப்பா 'சோதி' அப்பா 'கனகு' 'குடி' மக்களின் வயிறெரிச்சலில உங்களுக்கு அலாதிப் பிரியமோ?

* வடக்கிலை ஒரு பாட்டம் வெள்ளம்போட்டு முடிஞ்சுது. இப்ப மீண்டும் இன்டவல் விட்டு திரும்பப் படம் தொடங்கிறது மாதிரி வெள்ளக்காட்சி ஓடிக் கொண்டிருக்குது. நம்மட தொப்புள் கொடி நாட்டிலை 'பெரிய மனிசி' 'பெரிய மனிசிதான்'. கடல்போல நகரம் கிடக்க மனிசி 'மேலாலையும்' 'தண்ணிக்காலையும்' மக்களைப் பாத்து உதவிசெய்யுது. எங்கட வடக்கில மக்கள் வெள்ளத்துக்குள்ளே அல்லோலகல்லோலப்பட எங்கட 'மக்கள் பிரதிநிதிகள்' வெள்ளையும் சொள்ளையுமாத் திரியுறாங்கள். அங்க நடிகர்கள் எல்லாம் போட்டி போட்டுக்கொண்டு "கோடி கோடியாக" கொட்டித் தள்ளுறாங்கள். இங்க எங்கட தமிழ்க் 'கூத்தாடிகள்' மத்தியிலையும் மாகாணத்திலையும் "கோடி கோடியாக" அமுக்குவதற்கு போட்டி போட்டுக் கொண்டு பிளான் பண்ணுறாங்கள். உதுவெல்லோ இலங்கைத் தமிழ் "வெள்ள" அரசியல்.


* யாழ்ப்பாணத்தின்ர ஒரு பெரிய கலவன் பள்ளிக்கூடத்தில புதுப்புத்தகங்களை 'ஒழிச்சு' வைச்சவை. பொடி பொட்டையளுக்குக் குடுக்கவெண்டு எடுத்துப் பார்த்தா பாதிப் புத்தகத்தை 'கறையான்' கொண்டுபோட்டுது. உது எங்கட யாழ்ப்பாணத்துப் "பொம்பிளையளின்ர" பழக்கம் கண்டியளோ. சாமான்களை ஒழிச்சு வைக்கிறதுல அவைக்கு நிகர் அவைதான். பள்ளிக்கூடத்தின்ர அதிகாரம் "அம்மணியிற்ற" அல்லோ? 'ஆம்பிளையை' துரத்தி வந்த அம்மணியெல்லோ? ஆனா 'கறையான்' எல்லோ பூந்து விளையாடிட்டுது. அப்பா 'கனகரத்தினம்' கவலைப்படுறியோ?

* வட மாகாண பெரிய அவையில ஒரு புதிய "திணைக்களம்" உண்டு ஓப்பின் பண்ணியிருக்கு உங்களுக்கு தெரியுமா? அதுதான் "மொட்டைக் கடிதத் திணைக்களம்" உதிலை பெரிய பகிடியென்னெண்டால் 'பெரிய பெரிய அதிகாரிகளும்' திறமாக மொட்டைக் கடிதம் எழுதினமாம். இந்தத் திணைக்களத்துக்குரிய முத்திரைச் செலவுள்ளிட்ட இதரசெலவுகளும் வடக்கு பெரிய அவையே வழங்குதாம்? ஒரு 'பெரிய அதிகாரி' சொன்னார், தனக்கு ஒழுங்கா வாற கடிதங்களின்ர "ஒப்பிஸ் பைல்" நிரம்பேல்ல. உந்த மொட்டைக்கடித "பைல்" நிரம்பி வழியுது எண்டு. மொட்டைக் கடிதங்கள் எல்லாம் சூப்பரா டைப் பண்ணி வருகுதாம். இதிலே 'பெரிய பெரிய ஆக்களும் 'தொழிற்சங்கங்களும்' வேற சம்பந்தப்படுகுதாம். உந்த லட்சணத்திலை வடக்கு நிர்வாகம் உருப்படும் போங்க!

**இந்த வாரப் பொன்மொழி**

**நீங்கள் புதிதாகத் தெரிந்துகொண்டதை என்று நிறுத்தத் தொடங்குகிறீர்களோ அன்றே உங்களின் முதுமைப் பருவம் தொடங்கி விடுகிறது.**

# விக்கி தலைமையில் விளையாடுமா புதிய அணி?



தமிழர்களின் அரசியலில் ஒரு பரபரப்பான சூழல் தோன்றிவருவதனை அவதானிக்க முடிகின்றது. கடந்த பாராளுமன்ற தேர்தல் வேளைகளில் உண்டான பரபரப்பு கூட்டமைப்பின் வெற்றியுடன் அடங்கிப் போனது. ஆனாலும் அது அஸ்தமனமாகி விடவில்லை என்பது மீண்டும் துளிர்விடும் செய்திகள் எடுத்துக்காட்டுகின்றன.

தமிழர் தரப்பு அரசியலைப் பொறுத்தமட்டிலே புதிய மாற்றம் ஒன்று தோன்றினால் மட்டுமே தமிழர் வாழ்விலே விடியல் தோன்றலாம் எனும் கருத்துக்கள் அரசியல் அவதானிகள் உட்பட்ட பலரிடமும் காணப்படுகின்றன.

கடந்த அறுபது ஆண்டுகளாக போராடி இதுவரை கண்ட இலாபம் என்ன? தொடர்ந்து வந்துசென்ற தேர்தல்களில் தமிழ்க் கட்சி ஒன்றுக்கு வாக்கிட்டு, வாக்கிட்டு கண்டது என்ன என்னும் கேள்விக்கு விடைதேட வேண்டிய அவசியம் இப்போது தோன்றியுள்ளது.

வாக்குப்பெற்று வெற்றிகாண்பவர்கள், கொடுத்த வாக்குறுதிகளை மறந்து விடுவதுடன் மக்களையும் மறந்து விடுகின்றனர். பேரினவாத அரசுடன் சேர்ந்துகொண்டு தம் சுயநலத்தேவைகளை மட்டுமே முன்னெடுப்பதனாலும், தமிழ் மக்கள் தனித்துவிடப்படுவதனாலும் ஏற்பட்ட வெற்றிடமே இப்போதைய பரபரப்பை உண்டு பண்ணியுள்ளது.

இந்த விடயங்களையெல்லாம் நன்கு புரிந்துகொண்டு அறிந்துகொண்டு மக்களை முட்டாள்களாக்க நினைக்கும் அரசியல்வாதிகள் மட்டத்திலே தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் ஆனந்தசங்கரியும் வடக்கு முதல்வர் விக்கினேஸ்வரனும் வேறுபட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

தமிழ் வாழ்வில் முன்னேற்றம் உண்டாக வேண்டும். உட்கட்சி மோதல், நான் நீ எனும் பேதம், பதவிமோகம் என்பனவற்றினை தூக்கி எறிந்துவிட்டு இலட்சியத்துக்காக, தமிழர்களின் கனவுகளை நனவாக்க எல்லோரும் இணைய வேண்டும் என்பதில் இவ்விரு தலைவர்களும் பற்று உறுதியுடன் செயற்படுவது வெளிச்சமாகத் தெரிகின்றது.

இதனை உணர்ந்துள்ள ஆனந்தசங்கரி ஐயா தன்னுடைய கட்சியின் தலைமைப் பதவியை வடக்கின் முதல்வர் திரு விக்கினேஸ்வரன் ஐயாவுக்கு வழங்கவும் அவர் சொல்லும் ஒருவருக்குத்தான் பதவி வகிக்கும் செயலாளர் நாயகம் பதவியை வழங்கவும் தயார் என்று அறிவித்துள்ளார்.

இது இன்றைய அரசியற் சூழலைப் பொறுத்தமட்டிலே சரியான ஒரு அறிவிப்பாகவே பலரும் இதனை நோக்குகின்றனர். ஏனென்றால் இன்றைய நிலையிலேயே மாற்று அணியின் அவசியம் பற்றியே பரவலாக பேசப்பட்டும் வருகின்றன. எனவே இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்பதுடன் இதனை வடக்கின் முதல்வர் எவ்வாறு கையாளப்போகின்றார் என்பதுதான் முக்கியமானது.

ஆனாலும் ஆனந்தசங்கரியின் அழைப்பை நிராகரிக்கவோ, அன்றி ஏற்றுக்கொள்ளவோ இல்லை என்பதனை சுட்டிக்காட்டவேண்டிய தேவை இக்கட்டுரைக்கு உள்ளது.

இருப்பினும் அவர் சொல்லிய பதில் சிந்திக்கவேண்டிய நிலைமையை உருவாக்கி யுள்ளது. அவர் தனது பதிலில், அனைத்துத் தமிழர் அரசியல் கட்சிகளும், இனப்பற்று உறுதியுடனும், யாருக்கும் விலைபோகாத, அதேவேளை சலுகைகளைக் கண்டு மயங்காமல், சேர்ந்து செயற்படவேண்டும் என்றும், உட்கட்சி முரண்பாடுகளினால் சிக்கி சீரழியாமலும் இருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வரின் இக்கருத்தும் ஆனந்த சங்கரியின் அழைப்புக்குப் பதிலாக எடுத்துக் கொண்டால், அவரும் மாற்றுத் தலைமையின் அவசியத்தினை தெளிவாகச் சொல்கின்றார் என்பதனை உணரலாம்.

இதேவேளை கூட்டமைப்பு விக்கினேஸ்வரனை கழட்டிவிட, துடியாய் துடிக்கின்றது. முதலமைச்சர் பதவியை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரவும் தவிக்கின்றனர்.

இதன்காரணத்தை மையப்படுத்தியே தமிழரசுக் கட்சியினரும், கூட்டமைப்பினரும் விக்கியை எதிர்த்துவருகின்றனர். இவர்களின் எதிர்ப்பானது தமிழ் மக்களை பொறுத்த மட்டிலே விக்கினேஸ்வரனுக்கான ஆதரவு அலையாக மாறிவருகின்றது.

படித்தவர்கள், புத்திஜீவிகள், அரசியல் அவதானிகள் மட்டங்களில் விக்கி ஐயாவுக்குப் பெரும் ஆதரவுநிலை காணப்படுகின்றது. இதற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அரசியற்போக்கு சரியான தாக தென்படவில்லை. பட்டம், பதவி, சலுகைகள் என்பனவற்றை நோக்கி ஓடும் அவர்கள் தமிழர் தரப்பின் தேவைகள், நியாயங்களைப் பின்நோக்கி தள்ளி விடுகின்றனர். தமிழ் மக்களை திரும்பியே பார்க்கமறுக்கின்றனர். அரசுக்கு ஒத்து ஊதும் ஊதுகுழல்களாக மாறிவருகின்றனர்.

நிலைமை இப்படியே போகுமானால் இவர்களை விலைக்கு வாங்கிக்கொண்டு, தமிழர்களை முற்றுமுழுதாக ஓரங்கட்டவும் அரசு தரப்பு முனையலாம் எனும் கருத்தும் இல்லாமல் இல்லை. இதனை செம்மையாக, நோகாமல் செய்யக்கூடியவர் இப்போதைய பிரதமர் ரணில் விக்கிரம சிங்க.

இவர் இப்படியான காரியங்களில் பிரசித்தமானவர், இது நடைபெறுமானால் இதுவரை காலமும் போராடியதிலும் சொத்து, சுகம் உயிர்களை இழந்ததிலும் அர்த்தமில்லாது போகலாம்.

இத்தகைய ஆபத்தினை உணர்ந்து தான் ஆனந்தசங்கரி அழைப்பை மேற்கொண்டுள்ளாரா? என எண்ணத் தோன்றுகின்றது.

நிலைமை இவ்வாறு இருக்கும்போது திரு.விக்கினேஸ்வரனின் அண்மைக்கால நடவடிக்கைகளும், வெளிப்படையான அரசியலை காய்நகர்த்தி வருகின்றனர்.

அவருடைய கருத்துக்கள் யாவும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளை, அவர்களின் தேவைகளை நியாயப்படுத்தியும் இலங்கை அரசின் தமிழர் தரப்பு விரோதச் செயற்பாடுகளையும் வெகுவாகக்கண்டித்தும் வருகின்றார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் யாழ்ப்பாணம் வரும்வேளைகளில் அவர்களுக்கு உண்மைகளை எடுத்துச் சொல்லி நியாயமான மனிதராக தன்னை வெளிப்படுத்தியும் வருகின்றார்.

அண்மையில் அமெரிக்காவின் சமந்தா பவர் யாழ். வந்தபோது விக்கியுடன் உரையாடியிருந்தார். அப்போது அவர், "இலங்கை அரசு தமிழர் விடயங்களை சரியாக, கையாள்கின்றதா? அரசு சொல்வதைப் போன்று அரசு செயற்படுகின்றதா? என்று கேட்டிருந்தார்.

இதற்கு விக்கினேஸ்வரன் பதிலளிக்கையில், அரசின் கபடநாடகத்தையும், நல்லாட்சியின் பெயரினால் தமிழ் மக்கள் படும் துன்பதுயரங்களையும் விலாவாரியாக எடுத்துரைத்தார்.

சமந்தா இதே கேள்வியை கொழும்பில் வைத்து எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தனிடமும் கேட்டிருந்தார். அவர் (சம்பந்தன்) இலங்கை அரசுக்கு சார்பாகவே கருத்து வெளியிட்டிருந்தார். தமிழர்களின் சுயநலன்களைப் புறந்தள்ளி அரசுடன், ஒத்துப்போய் தமிழர்களுக்கு எதிராக, அரசுடன் இணைந்து செயற்பட்டுவரும் வல்லரசுகளுக்கு இந்தப் பதில் எப்படி இருக்கும்?

சம்மந்தன் இப்போது தமிழ் தலைவரா? இல்லையா? என்பதனை தெளிவுபடுத்த வேண்டிய தேவை தோன்றியுள்ளது.

இலங்கை அரசு அண்மையில் வெளி யிட்ட வரவு - செலவு அறிக்கையினை சம்பந்தன் தரப்பு பாராட்டி புகழ்மாலை சூட்டியது. ஆனாலும் இலங்கையின் பொருளாதார வல்லுனர்கள் இது ஒரு மோசமான வரவு - செலவு என்று பதிவு செய்துள்ளது.

இதேவேளை வரவு - செலவு அறிக்கை யையும் ஆதரித்துள்ளது. அரசுடன் சேர்ந்து இயங்குவதால் இது எதிர்க்கட்சியா?? இல்லை அரச கட்சியா? என்று எல்லோரும் கேட்கின்றனர்.

இதனைப் சரியாக புரிந்துகொண்டுள்ள மகிந்த அணியினர் சம்பந்தன் தரப்பிடமிருந்து எதிர்க்கட்சித் தலைமையை பறித்தெடுக்க முனைகின்றனர். அரசுடன் எதிரணி சேர்ந்து செயற்படுவதனால், ஒரு பலமான எதிர்க்கட்சி யாக எங்களையே ஆதரிக்கவேணும் என்றும் அவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

தமிழ் மக்களையும், ஆதரவையும் இழக்கும் சூழ்நிலை உருவாகினால்கூட ஆச்சரியமடையமுடியாது. இப்போதுள்ள அரசியல் சூழ்நிலைகளின் பிரகாரம், தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு எதிரான ஒரு அணி உருவாகினால் மட்டுமே அதுவும் பலமான அணியாக அமையவேண்டும். தமிழர் தரப்பு கட்சிகள் சிந்தி, சிதறி நிற்காமல் ஒரு அணியை உருவாக்கி வளர்த்தெடுப்பதே சரியான அரசியல் பாதையாகும்.

இதற்கு விக்கி ஐயாவின் தலைமை பலமான அணியாக அமையலாம் என்னும் கருத்தும் பரவலாக பேசப்பட்டுவருகின்றன. முதல்வருடைய கருத்தும் எல்லோரும் ஒரு குடையின்கீழ் சேரவேண்டும் என்று சொல்லுகின்றார். தனியாகவும், குழுவாகவும், அரசுடன் இணைந்து செயற்படுவதனைவிட தமிழ் மக்களின் நலனுக்காக ஒன்று சேரும்போது, பிற்போக்கு தமிழ் தேசியம் உடைக்கப்பட்டு, பரந்த அளவிலான, அணி திரட்டல்கள்மூலம் நிலைநாட்டப்படும் அரசியலே தமிழ் தேசியத்துக்கான, இனத்துக்கான விடுதலையைக் கொண்டுவரும்.

எனவே, இனிமேலும் அது, இது என்று காத்திருந்து காலம் கடத்தாமல் அனைவரும் ஒன்றிணைந்து போராடினால் மட்டுமே பலன் கிட்டும். கிடைக்கலாம்.

இல்லாவிட்டால் இன்னும் பல வருடங்கள் காத்திருக்கவேண்டும். அதற்கிடையே புகைவண்டி முன்பாய்ந்து தற்கொலை புரிந்த செந்தூரன்போல, இன்னும் பல செந்தூரன்கள் தலையெடுத்தால் நாடு தாங்காது! எனவே இன்றைய அவசர, அவசிய நிலை உணர்ந்து அனைவரும் நான், நீ எனும் பேதம் மறந்து ஒரு குடையின்கீழ் சேர்ந்தே சிறந்தது. இதுவே இன்றைய அவசிய, அவசர தேவையாகும்.

**அளவெட்டி ப.உதயகுமார்**

---



# நரகமாகும் மாநகரம்...

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இடம் பெற்றுவரும் சுத்திகரிப்புப் பொறிமுறையில் காணப்படும் சீர்கேடு காரணமாக பல நடைமுறைச் சிக்கல்கள் பொதுமக்கள் பக்கங்களில் நின்று நிழலாடுகின்றன. விமர்சனங்களிற்காக வீண்வாதம் வளர்ப்பது இங்கு நோக்கமல்ல. இதற்கொரு தீர்வுவேண்டும் என்பதே இங்குள்ள எதிர்பார்ப்பு. இதுதொடர்பாக உரியவர்களிடம் பல முறைப்பாடுகள் தெரிவித்தும்கூட பயன் ஏதும் கிடைக்கவில்லை. இதனால்தான் இது பத்திரிகையின் பார்வைக்கு வந்தது.

வீடுகளில் குப்பைகள் இருக்கக்கூடாது, புதைக்கக் கூடாது, எரிக்கக்கூடாது என்று பல சட்டங்களை முன்வைக்கும் மாநகரசபை அதனை வீடுகளில் வந்து சீராக எடுக்கின்றதா என்றால் அதுவும் இல்லை. தெருவோரம் வைத்தால் மட்டுமே வாகனம் வரும்போது எடுப்பார்கள் என்றால் அதனையும் எடுக்காதகட்டத்தில் வைத்தவரிற்கு எதிராக சட்டநடவடிக்கை. ஓரமாகக் கொண்டு சென்று ஓரிடத்தில் போட்டால் போட்ட இடத்தில் "போட்டை" நடுகின்றார்கள் "இவ்விடத்தில் குப்பைபோட வேண்டாமென்று." அப்படியானால் எவ்விடத்தில் போடுவது...? எதைச் சொல்கின்றார்கள்...? எதை மக்கள் செய்வது...? எதை நீங்கள் செய்கின்றீர்கள்...? என்பதுதான் எமது கேள்வி.

குப்பைகளைப் பிரித்துப்போடச் சொன்னீர்கள்? பிரித்ததையேனும் எடுக்கின்றீர்களா...? ஏதோ படிவமெல்லாம் தந்தீர்கள். அதையேனும் சீராக நடைமுறைப்படுத்தினீர்களா? உங்களிடம் இருக்கின்ற எந்த நடைமுறைப் பிரச்சினையையும் இதற்கு சாட்டாகக் கூறமுடியாது காரணம். நல்லூர் திருவிழாவில் கிடைக்கும் வருமானமே போதும், இதற்கென்றால் மக்களின் மற்றைய வரிப்பணங்கள் எங்கே...? பலதுருவங்களில் உங்களிற்கு பல வருமானங்களைத்தரும் மக்களின் தேவையை நிறைவுசெய்ய முடியாவிட்டால் அது உங்களின் தவறு. இதை எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாது. இது ஒருபுறமிருக்க சுத்திகரிப்பு வாகனத்தில் வருபவர்களின் மிடுக்கான பேச்சும், வன்முறையான வார்த்தைப்பிரயோகமும் அதைவிட மோசம். அதை எடுக்கமாட்டோம், இதை எடுக்க மாட்டோம், அதில போடு, இதில போடு, காசு தந்தால்தான் எடுப்போம், என்கின்ற வன்முறைவழி வார்த்தைகள் அதிகம்.

இது ஒருபுறம், மறுபுறத்தில் இறுதிச்சடங்குகூட இல்லாமல் சுடலைக்கு நேரே கொண்டுபோற அளவிற்கான டைக்டர் ஓட்டம். தெருவோரத்தில் பாடசாலைப் பிள்ளைகள் உட்பட பலர் செல்லும்வேளை கண்மண் தெரியாத ஓட்டம் ஓடுவார்கள். குப்பை டைக்டர் சாரதிகள் குப்பைகள் திறந்துவிடப்பட்டநிலையில் வீதியில் பறக்க நகரத்தின் மத்தியில் வலம்வரும் நரகநாற்றம். இதில் நடைமுறைச் சிக்கல்கள் பல அவர்கள் பக்கத்திலும் இருக்கலாம். சிக்கல்களை எதிர்கொண்டு சில மாற்றங்களை ஏற்படுத்த முற்படுவதுதானே நிர்வாகத்திறன். மாற்றங்கள் வந்துகொண்டு இருக்கின்றது.

மேலும் மாற்றம் தேவையென்றால் ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம். எதிர்பார்க்கலாம். இங்கு மாற்றத்திற்கப்பால் இருந்த பொறிமுறையில்கூட குறைபாடுகள் முற்றிய நிலையில் காணப்பட்டுவருகின்றதே...! ஒருவரால் செய்யக்கூடியதை இன்னொருவரால் செய்ய முடியாவிட்டால் அது அவரது பலவீனமே தவிர முடியாதென்ற நிலையல்ல.

**மாற்றத்தை வேண்டி நிற்கும்**
**மதியழகன்**

## மருத்துவம்





# பச்சை உணவா... வேகவைத்த உணவா...

சில உணவுகளை பச்சையாக சாப்பிடலாம், சில உணவுகளை வேகவைத்து தான் சாப்பிடவேண்டும். சிலசமயங்களில் பச்சையாக உண்ணும்போது செரிமானப் பிரச்சினைகள் சிலருக்கு ஏற்படலாம். உணவுகளை வேகவைத்து சாப்பிடுவதால், செரிமான பிரச்சினை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியும். வெயில் காலத்தில் பச்சை உணவுகளை சாப்பிடலாம் எனக் கூறப்படுகிறது.

காய்கறி, பழங்கள் போன்றவற்றை மதியஉணவில் சேர்த்துக்கொள்வது நல்லது. மற்றும் இரவு உணவு, குளிர்காலத்தில் பச்சை உணவுகளை தவிர்த்தல் நல்லது. வேகவைக்காத அல்லது சமைக்காத பச்சை உணவுகள் உடலில் சேதம் ஏற்படுத்தும் வாய்ப்புகள் உண்டு. ஆயுர்வேத முறையில் வேகவைக்காத உணவு, செரிமானம், உடல் வெப்ப நிலை, முடி உதிர்தல், தூக்கமின்மை போன்ற பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்று கூறப்படுகிறது. காய்கறி மற்றும் பழங்களை ஜூஸாக பருகுவது சிறந்த முறை.

இவை ஊட்டச்சத்துக்களை அளிப்பது மட்டுமின்றி, எளிதாக செரிமானம் ஆகிவிடும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் மட்டும் பழங்களை கடித்து உண்பதுதான் நல்லது. உடலில் உள்ள நச்சுக்களை போக்க, அப்பிள், பப்பாளி, பெர்ரி, அன்னாசி, பேரிக்காய், துளசி போன்ற உணவுகளை பச்சையாக அல்லது ஜூஸாக அப்படியே சாப்பிடலாம்.

மேலும் இஞ்சி, மஞ்சள், கொத்தமல்லி, வெந்தையம், சீரகம் போன்ற உணவுப் பொருட்களை காய்கறி சூப் போன்று சமைத்து உட்கொண்டாலும் உடலிலுள்ள நச்சுக்களை போக்க முடியும். உணவுகளில் இருக்கும் ஊட்டச்சத்துக்களை அப்படியே தங்க வைக்க, குறைவான சூட்டில் வேகவைப்பது தான் சிறந்த முறையாகும். இவ்வாறு சமைப்பதால் உணவில் ஊட்டச்சத்து தங்குவது மட்டுமின்றி, செரிமானமும் சீரிய முறையில் இயங்க வழிவகுக்கும்.

மைக்ரோவேவில் மீண்டும் சூடுசெய்வதால், அதிலிருந்து வெளிப்படும் சூடு, உணவில் இருக்கும் மூலக்கூறுகளை சிதைத்துவிடுகிறது. இது உடலுக்கு தீங்கு விளைவிக்கும் செயல் என்பதால் மைக்ரோவேவ் ஓவனை தவிர்ப்பது நல்லது.

மஞ்சள், சீரகம், மிளகு சேர்த்து உணவை சமைப்பது சிறந்த முறை ஆகும். இவை உடலுக்கு வலிமையும், நலனும் அதிகரிக்க வைக்கின்றன. மேலும் மிகுதியாய் வேகாமல் அல்லது கருகிவிடாமல் சமைக்கவேண்டும்.

ஃப்ர்ட்ஜில் வைத்து பயன்படுத்தும் உணவுகளை தவிர்ப்பது நல்லது. இன்று சமைத்த உணவை இன்றே சாப்பிட்டு விடுவதுதான் சிறந்த முறை. எனவே, ஃப்ரிட்ஜில் வைத்து நாட்கள் கடத்தி உணவை உண்ணும் பழக்கத்தை கைவிடுங்கள். இது செரிமான பிரச்சினைகள் உண்டாக முக்கிய காரணமாகும்.

குழந்தைப்பேறுக்குப் பிறகு பெண்களுக்கு உடல் எடை அதிகரித்துவிடுகிறது. பெரும்பாலானோர் சிசேரியன் அறுவைச்சிகிச்சை செய்திருப்பதால், கடினமான உடற்பயிற்சிகளைச் செய்யத் தயங்குவர். சின்னச்சின்னப் பயிற்சிகள்மூலமே, எடையைக் குறைக்கமுடியும்.

கால் முட்டி தரையில் படாதபடி, பாதம் மற்றும் கை விரல்களைத் தரையில் ஊன்றியபடி இருக்கவும். இப்போது ஒரு கையால் உடலைத் தாங்கியபடி, மற்றொரு கையை முன்னோக்கிக் கொண்டுசென்று தரையில் பதிக்கவும். பிறகு, மற்றொரு கையையும் முன்னே கொண்டுசென்று தரையில் ஊன்றவும். பிறகு, கால்களைப் பின்னே நீட்டவும்.

உடல் தரையில் படக்கூடாது. ஓரிரு விநாடிகளுக்குப்பிறகு, பழைய நிலைக்குச் சென்று, மெதுவாக கால் விரல்கள் மற்றும் முன்னம் பாதங்களில் எழுந்துநின்று, கைகளை உயர்த்தி இறக்கவும். ஒவ்வொரு பயிற்சியையும் மூன்று செட்களாகப் பிரித்து, ஒவ்வொரு செட்டுக்கும் 10 முறை செய்யவேண்டும்.

பலன்கள்: உடல் எடையைக் குறைக்க உதவும். இதயத்துடிப்பு சீராக இருக்கஉதவும். நுரையீரல் செயல்பாடு அதிகரிக்கும்.

# பெண்களின் தொப்பையை குறைக்கும் பயிற்சி




# சாப்பிடுவது எப்படி?

என்ன சாப்பிடவேண்டும்? எப்போது சாப்பிடவேண்டும்? எப்படி சாப்பிட வேண்டும்? இந்த மூன்றும் மிக, மிக முக்கியமானது. இதற்கு நம் முன்னோர்கள் நிறைய விதிகளை வகுத்துவைத்துள்ளனர். அதில் சில வருமாறு:-


சந்தியா காலங்களில் சாப்பிடக்கூடாது. விருந்தினருக்கு கொடுக்காமல் தான் மட்டும் சாப்பிடக்கூடாது தேவர், தாய், தந்தை, ஆச்சாரியர், இவர்கள் சாப்பிட்ட பிறகு சாப்பிடுவதே சிறந்தது. பகல் ஒருவேளையும், இரவு ஒருவேளையும் உணவு உண்பதே சிறந்தது. மற்ற நேரங்களில் சாப்பிடக்கூடாது. விடியற்காலம், நடு இரவு இக்காலங்களில் சாப்பிடக்கூடாது.



கை, கால்கள், வாய் இவை-களைத் தூய்மை செய்துகொண்டு உண்ணவேண்டும். இரண்டு ஆடைகள் அணிந்து (கீழாடை, மேலாடை) ஈரமான கைகால்களுடன் உணவு, உண்ணவேண்டும். மெழுகிட்டுத் தூய்மையாய் விளங்கும் மேடுபள்ளமற்ற சமமான தரையில் இருந்து சாப்பிடவேண்டும். ஈரமான பாதத்துடன் தூய்மையான பீடத்தில் கிழக்கு முகமாக இருந்து இரண்டு பாதங்களால் பூமியைத் தொட்டுக்கொண்டு சாப்பிடவேண்டும். ஆசனத்தின் மேலேயே பாதங்களை வைத்துக்கொண்டும், வாயினால் அன்னத்தை ஊதிக்கொண்டு உண்பது கூடாது. கிழக்கு முகமாக இருந்து சாப்பிடவேண்டும். மேற்கு முகமாக இருந்தும் உண்ணலாம். தெற்கு முகமாக இருந்து சாப்பிடக்கூடாது. இலை, வெண்கலம், வெள்ளி, பொன் இவைகளால் செய்யப்பட்ட பாத்திரங்கள் உணவு உண்ணும் கலங்களாகக் கொள்ளத்தக்கவை. பலா, மா, தென்னை, வாழை, வில்வம் இவற்றின் இலைகளிலும் வெண்கலப் பாத்திரத்திலும் உணவு சாப்பிடக்கூடாது. ஆல், எருக்கு அரசு, சிறுகுமிழ், நீர்ச்சேம்பு தும்பை, மாம்பழம் கொன்றை, புங்கை இவைகளின் இலைகளில் உணவு சாப்பிடக்கூடாது. ஆடையிலும், கல்லிலும் உணவருந்தக்கூடாது. இருகையைக் குவித்துக்கொண்டு நீரைக் குடிக்கக்கூடாது. நீர், பால், நெய், பாயாசம், இவைகளைச் சத்தத்துடன் உறிஞ்சிக் குடிக்கக்கூடாது. அது கள் குடிப்பதற்குச் சமமானதாகும். சாப்பிடும்போது வீண் பேச்சுப்பேசக்கூடாது.

உணவில் வெண்ணெய் சேர்ப்பது நல்லதா என்று கேட்டால் பலரும் உடனே சொல்வது 'இல்லை' என்றுதான். ஏனெனில் இதனை உட்கொண்டால், இதில் நிறைந்துள்ள கொழுப்புக்களால் விரைவில் கொழுகொழுவென்று குண்டாகிவிடுவோம் என்பதுதான் காரணம். ஆனால் உண்மையை சொல்ல வேண்டுமானால், அக்காலத்தில் நம்முன்னோர்கள் வெண்ணெயைத்தான் பெரும்பாலும் பயன்படுத்தினார்கள்.

# வெண்ணெய் உடலுக்கு ஆரோக்கியமானதா?



ஆகவே வெண்ணெய் ஆரோக்கியமற்றது என்று கூற முடியாது. அதேநேரம் அளவாக எடுத்து கொண்டால் எந்த பிரச்சினையும் இல்லை. வெண்ணெயில் கலோரிகள் அதிகம் உள்ளது. ஆகவே இதனை அளவாக சாப்பிட்டால், உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம். வெண்ணெயில் லெசிதின் என்னும் பொருள் உள்ளது.

இது கொழுப்பைக் கரைக்க உதவும். இப்படி கொழுப்பைக் கரைந்தால், உடல் எடையை கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அதற்கு இதனை உணவில் அளவாக சேர்த்துக் கொள்ளவேண்டும். வெண்ணெய் சிறந்த அன்ரி-பக்ரீரியல் மற்றும் பூஞ்சை எதிர்ப்பான். எனவே இவற்றை உட்கொள்வதால், அது உடலில் ஏற்பட்டுள்ள சிறு நோய்த்தொற்றுகளை தடுக்கும்.

வெண்ணெய் சாப்பிடுவது, நோயெதிர்ப்பு மண்டலத்திற்கு நல்லது. ஏனெனில் இதில் நிறைந்துள்ள ஊட்டச்சத்துக்கள், நோயெதிர்ப்பு மண்டலத்தை சீராக செயற்பட வழிவகுத்து, நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

## இனிதா வைத்தியசாலை

முறிவு, நெரிவு, முள்ளந்தண்டு நோ, நாரிப்பிடிப்பு
சகலவிதமான நோய்களுக்கும் சிறந்த முறையில்
சிகிச்சை அளிக்கப்படும்

மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் கடமையாற்றும் Dr.S.சௌந்தரராஜன் ஆகிய நான் முறிவு, தெரிவு வைத்தியராக உள்ளேன். எனது வைத்திய சேவையில் முறிவு, நெரிவு, முள்ளந்தண்டு நோ, நாரிப்பிழப்பு, நாள்பட்ட நோ, சகலவிதமான நோய்களுக்கும் சிறந்த முறையில் குணப்படுத்தப்படும். எனது வைத்திய சேவையானது இனிதா வைத்தியசாலை எனும் பெயரில் சீனிவாசகம் றோட், கொட்டடி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்றது என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

தொ.இல:0771784196




# விளக்கு மட்டுமா சிவப்பு?

## சொல்லத்தான் நினைக்கிறேன்

சாதாரண மற்றச் சமூகங்களில் பெண்ணை மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோன பிறகு தான் சாந்தி முகூர்த்தம் நடத்துவது வழக்கம்.

ஆனால் எங்கள் சமூகத்தில் பெண் வீட்டிலேயே அதை நடத்திவிடுவார்கள்.

அது ஏனோ ஒரு ராசி என்று அந்தச் சம்பிரதாயத்தை வைத்திருந்தார்கள்.

சில உறவினர்கள் அங்கே இருந்த தால், என் அக்காவிடம் விவரமாகப் பேச முடியவில்லை.

ஆனால், தாயும் மகளும் பேசிக் கொள்கிறார்களா என்பதை, மாப்பிள்ளையின் தாய், தந்தையர் அடிக்கடி கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

உலகத்தைப் பற்றியோ ஆண், பெண் உறவு பற்றியோ விரிவான நவீன விஷயங்களை என் தாயோ, தமக்கையோ படித்ததில்லை.

ஆனால், கல்வி அறிவற்ற என் தாய்க்கு மற்ற தாய்மார்களைப் போலவே புனிதமான தாம்பத்திய உறவு பற்றித் தெரியாதா? அந்த உறவு தொடங்கிய மறுநாள் ஒரு பெண் எப்படி இருப்பாள் என்பது புரியாதா?

வாடாத பூவும் கலையாத சேலையும் அதைப் புரியவைக்காதா?

ஏதோ பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டோம் என்பதுபோன்ற பயம் என் தாய்க்கு வந்துவிட்டது.

ஆனால், அன்று நேரம் ஆக ஆக, அக்கா மிகவும் மகிழ்ச்சியுற்றவள்போல் காணப்பட்டாள்.

போலித்தனமானதும், பெற்றோருக் குத் தொல்லையாக இருக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் கூடியதுமான அவளது புன்னகையை என் தாயால் புரிந்துகொள்ள முடிந்தது.

'பெண் எப்படி வாழுகிறாள்' என்று கேட்டால் 'நன்றாக வாழுகிறாள்' என்று சொல்லுவது கணவனிடம் சந்தோஷமாக வாழுவதைத்தானே?

திருமணம் புனிதமானது.

குடும்பம் புனிதமானது.

ஆனால், அந்தப் புனிதத்துவத்தில், தேகமும் ஒரு பகுதியல்லவா?

சுமங்கலி ஒருத்தி, விதவை போலவும் வாழலாம். அதாவது உடல் இச்சையைப் பொறுத்தவரையில் அது எப்போது?

ஐம்பது வயதுக்கு மேல்தானே!

தாய்க்கு, மகள் சொல்லாமலேயே சகல விஷயங் களும் புரிந்துவிட்டன.



“பையன் எவ்வளவு படித்து இருக்கிறேன்? பெற்றோருக்கு எவ்வளவு சொத்து?” என்று கேட்கும் இந்தச் சமுதாயம் ஒரே ஒரு முக்கியமான கேள்வியை மட்டும் கேட்பதில்லை.

அதாவது, “பையன் ஆண் மகன்தானா?” என்பது அது.

எத்தனை பெண்கள் சரியான உறவில்லாமல், அதிகாலையில் பச்சைத்தண்ணீரில் குளித்து, உப்பில்லாமல் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறார்களோ? ஆண்டவனுக்கே வெளிச்சம்.

ஆனால் என் சகோதரி அந்த நிலைக்கு ஆளானாள் என்பது எங்களுக்கு வெளிச்சமாகிவிட்டது.

தன் மகனைப் பற்றிய விவரம் அந்தப் பெற்றோருக்குத் தெரியாதா?

தெரியும்...

இருந்தும் ஏன் திருமணம் செய்ய விரும்பினார்கள்.?

'பணம் இருக்கிறது' வசதி இருக்கிறது; பையனும் அழகாக இருக்கிறான். இருந்தும் ஏன் திருமணம் நடைபெறவில்லை? என்று ஊரார் கேட்பார்களே?

என்ன பதில் சொல்வது?

சொல்லக்கூடிய பதிலா அது?

ஆகவே, சம்பிரதாயத்திற்காக ஒரு திருமணம்.

அந்தத் திருமணத்திற்குக் கழுத்தை நீட்டுகிற பெண். அந்த இரகசியத்தை வெளியிடாதவளாக இருக்கவேண்டும்.

அந்தப் பலிபீடத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்டுக்குட்டிதான் என் சகோதரி.

உத்தமமான பெண்களுக்கு மட்டும்தானே இந்தச் சோதனை?

அவள் படித்தவளாகவும், நவீன கருத்துக்களைத் துணிந்து ஏற்றுக் கொள்பவளாகவும் அமைந்துவிட்டால், பெண்ணழைப்பிற்கே சம்மதித்திருக்கமாட்டாளே!

முதல் நாள் கல்யாணம். மறுநாள் விவாகரத்து என்றல்லவா கதை முடிந்திருக்கும்.

“இத்தகைய திருமணத்தினால் வாரிசு தோன்றவும் வழியிருக்காதே” என்பீர்கள். அதற்குத்தான் சுவீகாரம் என்றொரு முறையிருக்காதே!

ஊராருக்குத் தன் மகனைப் பற்றிய விவரம்தெரியாமல் இருந்தால்போதும்.

பணம்! பணம்!

அது படுத்தும் பாடுதான் எவ்வளவு?

அவர்களிடம் அது இருந்ததால், ஒரு கிணறு வெட்டமுடிந்தது.

எங்களிடம் இல்லாததால், ஒரு பெண்ணை அதில் தள்ளவேண்டி வந்தது. அனுசூயையின் கதையையும், அருந்ததியின் கதையையும் ஏன் நமது பெண்களுக்கு அதிகம் சொல்கிறார்கள் தெரியுமா?

இப்படிப்பட்ட மாப்பிள்ளை யாருக்கும் வாய்க்கலாம் என்பதால்தான்!

என் சகோதரி அனுசூயை ஆனாள்; அருந்ததி ஆனாள்! சீதைஆனாள்; கண்ணி ஆனாள்.

பத்தினிதனத்திற்கு இலக்கணம்தான் பத்தாயிரம் இருக்கிறதே.

ஆனால் பிரக்ஞையற்ற நிலையில் கூட அவள் அகலிகை ஆகவில்லை.

முன்பு மாங்கல்யமில்லாமல் வாழ்ந்த வாழ்க்கையை பின்பு மாங்கல்யத்தோடு வாழத் தொடங்கினாள்.

கணவன் உடனிருந்து ஊட்டி மகிழ்ந்தாள்.

அவளது மாமியாரே நடத்தையைப் பார்த்து, கண்ணீரோடு அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாராம்.

“மகாலட்சுமி, மகாலட்சுமி” தான் என்றாளாம். அந்த மகாலட்சுமியை மார்பில் சூடிய திருமாலைப் போலவே தான், என் அத்தானும் இருந்தார்.

அவரைச் சொல்லிக் குறை என்ன?

மனைவியை அவர் உயிராக நேசித்தார்.

தன்னால் அவளுக்கு மகிழ்ச்சி யில்லை என்பதை எண்ணி எண்ணிப் புழுங்கினார். தனது பலவீனத்தை யும், தாய் தந்தையர் செய்த முட்டாள் தனத்தையும் நினைத்துவெந்தார்.

(விளக்கு எரியும்)

---

## வாரமொரு சிந்தனை

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பொருளாதாரச் சிந்தனைகள்

இந்த வாரச் சிந்தனை பொருளாதாரத்தில் நமது நிலை என்ன? என்பதுதான். நாம் போகும் திசை சரியானதுதானா? அல்லது வழிதவறிச் செல்கிறோமா? ஏனெனில் மானிட வாழ்க்கையின் அடிப்படையே பொருள் தான். வாழ்க்கைக்கு ஆதாரம் பொருள்; அதனால்தான் பொருளாதாரம் என்று பெயர் வைத்தார்கள் போலும்.

மானுடத்தின் உடல்சார்ந்த வாழ்க்கைக்கு இன்றியமையாத் தேவை பொருள். பொருள் என்னும் சொல் விரிவான பொருளாக்கம் தரும் சொல்லாகும். உணவு, உடை, இருக்க இடம் முதலியன எல்லோருக்கும் வேண்டிய அடிப்படைத் தேவைகள். இந்த அடிப்படைத் தேவைகள் நிறைவேறியநிலையில் மேலும் தேவைகள் வளரும்.

தேவைகளை உழைப்பின்மூலம் அடைவது முதல் நிலை - ஆரம்பநிலை. காலப்போக்கில் சொத்து உருவாக்கும் ஆர்வத்தால், சொத்து, நிலம் முதலியன சேர்த்து, நிலப்பிரபுக்களாகி, பின் மெல்ல மெல்ல சுரண்டும் பொருளாதார நடைமுறைக்கு வந்துவிட்டான் மனிதன். இது வளரும் சமூகத்திற்கு நலம் பயக்காது.

ஒரு சமூகம் பொருளாதாரத்தில் சிறந்து விளங்கவேண்டுமானால் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்ற வேலைகள் நடைபெறவேண்டும். இது தவிர்க்க இயலாதது மட்டுமல்ல, அப்போதுதான் முழுமையான வளர்ச்சியைக் காணமுடியும். மானுட சமுதாயம் பொருளாதாரம், கல்வி, கலை ஆகிய அனைத்துத் துறைகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப் பெறுதல் வேண்டும்.

இவையனைத்தும் - அதாவது கல்வி, பொருளாதாரம் கலை ஆகியன ஒன்றையொன்று தழுவியன. ஒன்றின்றிப் பிறிதொன்று முறையாக வளராது; பூரண வளர்ச்சியும் நடைபெறாது; பொருளாதாரம் என்பதன் முழுப்பொருள் பணமுடை யவராதல் அல்ல; சொத்துடையவராதல் அல்ல. வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்பதாகும். பொருளுக்காக வாழ்க்கை யல்ல; வாழ்க்கைக்காகவே பொருள்.

பொருளாதாரம் உயர்ந்து வாழ்க்கைத்தரமும் உயர்ந்து விளங்கினால்தான் பாதுகாப்புக் கிடைக்கும். சமாதானமும் அமைதியும் கிடைக்கும். உலகத்தில் பலகோடி மக்கள் வறுமையில் கிடந்து உழலும் வரை சமாதானமும், அமைதியும் பகற்கனவே.

மக்கட் சமுதாயத்தில் நிலவும் சமநிலையற்ற பொருளாதார அமைவை முதலில் சமநிலைப்படுத்தவேண்டும். இதுவே பொருளாதாரம். தமிழ் சமுதாயத்தில் நிலவும் பொருளாதார சமநிலை இருள் நிறைந்தது. இந்த சமனற்ற தன்மையை மாற்றத் தொலைதூரம் சென்றிடல் வேண்டும். அத்தொலைதூரத்திற்குச் செல்ல முயற்சி செய்யப்படல்வேண்டும்.

நமது ஏழ்மைநிலைக்கு கிரகங்கள் காரணம் அல்ல. நாம்தான் காரணம். வறுமையையும் ஏழ்மையையும் தொடர்ந்து போராடி அகற்றாத நாம் தான் குற்றவாளிகள். திருந்துவோம்! திருத்தமுறத் திட்டமிடுவோம்! திட்டமிட்ட திசையில் செல்வோம்.

பழங்காலத்தில் திண்ணைகள் இருந்தன. திண்ணைப் பேச்சு இருந்தது. இன்று முச்சந்திப் பேச்சு, கடைப்பேச்சு என்று உழைக்கும் காலமும், மனித ஆற்றலும் விரயமாகிறது. நுகர்வோர் எண்ணிக்கை கூடிவிட்டது. ஆனால் நுகர்வோருக்குத் தேவையான பொருட்கள் உற்பத்தி செய்யப் பெறவில்லை. ஒருபுறம் பிரமிக்கத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளதை மறுக்கமுடியாது.

நவீன மருத்துவ வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. அதனால் பல நோய்கள் நமது நாட்டை விட்டே விடைபெற்றுப் போய்விட்டன. நோய் வெளியேறியபோதிலும், பசி என்ற நோய் வெளியேறவில்லை. பலர் உயிரோடு இருந்தும் பசியினால் வாடுவதில் என்ன பயன்?

(தொடரும்)

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தவகையில் யாழ். நீரவேலி அத்தியார் இந்துக் கல்லூரி, யாழ். அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், ஆகிய அவ்வாறான ஆகும். இருப்பினும் மாணவர் வசிப்பிடங்களுக்கிடையே தூரம் அதிகம் என்பதால் உரிய பலனைத் தரவில்லை. இதேபோன்று யாழ்ப்பாண மாவட்டத்தின் நகரை அண்டிய பாடசாலைகளில் கட்டாயக் கல்விக்குழுவை நேர்முகங்கண்ட போதும் பின்வரும் இடர்பாடுகளை அவர்கள் முன்வைத்தனர்.

**கட்டாயக்கல்விக் குழு உறுப்பினர்களை நேர்முகங்கண்டு பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு**

கட்டாயக்கல்வியைப் பல்வேறு பரிமாணங்களில் விருத்தியாக்கும் செயற்திட்டங்கள் மிகவிரைவாக முன்னெடுக்கப்படுகின்றன. இதில் பெற்றோருக்கான கல்வி விழிப்புணர்வு எழுத்தறிவூட்டல் சுயதொழில் கல்வி திறந்த பாடசாலை முறைமை பாடசாலை அதிபர்களுக்கான வலுவூட்டல், உட்படுத்தல் கல்வியினூடாக பாடசாலை மையக்கல்வி அபிவிருத்தி என்பன முக்கியம்பெறுகின்றன. மேற்குறிப்பிட்ட அனைத்தையும் வினைத்திறனாக்க பெற்றோர்களுக்கான கல்வி விழிப்புணர்வு அவசியம் என கல்வி அமைச்சின் ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன. (பா.தனபாலன் 2012)

கட்டாயக் கல்வியில் காணப்படுகின்ற மாணவர்களில் 17 வீதம் குறித்த பாட-சாலை வாழ்க்கையினைப் பூரணப்படுத்த மாட்டார்கள். ஆரம்பக் கல்விக்கு பிரவேசிக்கின்ற வீதம் 56.56 வீதமாகும்.



# இலங்கையில் கட்டாயக் கல்வி

(NEREC 2007) ஆய்வு - மாற்றுக் கருத்துக்கான நிலையம் - 2008 பாடசாலை கணக்கெடுப்பு 2007, கல்வி அமைச்சு. தமது வகுப்பில் உள்ள மாணவர்கள் 97 வீதம் மாணவர்கள் ஏதோவொரு வகையில் கஸ்ரங்களை அனுபவிக்கின்றார்கள்.

அவ்வாறான மாணவர்களின் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஊட்ட வேண்டும் என நூறு வீதம் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொடர்பாக கலந்துரையாடக்கூடிய சூழல் இல்லை என 68 வீதம் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஆசிரியர், அதிபர், மாணவர் தொடர்பாக மனந்திறந்து பேசமுடியாத நிலையில் உள்ளவர்கள் என 63 வீதம் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

விளங்காத விடயங்களை ஆசிரியர்களிடம் கேட்க அஞ்சுவதாக 42 வீத மாணவர்கள் தெரிவிக்கின்றனர். (கல்வி அமைச்சின் இலங்கையின் நடுத்தர சகாப்த உட்படுத்தல் கண்பீட்டு ஆய்வு - 2009)

**கட்டாயக் கல்வியினால் இலங்கை அடைந்த அனுகூலங்கள்**

கட்டாயக்கல்வி தொடக்க காலத்திலேயே அதன் பயனை நாடு அனுபவிக்கத் தொடங்கியது. அந்தவகையில் 1930-களில் மதிப்பீட்டில் இவ்வாறு தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்ட கட்டாயக் கல்வி சட்டங்களால் இலங்கையில் 1920ஆம் ஆண்டிற்கும் 1930ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் 500 புதிய பாடசாலைகள் நிறுவப்பட்டன. பாடசாலையில் மாணவர் சேர்வு விகிதம் 1901இல் 98, 101 ஆக இருந்து 1930 இல் 539.745 ஆக உயர்ந்தது. மேலும் கட்டாயக்கல்வி புகுத்தப்பட்டதன்பின் 1901 ஆண்டில் 26.4 ஆகக்காணப்பட்ட எழுத்தறிவு வீதம் 1946 இல் 51.8 சதவிகிதம் ஆகவும் 2010 இல் 98 சதவீதத்திற்கு மேற்பட்டதாயும் காணப்படுகின்றது. பிற்பட்ட காலங்களில் மூன்றாம் உலகநாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் பன்மடங்கு கல்வி அறிவு வீதத்தில் உயர்ந்து காணப்பட்டதோடு வளர்ச்சியடைந்த நாடுகளோடு போட்டி போடக்கூடிய வகையில் அமைந்தது. அத்துடன் பெண் கல்விதொடர்பான முன்னேற்றம் கணிசமான அளவு காணப் பட்டது. இதனால் நாட்டின் எதிர்காலத்தில் பல முன்னேற்றகரமான அம்சங்கள் புகுந்தன. அந்தவகையில் கல்வி மாத்திரமின்றி சுகாதாரம், பொருளாதாரம், அரசியல் என உலகமயமாதலை துணிச்சலோடு இலங்கை எதிர்கொள்ள வழிசமைத்தது. கல்வி கற்றவர் சதவிகிதம், எழுத்தறிவு வீதம் என்பன பிரமிக்கத்தக்க அளவு உயர்ச்சியைக் காட்டின.

**(முற்றும்)**

# வெக்கமாக இருந்தது

(15 ஆம் பக்கம் பார்க்க)



பங்கரில் இருந்தவர்களோடு கனகு வின் ஒரே மகன் கஜானனும் இறந்து போக முழுக்குடும்பமும் மனைவி மகளுடன் இந்திய மருத்துவப் பிரிவின் தொண்டரால் காப்பாற்றப்பட்டு திரிகோணமலை சென்றுபோல காப்பாற்றப்பட்டு திரிகோணமலை சென்று பொலநறுவை ஆஸ்பத்திரி யில் காயம் மாற பல மாதங்களானது.

நெஞ்சத்தை ஊடறுத்து சென்ற "சாப்னெல்" துண்டால் தாக்கப்பட்ட கனகன் இறந்த செய்தி இதயத்தை நெருடி தகர்த்தது.

புனர்வாழ்வு கட்டாயங்களைக் கடந்து நோயாளியான கனகுவை வைத்தியசாலை இதயநோய் பிரிவில் சந்தித்ததுண்டு. அவன் என்னைப் போல் ஊருக்கு சென்று குடியேறவில்லை. வீடு முகமிழந்திருந்தது. உறவினர் வீட்டில் தஞ்சம். கோண்டாவில் பகுதியில் இருந்தான்.

காயத்தின் தாக்கம், மகனின் இழப்பு, மனவேதனை, பணப் பற்றாக்குறை, வைத்தியச் செலவு, தாயாரின் சுகவீனம், இயலாமையால் இடைக்கிடை அவவின் தொணதொணப்பு என்று எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து இதயநோயாளியாக்கி இருந்தது. இறுதிச்சடங்கில் கலந்திருந்த பொழுது ஐயர் வரத்தாமதமாகியது.

மீளாத்துயிலில் அவன் இருக்க மாளாதுயரத்தில் நான். நட்பு என்பது ஆழமானது. கள்ளங்கபடமற்ற சிறு வயதுக் கூட்டாளி. அடித்தால் அழுது, அணைத்தால் சிரித்துமகிழும் வயது உறவு.

ஐயர் வரவு தாமதிக்க சாவுக்கு வந்தவர்கள் சலிப்படையத் தொடங்கினர். திடீரென பின்னால் சலசலப்பு "ஐயா வாங்க வாங்க" என்று வரவேற்பு வேறு. ஐயா வணக்கம் வணக்கமென பல குரல்கள் ஒலித்தன. சாவீட்டில்...

திரும்பிப் பார்க்க, ஒரு வெள்ளை வேட்டிக் கூட்டம் வந்துகொண்டிருந்தது. இருந்தவர் கள் எழுந்து வந்தவர்க்கு அமர்ந்திருந்த கதிரைகளை விட்டு விட்டுக்கொடுத்தனர். அரசியல் வட்டாரமென அறிந்துகொண்டேன்.


என்னை தோழில் தட்டி எழுப்பிய நபர் "மாவட்ட எம்.பி எல்லோ வந்திருக்கிறார். தெரியாதோ... எழும்பும்" என்று உலுப்பினார். நானும் பாவமாய் ஏ்ழுந்து நின்றுகொண்டேன்.

அரசியல்வாதிகளிடமிருந்து எனக்கு ஆகப்போவது ஏதும் இல்லையென்றாலும் வந்தவர் எனக்கு தெரிந்தவராக இருந்தார். அங்கிருந்த பலர் வளர்த்த முகம்பார்த்த மாதிரி பார்த்த வண்ணமிருந்தனர்.

வந்தவர் உடன் வந்த அப்புக்காத்து நண்பருடன் ஆழமான பேச்சுவாக்கில் இருப்பதுபோல் காட்டிக் கொண்டார். நான் போய் பக்கத்து கதிரையில் அமர்ந்து கொண்டேன். அங்கிருந்த அந்த கதிரையில் மற்றவர்கள் (கூடவந்த பட்டாளம்) அமர தயங்கியதால்தான் அது வெறுமையாக இருந்திருக்க வேணுமென்று உணர்ந்தேன். எனக்கொன்றும் ஆகவேண்டி இருக்கவில்லை. என்றாலும் தெரிந்தவர்கள். அத்துடன் விபரணப்படம் ஒன்று தயாரிக்க உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்கு துணிந்துசென்று காட்சிகளுக்கு குரல்கொடுத்தவன் என்றவகையிலும் அந்த பட இறுவெட்டு பிரான்ஸ் நாட்டின் தலைப்பட்டினத்தில் காட்சிப் படுத்தியபொழுது என்னை அதில் கண்டதாக எனது உறவினர் இங்கு வந்தபொழுது தெரிவித்து இருந்ததும் ஒரு காரணம்.

ஐயர் வருவதற்கு முன்பதாக எனது முகத்துப் பக்கம் எம்.பி.யாரின் கவனத்தை திருப்ப பலமுறை முயற்சித்தும் தோற்றுப்போனேன் என்பதை மற்றவர்களுக்கு சொல்ல வெக்கமாக இருந்தது.

## புதிய ஆயரை வாழ்த்தி வரவேற்கின்றோம்



பேரருட் திரு. ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அவர்கள் யாழ்.மறை மாவட்ட ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார். அவர்தம் ஆயர் பணிசிறக்க வாழ்த்துகிறோம்.

புதிய ஆயர் அவர்கள் அமைதியின் வழமையாகத் திகழ்பவர். சிறந்த கல்விமான். ஏழை மக்களின் நிலை அறிந்தவர். நடுநிலையுடன் விடயங்களை நோக்கும் பண்புடையவர். இத்தகைய சிறப்புமிக்க ஒருவர் யாழ்.மறை மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டிருப்பது எல்லா வகையிலும் புதிய சூழ்நிலையை உருவாக்கும் என நம்பலாம்.

ஒரு குருவின் இதயம் இறைவனின் இதயத்தை ஒத்திருக்கும். அவரது தூயஅன்பு நிரம்பிய பொக்கிசமாகவும் இரக்கம் ஊற்றெடுக்கும். அமுதசுரபியாகவும், நீதி வழங்குவதில் நேர்மையானவராகவும் திகழ்வார். ஏனெனில் இறை பணியாளர்கள் எப்போதும் இறைவனுக்கு நெருக்கமானவர்கள். தூயஉள்ளங்கொண்டு, வாழ்வினால் இறைவனுக்கும் மனிதர்களுக்கும் ஏற்றவர்களாக வாழும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவதாரமாகத் திகழ்கின்றார்கள்.

எந்த மதத்தைச் சேர்ந்த குருவானாலும், நேர்கொண்ட பார்வையும், நிமிர்ந்த நடையும், எதற்கும் அஞ்சாத தன்மையும் உண்மையைப் பேசுபவர்களாகவும் இருக்கவேண்டும். காலநீரோட்டத்தில் சிக்குண்டு உண்மைக்கு புறம்பானவற்றை பேசுவதுதான், கொண்ட கொள்கைக்கு - மதத்திற்கு மாசு ஏற்படுத்துவதாக அமையும்.

பேரருட் திரு.ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அவர்களின் நியமனம் தமிழ் மக்களுக்கு இருள்நீங்கி, ஒளி பிறக்கச்செய்யும் காலமாக அமையும் எனக் கருதுகிறோம்.

**மக்களாம் மந்தையை மாண்புற வழிநடத்த**
**தக்க நேரத்தில் இறைவன் தந்த ஆயரே**
**அதிவணக்கத்திற்குரிய மேய்யப்பரே**
**ஆண்டவன் பாதம் தொட்டு வாழ்த்துகிறோம்.**

**மந்தை புகழ் மணக்கும் மாணிக்க மலராக**
**எங்கும் எதிலும் இறையொளியின் ஆயராக**
**பொங்கிடும் அன்பினில் தமிழர் மனமெலாம்**
**வென்று நின்று நிலைத்து நீடித்து வாழ்க!**







# தண்ணீரிலே தத்தளித்த தாயகத்து உடன்பிறப்புக்கள்



இந்தியத் திருநாட்டின் தென்பகுதியாக அமைந்துள்ள தமிழ்நாட்டில் வரலாறு காணாத மழை வெள்ளம் ஏற்பட்டுள்ளது. நூறு ஆண்டுகளில் இவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டதில்லை எனக் கூறப்படுகிறது. மாடிக் கட்டடங்களில் மக்கள் இருப்பதை தொலைக்காட்சிகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. சொல்லணாத் துயரத்தில் தவிக்கும் தமிழ் நாட்டு உறவுகளின் பரிதவிப்பு நெஞ்சை வெடிக்கச் செய்யும் காட்சியாக அமைகிறது.

இத்தகைய இயற்கைச் சீற்றம் காலநிலை மாற்றம்தந்துள்ள நன்கொடையாகும். விஞ்ஞான வளர்ச்சி இயற்கையை வெற்றி கொள்ளமுடியாது. சுனாமி, புவியதிர்வு, எரிமலை வெடிப்பு, அதிகரித்த மழை வீழ்ச்சி, இயற்கை வெப்பநிலை அதிகரிப்பு போன்றவை நிகழாமல் விஞ்ஞானத்தினால் தடுக்கமுடியுமா? வெப்பநிலை உயர்வைக் கட்டுப்படுத்த சர்வதேச மகாநாடுகள் நடைபெற்று வருகிறபோதிலும் உருப்படியான திசைநோக்கிய ஒன்றுபட்ட செயற்பாடு இல்லை. இதுதான் சர்வதேசத்தின் நிலையாகும்.

தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள, அமைக்கப்பட்டுவரும் மாடிக் கட்டடங்கள் நீர் ஓட்டத்தை தடுப்பதாகவும், நீர்வடியும் பாதைகளில் அனுமதியின்றிக் கட்டப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. இத்தகைய ஒரு சூழ்நிலைதான் யாழ்.குடாநாட்டிலும் நிலவுகிறது. வெள்ளம் ஓடும் வாய்க்கால்களை மூடி, வீடுகள் கட்டப்பட்டுள்ளன. வாய்க்கால்களில் மண் இட்டு மூடப்பட்டுமுள்ளன. அத்துடன் பாதை விஸ்தரிப்பினால் நீர் ஓடுவது தடைப்பட்டுள்ளது. சரியான வடிகால் அமைப்புக்கள் இல்லை. பழைய பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இருந்த வடிகால் அமைப்பு முறைதான் இன்றும் காணப்படுகிறது. புதிய வடிகால் அமைப்புத் திட்டம் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

தமிழ் நாட்டில் ஏற்பட்டிருப்பதுபோன்று ஒரு இயற்கை அனர்த்தம் எமது பகுதிகளில் ஏற்படுமாயின் நிலைமை எவ்வாறு அமையும் என்று சிந்திக்கவேண்டும். அனர்த்த முகாமைத்துவம் பற்றி வாய்கிழியப் பேசுபவர்கள் பேச்சுடன் நிறுத்தாமல் செயலில் ஈடுபடவேண்டும்.

தமிழ் நாட்டில் முப்படையினரும், கூடவே தொண்டு நிறுவனங்களும் துயர்துடைக்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றன. நடமாடும் மருத்துவச்சேவைகள் என்பன சிறப்பாகச் செயற்படுகின்றன. தமிழ் நாட்டு மக்களின் துயரில் பங்கு கொள்வதுதான் நாம் செய்யக்கூடியது. மக்களின் துயர் விரைவில் தீரவேண்டும். மழைவெள்ளத்தினால் மரணித்தவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

---

# யாழ். மண்ணில் வரலாற்றுச் சாதனை நிகழ்த்தியது நாவாந்துறை சென் மேரிஸ் அணி




கடுமையான சவால் களுக்கு மத்தியில் நியூ லைவன் யங் ஸ்ரார் அணியை சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றிகொண்டு வரலாற்று சாதனை படைத்தது. 'வடக்கின் வல்லவன்' நாவாந்துறை சென். மேரிஸ் அணி.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிரிவு -2 அணிகளுக்கான உதை பந்தாட்ட தொடரில் இறுதி ஆட்டத்தில் பலம்வாய்ந்த அணிகளான, கொழும்பு நியூ லைவன் யங் ஸ்ரார் அணி யம், 'வடக்கின் வல்லவன்' யாழ்.நாவாந்துறை சென் மேரிஸ் அணியும் யாழ். அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் புதன்கிழமை (25.11.2015) அன்று பெரும் திரளான ரசிகர்கள் மத்தியில் மோதிக் கொண்டனர்.

ஆட்டம் ஆரம்பித்து இரு அணிகளும் தங்களின் திறமைகளை காண்பித்து கோல் போடும் முயற்சியில் ஈடுபட்டனர். பல கோல்களை போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டனர். இருப்பினும் ஆட்டத்தில் 15 ஆவது நிமிடத்தில் சென் மேரிஸ் அணியின் வீரர் யூட் அதிரடி யான கோல் ஒன்றை போட்டார். நடுவரால் அது எல்லைதாண்டிய கோல் (off side) என நிராகரித்தார். முதல் பாதி நிறைவடைய இரு அணிகளும் எவ்வித கோல்களையும் போடவில்லை.

இரண்டாம் பாதி கட்டம் ஆரம்பித்தவேளை இரு அணிகளும் விறுவிறுப்பான கட்டத்தினை காண்பித்து பல பந்துகளை கோல் பரப்புக்குள் செலுத்தும்வேளை பின்கள வீரர்களினதும் கோல் காப்பாளர்களின் தடுப்பினாலும் முறியடிக்கப்பட்டது. மேரிஸ் அணியில் ஆதிக்கம் அதிகமாக காணப்பட்டது. கோல்களை போடும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டனர். போட்டியில் 80ஆவது நிமிடத்தில் சென் மேரிஸ் அணியின் முன்னாள் அணி தலைவர் போட்டியின் விதியை மீறியதால் நடுவரால் சிவப்பட்டை காட்டப்பட்டு மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். மேரிஸ் அணி நெருக்கடிக்குள்ளாக்கியது.

10 வீரர்களுடன் விளையாடிய மேரிஸ் அணி இறுதியில் போட்டி சம நிலையில் முடிவடைந்தது. தொடர்ந்து நடுவரால் பத்து நிமிடங்கள் கொண்ட இரு பகுதிகள் வழங்கப்பட்டது. ஆட்டம் சூடுபிடிக்கப்பட்ட போது 9 ஆவது நிமிடத்தில் யங் ஸ்ரார் அணி வீரர் கோல் ஒன்றைப் போட்டார். இரண்டாம் பகுதி ஆரம்பித்த வேளை ஆட்டம் மேலும் மேலும் விறுவிறுப்பை தொடர்ந்தது. சென் மேரிஸ் அணி தோல்வியின் விழிப்பை கொண்டிருந்த வேளை, தனது அணிக்கு புத்துயிர் கொடுத்தார் நிதர்சன். போட்டி நிறைவடைய இரண்டு நிமிடங்கள் இருக்கையில் அபாரமான கோலைப் போட்டு ஆட்டத்தினை 1 : 1 என்ற கோல் அடிப்படையில் சமநிலையாக்கினார். வெற்றியை தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதையில் 5 : 4 என்ற கோல் கணக்கில் தேசிய மட்ட சம்பியனாகி சாதனை படைத்தது நாவாந்துறை சென் மேரிஸ் அணி.

தொடர்ந்து பரிசளிப்பில் வெற்றிபெற்ற அணிக்கு 2 இலட்சம் ரூபா பணப்பரிசும் இரண்டாம் அணிக்கு 1 இலட்சம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

# வாரமொரு காரம்

## ஏமாற்றம் தருமா? இந்த மாற்றம்



## இதுக்குத் தானா ஆசைப்பட்டோம் எதுக்கு வீணா தேசிய அரசைக் காதலிச்சோம்

தேசிய அரசின் நகர்வுகளில் இன்று பரபரப்பாக பேசப்படும் விடயம் வரவு, செலவுத் திட்டத்துடன் கொண்டுவரப்பட்ட சில மாற்றங்களேயாகும். நாட்டின் திறைசேரி நொந்தும் வெந்தும் போயிருக்கும் தற்கால சூழலில் அதை மீட்டெடுக்க அரசு பல வழிகளில் முயற்சி செய்யவேண்டியுள்ளது. இதனால் மொத்தத் தேசிய செலவீனங்களில் உள்ள சேதாரங்களைத் தேடிக் கண்டறியவும் அதில் மாற்றத்தைக் கொண்டுவரவும் முயற்சிக்கின்றது. இந்த மாற்றம் மக்களிற்கு ஏமாற்றத்தைத் தருமா...? என்பதுதான் இன்று எழுந்துள்ள பிரச்சினையாகும்.

குறிப்பாக, பாடசாலை மாணவர்களின் சீருடையில் கொண்டுவரப்பட்ட மாற்றத்தினால் அரசிற்கு ஏராளமான இலாபம் கிடைத்துள்ளதுடன் பலரது இலஞ்ச ஊழல்களிற்கும் முடிவுகட்டப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு கூறுகின்றது. ஆனால் அதன் பின்னணியில் பல சிக்கல்களும் ஏமாற்றங்களும் இடம்பெறப்போகின்றன எனவும் விமர்சிக்கப்படுகின்றது. வருடந்தோறும் பாட-சாலை மாணவர்களிற்கு வழங்கும் இலவச சீருடைத்துணிகளுக்கு பதிலாக தேவையான சீருடை துணிகளை கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக 'பண வவுச்சர்கள்' வழங்குவதற்கான திட்டமொன்றை கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்தியுள்ளது. இதில் வலய ரீதியாக 'கோட்டேசன்' எடுத்து தரமானதும் மலிவானதுமான மொத்த விநியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்படுவர். இதில் தரமான துணிக்கு மலிவான தொகையை கோட்டேசனாகக் கொடுத்துவிட்டு தரமற்ற துணிகளை மாணவர்களிற்கு தனிப்பட்டரீதியில் விநியோகிக்க சந்தர்ப்பம் உள்ளன. இதனால் ஏமாற்றப்படப்போவது அப்பாவிப் பொதுமாணவர்களேயாகும். மாணவர்களிற்கோ அல்லது இத்துறைசாராப் பெற்றோர்களிற்கோ துணியின் தரத்தை இனம்பிரிக்கத் தெரியாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மோசடி செய்ய இத்திட்டத்தில் இடமுண்டு.

இது ஒருபுறமிருக்க, இதுவரை பதவிநிலை உத்தியோகஸ்தர்களிற்கு தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திர சலுகை வழங்கப்பட்டுவந்தது. இதனால் அரசுக்கு பெருந்தொகையில் நட்டம் ஏற்பட்டுவருவதைக் கருத்தில்கொண்டு இம்முறைமையானது ரத்துசெய்யப்பட்டு மருத்துவர்களிற்கு இதற்குப் பதிலீடாக பத்து இலட்சம் ரூபாவை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பயனாளிகள் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்று அதன் தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன. சாதாரண பதவியில் உள்ள நிர்வாக உத்தியோகஸ்தர்களிற்கே வாகனவசதியுள்ளது. டாக்டர் என்ற உயர்படிப்பு அந்தஸ்துக்கு எந்த வாகன வசதியும் இல்லாதபோதும்கூட தீர்வையற்ற வாகனச்சலுகை மாத்திரமே இதற்குக் கண்துடைப்பாக இதுவரை இருந்துவந்தது. தற்போது அதிலும் மாற்றத்தைக் கொண்டுவந்து அரசு எமக்கு ஏமாற்றத்தை விளைவிக்கின்றது என குற்றஞ்சாட்டுகின்றனர் வைத்தியர்கள்.

அடுத்து ஒய்வூதியமும் இல்லாத தனியார் ஊழியர்களிற்கு தஞ்சமாக இதுவரை இருந்துவந்தது ஊழியர் சேமலாப நிதி மாத்திரமேயாகும். இதிலும் தற்போது தேசிய அரசு கைவைக்க ஆரம்பித்துவிட்டது என மறுதுருவத்தில் அவர்கள் கூச்சலிடுகின்றனர். E.P.F – E.T.F எனும் இரு தொகைகளையும் ஒன்றாக்கும் திட்டத்தை தேசிய அரசு முன்வைத்துள்ளது. இது பாவப்பட்ட அப்பாவித் தனியார் ஊழியர்களை மேலும் புதைகுழியில் தள்ளும் செயற்பாடு என விமர்சிக்கப்படுகின்றது.

அடுத்து நான்கு சில் வாகனங்களிற்கு புகைப் பரிசோதனைக்காக 5000 ரூபா அறவிடுதலானது ஆளைவிழுங்கும் செயற்பாடு என தனியார் பஸ் உரிமையாளர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இவ்வாறாக பலவிமர்சனங்கள் வரவு, செலவுத் திட்டத்துடன் வாசலுக்கு வந்துள்ளன. இதற்காகவா தேசிய அரசை ஆதரித்தோம், இதுவா நல்லாட்சியரசு, இதுக்குத்தானா ஆசைப்பட்டோம் எதுக்கு வீணா இவ்வரசைக் காதலிச்சோம் எனும் நிலையை தேசிய அரசின் வரவு, செலவுத் திட்டம் கொண்டு வந்துவிட்டது.

# இந்தவாரம் உங்கள் பலன்

(10.12.2015 தொடக்கம் 16.12.2015 வரை)

### மேடம்

சுபகாரிய சம்பந்தமாக வடதிசையில் இருந்து நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் சற்றுக் குறையும். வேலையில்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் வந்துசேரும் காலமாகும். புதிய வீடு மாற்றம் செய்வதற்கான முயற்சிகளில் நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவிகள் கிடைக்கும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் பிரச்சினைகளை விலைக்கு வாங்காதீர்கள். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### இடபம்

நீண்டகாலமாகத் தடைப்பட்டு வந்துள்ள குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர வாய்ப்பு உள்ள காலமாகும். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். வீடு, வாகனங்களை பழுதுபார்ப்பதன் மூலமாக புதிய பொருட்செலவுகள் வந்துசேரலாம். புதிய நண்பர்களிடம் சற்று எச்சரிக்கையுடன் பேசிப்பழகுதல் நல்லது. விளையாட்டுத்துறை சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுக்களை பெறுவார்கள் பணப்புழக்கத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் மாறி நல்ல முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் நடைபெற வேண்டிய சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்வாங்குவீர்கள். வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் காவல் துறையினர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். கண், காதுகளில் சிற்சில உபாதைகள் வந்துபோகலாம்.

### மிதுனம்

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு உத்தியோக உயர்வுடன்கூடிய பணி மாற்றங்கள் ஏற்படலாம். தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காகப் புதிய பெண் மருத்துவர்களின் உதவி-களை நாடுவதன்மூலம் நற்பலன் அடைவீர்கள். அண்டை அயல்வீட்டுக்காரர்களுடன் மிகக் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. குடும்பத்தில் இதுவரையில் ஏற்பட்டுவந்துள்ள மருத்துவச் செலவுகள் குறையும். வெகுகாலமாகப் பிரிந்துபோன கணவன் - மனைவி இருவரும் ஒன்றுசேரும் காலமாகும். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய தொழில் ஆரம்பம் செய்வதற்கான முயற்சிகளில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். வெகுகாலமாக காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேர வாய்ப்பு உள்ளது.

### கடகம்

சமுதாய வளர்ச்சிக்கான விசயங்களில் ஈடுபடும்போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. வாகனங்கள் மற்றும் மின்சார பணிகளில் ஈடுபடுவோர்கள் மிகக் கவன-முடன் இருக்கவும். பெண் சம்பந்தமான காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது. மற்றவர்களை நம்பிப் புதிய கடன்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் துலங்கும். பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன்வாங்குவீர்கள். பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் சற்று குறைந்து காணப்படும். உற்றார், உறவினர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் பொருட்செலவுகள் வந்துசேரும். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

### சிங்கம்

தந்தை - மகன் உறவுகளில் இதுவரையில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து ஒற்றுமையாய் இருப்பார்கள். வீடு வாகனங்களைப் புதுப்பித்தலுக்காகப் புதிய கடன்வாங்குவதற்கு முயற்சிகளைச் செய்வீர்கள். அண்டை அயலார்களுடன் கவனமாகப் பேசிப் பழகவும். பிள்ளைகளுக்கு மருத்துவச் செலவுகள் உண்டாகும். நாட்பட்ட விசா சம்பந்தமான பிரச்சினைகள் தீருவதற்கான வாய்ப்புகள் உள்ள காலமாகும். பழைய நண்பர்களின் சந்திப்பால் ஒரு சிலருக்கு ஆதாயம் உண்டாகும். உடம்பில் நரம்பு மற்றும் எலும்பு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல்வர இருப்பதால் எந்த விசயத்திலும் மிகவும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது.

### கன்னி

தந்தை - மகன் உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து ஒற்றுமையுடன் இருப்பார்கள். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். வெகுநாட்களாக வராத கடன்கொடுத்துள்ள பணம் திரும்பக்கிடைக்கும். பங்காளியுடன்சேர்ந்த புதிய கூட்டுத்தொழில் செய்வதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண்வம்புகளை விலைக்கு வாங்காதீர்கள். வெளிநாடு செல்லுதல் போன்ற விசயங்களில் வேற்று மதத்தவரால் ஆதாயம் அடைவீர்கள். உல்லாசப் பயணங்கள் செய்வோர்கள் குழந்தைகளை எச்சரிக்கையுடன் பார்த்துக்கொள்வது நல்லதாகும். திருமணம் போன்ற சுபகாரிய சம்பந்தமான முயற்சிகளில் சில தடைகள் வந்துசேரும்.

### துலாம்

வங்கி உதவிகளின்மூலம் புதிய வாகனங்களை வாங்குவதற்கு முயற்சிகளை செய்வீர்கள். குலதெய்வ ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு மனநிறைவடைவீர்கள். வங்கிகளின் மூலமாக நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த பணம் கிடைக்க இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். தாய் உடல்நிலை பாதிப்பால் மருத்துவச்செலவுகள் உண்டாகலாம். வீடு மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்வதற்கு வாய்ப்புகள் உள்ளது. கால்களில் கவனம் தேவை. புதிய பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்பட்டு அவர்களால் எதிர்பாராத சில ஆதாயங்களை அடைவீர்கள். நண்பர்களால் வீண் பிரச்சினைகள் வர இருப்பதால் மிகக் கவனமுடன் இருக்கவும். உற்றார், உறவினர்களின் வரவுகளால் நன்மை அடைவீர்கள்.

### விருச்சிகம்

தாயின் உடல்நிலை பாதிப்புக்களால் சிற்சில மருத்துவச்செலவுகள் வந்துசேரும். நீண்டகாலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் ஆகியன திரும்பக் கை வந்துசேரும். தொலைதூரப் பயணங்களால் எதிர்பார்த்த காரியம் நிறைவேறும். அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்துசேரும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். காதல் விசயங்களில் நண்பர்களின் உதவியால் நல்ல செய்திகளைப் பெறுவீர்கள். மாணவர்கள் கல்வியில் சில தடைகள் வர இருப்பதால் கவனமுடன் சென்றுவரவும். நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதற்காகப் போட்ட திட்டங்களில் வெற்றிபெறுவீர்கள்.

### தனுசு

மற்றவர்களின் விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்கவேண்டாம். பொருளாதாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் மிக சிரமத்தின் பேரில் சரிசெய்வீர்கள். பிள்ளைகளால் சிற்சில தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பெயர், புகழ் அடைவீர்கள். நண்பர்கள் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். கண்களில் மிகக் கவனமுடன் இருப்பது நல்லது. குடும்பத்தில் தடைப்பட்டுவந்த சுபகாரியங்களை நடத்துவதற்கான புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றிபெறுவீர்கள். குழந்தைகளின் உடல்நிலையில் மிகவும் கவனமுடன் இருக்கவும். கணவன், மனைவி உறவுகளில் வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமையுடன் காணப்படுவார்கள்.

### மகரம்

பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி சற்று முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். உடல்நிலையில் வயிறு மற்றும் மூல சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். புதிய தொழில் ஆரம்பம் செய்வதற்காக இதுவரையில் இருந்த நெருக்கடிகள் மாறி முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். விளையாட்டுத் துறை சார்ந்தவர்கள் சற்று கவனமுடன் இருப்பது நல்லது. புதிய வீடு நிலங்களை வாங்குவதற்காக வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த பணம் கைக்கு வந்துசேரும். வாகனத்தொழில் செய்வோர்கள், கலைத்துறையை சார்ந்தவர்கள், வியாபாரிகள், சினிமா மற்றும் நாடகத்துறை சார்ந்த நடிகர்கள் ஆகியோர்கள் நற்பலன் அடைவீர்கள்.

### கும்பம்

வெகுகாலமாக விட்டுப்போன பழைய உறவினர்களுடன் தொடர்புகள் ஏற்படும். காணாமற்போன பொருட்கள் காவல்துறையினர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும். உடல்நிலையில் முதுகுமூலம் போன்ற தொல்லைகள் வந்துபோகும். சகோதர சகோதரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்கள் வாங்குவதற்கு முயற்சிப்பீர்கள். வெளிநாடு சென்று வருவதற்கான முயற்சிகளில் சம்பந்தம் இல்லாத நபர்களின் உதவிகள் கிடைக்கும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்க இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மீனம்

மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பாராத சில தடைகள் வந்துபோக வாய்ப்பு உள்ளதால் மிக எச்சரிக்கையுடன் பயின்றுவருதல் நல்லது. எதிர்பாராத வரவுகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் சில ஆதாயங்களை அடைவீர்கள். நீண்டகாலமாகப் பிரச்சினைகளில் இருந்துவந்து பூர்வீகச் சொத்துக்கள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் கைக்கு வந்துசேரும். நீண்டகாலமாக வராமல் இருந்த பணம் மற்றும் பொருட்கள் மிகுந்த சிரமத்தின்பேரில் வந்துசேரும் காலமாகும். குலதெய்வ ஆலயங்களை திருத்திக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள். நீங்கள் எதிர்பார்த்திருந்த காரியங்கள் நிறைவேறுவதற்கு வாய்ப்புகள் உள்ளது.




## வீர(ர்) சாகசம்

இந்திய எல்லைக் காப்பு படையின் 50 ஆவது ஆண்டு நிறைவு அண்மையில் கொண்டாடப்பட்டது. இதில் இப்படைப் பிரிவை சேர்ந்த வீரர்கள் மோட்டார் சைக்கிள் சாகசம் புரிந்தனர்.

## நடனப் பயிற்சி

பலஸ்தீன சிறுமிகள் காஸாவில் உள்ள சிறுவர் நிலையம் ஒன்றில் பாலே நடன வகுப்பில் கலந்துகொண்டு பயிற்சி எடுத்தனர்.



## விழிப்பூட்டல் பிரசாரம்

பிலிப்பைன்ஸ் தலைநகர் மனிலாவில் எயிட்ஸ் விழிப்பூட்டல் பிரசாரத்தில் திருநங்கைகள் மிகுந்த பேரார்வத்தோடு ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.



## நரகமாகும் மாநகரம்...

## தேசிய உதைபந்தாட்ட தொடரில் யாழ்.மண்ணில் வரலாற்றுச் சாதனை நிகழ்த்தியது நாவாந்துறை சென் மேரிஸ் அணி






இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி எண்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் டிசம்பர் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.